# மொழிப்பற்று

வரதராசன்

முதல் பதிப்பு : ஜனவரி 1956

உரிமை ஆசிரியர்க்கு

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை - 14.

## குறிப்பு

இந்தக் கட்டுரைகள் சென்ற சில ஆண்டுகளில் அவ்வப்போது பல இதழ்களில் வெளிவந்தவை. அந்த இதழாசிரியர்களின் உதவியை நன்றியுடன் போற்றி, இத் தொகுப்பை வெளியிடுகிறேன்.

மு. வ.

[இதன் வருவாய் முழுதும் திரு.வி.க. பள்ளி நிதிக்கு உரியது.]

*


| | | |
|---|---|---|
| உண்மை இதுதான் | ... | 5 |
| இருவகைக் கேடுகள் | ... | 13 |
| தியாகம் தேவை | ... | 25 |
| மொழிச்சுவை | ... | 35 |
| எதிர்பாராதவை | ... | 43 |
| அடிமை மனப்பான்மை | ... | 49 |
| உண்மை ஒதுங்குகிறது | ... | 53 |
| முடியுமா ? | ... | 59 |
| தாயா ? பேயா ? | ... | 63 |
| தமிழுக்கு முதல் இடம் | ... | 67 |
| தாராள மனப்பான்மை | ... | 73 |
| பயனற்ற உழைப்பு | ... | 84 |
| ஏன் இந்தத் தயக்கம் ? | ... | 92 |
| அன்னையின் தாயர் | ... | 104 |
| வானொலியில் தமிழிசை | ... | 113 |
| புறக்கணிப்பு | ... | 119 |
| கண் போய்விடும் | ... | 125 |
| கோயிலில் நாத்திகம் | ... | 131 |


*

# உண்மை இதுதான்

ஒரு முறை சித்தூரை அடுத்த ஒரு சிற்றூர்க்குச் சென்று நண்பர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்தேன். நண்பரோடு இரண்டு நாள் அளவளாவிக் கொண்டிருந்த பிறகு மூன்ரும் நாள் அவர் படித்த கல்லூரியைப் பற்றிய பேச்சு வந்தது. அவர் பச்சையப்பன் கல்லூரியில் படித்தவர் என்று அறிந்ததும் அதைப் பற்றிக் கேட்டறிவதில் எனக்கு ஆர்வம் மிகுந்தது. பச்சையப்பன் கல்லூரியின் பெருமையைப் பற்றி அவர் பேசிக்கொண்டே வந்து அவர் படித்த காலத்தில் இருந்த ஆசிரியர்களைப் பற்றியும் நினைவில் இருந்தவற்றைச் சொன்ஞர். அவர் பி. ஏ. படித்துப் பட்டம் பெற்றவர். இண்டர்மீடியட் வகுப்பிலும் பி. ஏ. வகுப்பிலும் ஆங்கிலம் கற்பித்த ஆசிரியர்களைப் பற்றிக் கூறிஞர். அவருடைய விருப்பப் பாடமாகிய கணக்குக் கற்பித்த ஆசிரியர்களைக் குறிப்பிட்டுப் புகழ்ந்தார். விஞ்ஞான ஆசிரியர்களைப் பற்றிச் சில குறைகளை எடுத்துச் சுட்டிஞர். கல்லூரித் தலைவரைப் பற்றியும் குற்றமும் குணமுமாகச் சில சொன்ஞர். இவ்வாறு முறையாக எல்லாரைப்

பற்றியும் சொல்லியும் மொழியாசிரியரைப் பற்றி ஒன்றும் கூறவில்லையே என்று திகைத்து அவரே கூறுவார் என எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அதற்குள் அவர் பச்சையப்பன் கல்லூரிக்கு அடுத்த உணவு விடுதியைப் பற்றிப் பேச்சை மாற்றத் தொடங்கினர். உடனே நான் என் ஐயத்தைப் போக்கிக்கொள்ள விரைந்தேன்.

"ஆமாங்க; எல்லாரைப் பற்றியும் சொன்னீர்களே! மொழியாசிரியரைப் பற்றி ஒன்றுமே பேசாமல் விட்டுவிட்டீர்களே! நீங்கள் பி. ஏ. படித்தவர் ஆகையால், இண்டர்மீடியட், பி. ஏ. இரண்டிலும் மொழிப்பாடம் விடாமல் இருந்திருக்குமே" என்று கேட்டேன்.

"அதுவா? எனக்கு அவர்களைப் பற்றி அக்கறையே இருப்பதில்லை" என்ருர் நண்பர்.

"என்ன இப்படிச் சொல்கின்றீர்களே! இந்தக் காலத்திலா இப்படிப் பேசுவது? உங்களுக்கு இருக்கும் தாய்மொழிப் பற்றுக்கு நீங்கள் இப்படிப் பேசலாமா? அதிலும் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் படித்து விட்டுத் தமிழாசிரியர்களைப் பற்றி மௌனமாக இருப்பதா?" என்று என் ஆத்திரத்தைக் கொட்டினேன்.

"சொன்னுல் வெட்கக் கேடு. நான் தமிழாசிரியர்களிடம் படித்திருந்தால்தானே அவர்களைப் பற்றிச் சொல்ல முடியும்" என்ருர் நண்பர்.

இதைக் கேட்டதும் என்னுடைய திகைப்பு முன்னிலும் மிகுதியாயிற்று. உடனே "நீங்கள் தமிழைத் தானே இரண்டாம் மொழியாக எடுத்துப் படித்தீர்கள்?" என்று கேட்டேன்.

"இல்லை; தெலுங்கை."

"தமிழ்தானே உங்கள் தாய்மொழி?"

"ஆமாம்."

"பின் ஏன் தமிழை விட்டுத் தெலுங்கு படித்தீர்கள் ?"

"வேறு வழி இல்லாததால்."

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே !"

"இதுதான் எங்கள் சொந்தஊர். இந்த ஊரில் ஐந்தாம் வகுப்பு வரையிலும் படிக்கலாம். அதற்கு மேற்பட்டுத்தான் சித்தூருக்குப் போய்ப் படிக்கவேண்டும். சித்தூரில் தமிழ் படிக்க வழி உண்டு. ஆனால் இந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வரையில் படிக்க வேண்டுமே. இதில் தமிழ் எழுத்துச் சொல்லிக் கொடுக்க வழியே இல்லை. படித்தால் தெலுங்குதான் படிக்கவேண்டும். இல்லையானால் வீட்டோடு இருக்க வேண்டும். தமிழ் பேசுகிறவர்கள் இந்த ஊரில் மூன்றில் இரு பங்கு. அத்தனை பேரும் பேசுவது தமிழ்; படிப்பது தெலுங்கு. ஆகையால் நானும் தெலுங்கு படித்தேன். ஐந்தாவது முடித்த பிறகு சித்தூர்க்குப் போனபோது, அங்கும் வேறு வழி இல்லாமல், தமிழ் தெரியாதபடியால், ஆறுவதில் சேர்ந்ததும் தெலுங்கே படித்தேன். சித்தூரில் பத்தாவது வரையில் தெலுங்கு படித்த பிறகு சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்த பிறகும் தெலுங்கே மொழிப் பாடமாக எடுத்துத் தெலுங்கு ஆசிரியர்களிடம் படித்தேன். அவர்கள்மேல் குறை சொல்லவில்லை. எனக்கு ஏனோ அந்தப் பாடத்தில் அக்கறை வரவேயில்லை. அதனால்அந்த ஆசிரியர்களிடத்திலும் அக்கறை இல்லை. தலைவிதியே என்று வகுப்புகளில் உட்கார்ந்து காலம் கழித்தேன். மார்க்கும் குறைவாகவே வந்தது. எப்படியோ படித்துப் பட்டம் பெற்றுவிட்டேன். இதுதான் கதை" என்றார்.

நான் பெருமூச்சு விட்டேன்.

* * * *

என் தந்தையார்க்குக் கூர்மையான அறிவு உண்டு என்றும், கணக்கில் மிகவல்லவர் என்றும், எல்லாரும் காகிதமும் பென்சிலும் எடுத்துப்போடும் வியாபாரக் கணக்குகளை அவர் வாயாலேயே விரைவில் போட்டு முடிப்பார் என்றும் ஊரில் கிழவர்களும் பேசிக்கொள் வார்கள். "உங்கள் அப்பா இப்படி, அப்படி, இவ் வளவு கெட்டிக்காரர்" என்று அவர்கள் சொல்லும் போது என் உள்ளம் பூரிக்கும்.

ஆனால் எனக்கு ஒரு பெரிய குறை உண்டு. நான் வெளியூர்க்குச் சென்ற பிறகு அவர் எழுதிய கடிதங் களைப் படிக்கும்போதெல்லாம், என் தந்தையாரைப் போல் தமிழ்க் கொலை செய்கின்றவர் எவரும் இல்லை என்று எண்ணி வருந்துவேன். 'ருமசாமி, நன்னாக, இருக்கிறார்கள், வந்து போநார், என்று சொன்னார் என் றெல்லாம் அவர் கடிதங்களில் எழுதியவற்றைக் கண்டு ஆத்திரமும் கொண்டேன். "அந்தக் காலத் துப் படிப்பு அவ்வளவுதான் போலும்" என்று ஒரு வாறு ஆத்திரம் அடங்குவேன்.

ஒரு விடுமுறையின்போது என் மகனை அழைத் துக்கொண்டு ஊர்க்குப் போயிருந்தேன். என் தந்தை யார் தம் பேரனோடு ஒருநாள் திண்ணையில் பேசிக் கொண்டிருந்தார். அவனை வாய்பாடு கேட்டு மனக் கணக்குக் கேட்டார். என் பையன் விடை சொல்ல முடியாமல் திகைத்தான். உடனே பாட்டனார் தம் காலத்துப் படிப்பின் பெருமையைப் புகழ்ந்து சொல்லி, "இந்தக் காலத்துப் படிப்பே இவ்வளவு தான். அடிப்படை இல்லாத படிப்பு" என்றார். என் மகனுடைய முகத்தில் சுருக்கம் கண்டேன். இதுதான் நல்ல சமயம் என்று நான் மெல்ல அவரோடு பேசத் தொடங்கினேன். "கணக்கு இருக்கட்டும்; தமிழ் எழுதச் சொல்லிப் பாருங்கள். உங்களைவிட

நன்ருக எழுத்துப் பிழை இல்லாமல் எழுதுவான்" என்றேன்.

அப்போதுதான் அவர் வாயிலிருந்து உண்மை வெளிப்பட்டு என் ஐயம் தீர்ந்தது. அடங்கியிருந்த ஆத்திரமும் அழிந்தது. "ஆமாம்; இவன் என்னை விடத் தமிழ் நன்ருக எழுதலாம். ஊமையோடு வாயாடி போட்டிக்குப் போனது போல்தான் இது. நான் பள்ளிக்கூடத்தில் தமிழே படித்ததில்லை. நானு கப் பார்த்துப் பார்த்துத் தமிழ் எழுத்துக்களை வீட்டில் கற்றுக்கொண்டேன். வாத்தியாரிடம் படித்த தெல்லாம் தெலுங்குதான். அந்தக் காலத்தில் இந்த ஊரில் தெலுங்கு வாத்தியார் உண்டு; தெலுங்குப் பள்ளிக்கூடம்தான் உண்டு. தெலுங்கில் எழுதிஞல் தான் பத்திரம் ரிஜிஸ்டர் ஆகும். தெலுங்கில் விண்ணப்பம் எழுதிஞல்தான் தாசில்தாருக்குப் போய்ச் சேரும். அதஞல் இந்த ஊரில் அப்போது எல்லாரும் தெலுங்குதான் படித்தார்கள்" என்ருர்.

* * * *

சில ஆண்டுகளுக்கு முன் திருப்பதிக்குச் சென்ற போது என் உறவினர் ஒருவர் அங்கு வேலையாகச் சென்றிருந்தவர் ஒரு குறை சொன்ஞர். அவருடைய பையனுக்கு வயது ஐந்து ஆகிவிட்டது என்றும், அவனைத் தொடக்கப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலாம் என்ருல் எந்தப் பள்ளிக்கூடத்திலும் தமிழ் எழுத்துக் கற்றுக் கொடுப்பதில்லை என்றும் சொன்ஞர். அன்று மாலை திருப்பதி முனிசிபல் கவுன்சிலர் ஒருவரோடு பேசிக்கொண் டிருந்தபோது இதைப் பற்றிக் கேட்டேன். அவரால் சில உண்மைகள் அறிந்தேன். அவரும் தமிழ் பேசும் கவுன்சிலர்தான். அவரைப் போல் தமிழர் ஆறுபேர் நகர்மன்றத்தில் உறுப்பினராக இருப்பதாகக் கூறிஞர். ஊரில் உள்ள மக்களில் கால்

பகுதிக்கு மேற்பட்டவர் தமிழராம். தொடக்கப் பள்ளிகள் பல இருக்கின்றனவாம். ஆனால் ஒன்றிலும் தமிழ் கற்பிப்பதில்லையாம். உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் மட்டும் தமிழ் கற்க இடம் உண்டு. தமிழ் எழுத்துக் கற்கத் தொடங்க வேண்டுமானால் தனியே நடத்தும் திண்ணைப் பள்ளிக்கூடங்களே புக லிடமாம். காரணம் கேட்டால் அந்த ஜில்லாவின் நடவடிக்கை, ஆட்சி எல்லாம் தெலுங்கில் நடைபெறுவ தால் தமிழ் தேவைப் படுவதில்லை என்றார்.

*   *   *   *

தமிழும் தெலுங்குமாகக் கலந்துள்ள பகுதிகளில் தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் படிக்க வழி இல்லா மற் போயிற்று.

காரணம் என்ன? தெலுங்கு அதிகாரிகள் தம் ஆட்சியின்போது அங்கெல்லாம் தெலுங்கு மட்டுமே விளங்குமாறு செய்தனர். அவர்கள் தாய்மொழிப் பற்று மிகுந்தவர்கள். தமிழர்கள் கடமையுணர்ச்சி குறைந்தவர்கள்; அதை வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தனர். அதனால் தமிழ் நாட்டின் எல்லை சுருங்கிற்று. சித்தூர் மாவட்டத்தில் பெருந் தொகை யான மக்கள் தமிழ் பேசுவோராக இருந்தாலும், மாவட்ட அரசியல்மொழி தெலுங்கு ஆயிற்று.

தமிழ் மக்களுக்குத் தாய்மொழியைப் பற்றி அவ் வளவாகக் கவலை இருப்பதில்லை. பொதுவாழ்க்கைக்கு வேண்டிய அரசியல் மொழியைப் பற்றியே அவர்கள் எப்போதும் கவலை கொள்வார்கள். அதனால் அந்த மாவட்ட அரசியல் மொழியாகிய தெலுங்கைக் கற் பதை இயற்கையாகக் கொண்டுவிட்டார்கள். தாய் மொழி வளமானதாக இருந்தாலும், தொன்றுதொட்டு வந்த பெருமையுடையதாக இருந்தாலும், வேறு என்ன சிறப்புப் பெற்றிருந்தாலும் தமிழ் மக்களுக்

குக் கவலை இல்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் பொது வாழ்க்கைக்கு, அரசியல் வாழ்க்கைக்கு உரிய மொழியே ஆகும்.

அரசியல் மொழியே மக்கள் கற்கும் மொழி யாகும் என்பது ஒரு மாவட்டத்தில் காணும் உண்மை மட்டும் அல்ல; உலகெங்கும் காணும் உண்மை யாகும். தெலுங்கு அரசியல் தலைவர்கள் இந்த உண்மையை நன்கு உணர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே கடமையுணர்ச்சியோடு நடந்துகொண்டார்கள்.

தமிழ் நாட்டில் ஒரு தலைமுறைக்கு முன் தமிழைக் கற்காமல், தமிழ் எழுதத் தெரியாமல் தமிழ் பேசத் தெரியாமல் உயர்நிலையில் இருந்த தமிழர் எத்தனை பேர்! அவர்கள் ஏன் தமிழ் கற்கவில்லை? ஏன் தமிழ்த் தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமல் ஆங்கிலக் கான்வெண்ட் பள்ளிகளுக்குச் சென்று கற்றார்கள்? பலர் இரண்டாம் மொழியாகிய தமிழ் வேண்டாம் என விதிவிலக்குப் பெற்று ஆங்கிலம் மட்டுமே கற்று முன்னேறியது ஏன்? பழைய விடை தான்; தமிழ் இந்த நாட்டின் அரசியல் மொழி அல்ல; ஆங்கிலமே அரசியல் மொழி. ஆங்கிலம் கற்றால் போதும் என்பதுதான் அவர்களின் போக்கிற்குக் காரணம்.

1940-ல் எச். ஜி. வெல்ஸ் 'நான் எதிர்நோக்குவன (My Anticipations) என்ற நூல் எழுதியபோது பிரஞ்சு மொழியே உலக மொழியாக விளங்கிவிடும் என்று எழுதினார். அவருடைய வாழ்நாளில் அது பொய் யாகிவிட்டதைக் கண்டார். ஏன் பொய்த்தது? ஐரோப் பிய அரசியலில் பிரஞ்சுக்காரர் செல்வாக்குப் பெறக் கூடும் என்றும், அதன் வாயிலாக உலக அரசியலிலும் செல்வாக்குப் பெறக்கூடும் என்றும் அவர் எதிர்

பார்த்தார். அவர் எதிர்பார்த்தவாறு பிரஞ்சுக்காரர் செல்வாக்குப் பெறவில்லை. அதனால் உலகில் பல நாடுகளைக் கட்டியாளும் செல்வாக்குப் பெற்ற ஆங்கிலேயருடைய ஆங்கிலமொழியே உலக அரசியல் மொழியாக வளர்ந்தது; இன்று உலக மொழியாக விளங்குகின்றது.

உண்மை இதுதான்; இதை யாரும் மறைத்துப் பயன் இல்லை. தமிழ் பலவளம் படைத்துப் பலமொழிக்கும் தாயாகும் பெருமையும் பெற்றுத் தொன்மைச் சிறப்புடையதாய் விளங்குவதாகப் பெருமை கொள்ளலாம். அதனால் அது வாழ முடியாது. மொழியின் உயிர் புலவரிடம் இல்லை; பொதுமக்களின் உள்ளத்தில்தான் உள்ளது. மக்களின் வாழ்க்கை அரசியலை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் எந்த மொழி அரசியல் மொழியாக விளங்குமோ அந்த மொழிதான் மக்கள் மொழியாக விளங்கும்; நேற்றுத் தோன்றிய கொச்சை மொழியாக இருந்தாலும் அரசியல் மொழியானால் அது ஓங்கி வாழமுடியும். உலகம் தோன்றிய நாளில் தோன்றிய பண்பட்ட மொழியாக இருந்தாலும் அரசியல் மொழியாக விளங்கவில்லையானால் வாழ வழி இல்லை. ஆகவே தமிழ் நாட்டின் ஆட்சி தமிழில் நடைபெற்றால்தான் தமிழர் தமிழைக் கற்றுப் போற்றுவார்கள்; தமிழ் வாழ வழி உண்டு; இல்லையானால், இல்லை.

# இருவகைக் கேடுகள்

வடக்கும் தெற்குமாக ஒரு தெரு அமைந்திருக்கிறது. தெருவின் இடையே அடுத்துள்ள வீடுகள் இரண்டின் முற்றத்தில் இரண்டு மரங்கள் வளர்கின்றன. வடக்கே உள்ள வீட்டின் முன்புறத்தில் வளர்வது வேப்பமரம். அதற்கு அடுத்த தெற்கு வீட்டின் முன்புறத்தில் வளர்வது தென்னைமரம். இந்தத் தென்னை நல்ல விதையிலிருந்து முளைகிளம்பி வளர்ந்து வருவது. உயர்ந்த வளமுள்ள நிலத்தில் தொன்று தொட்டுப் பயிரிட்டுப் பண்படுத்திவரும் ஓர் உழவர் ஆராய்ந்து எடுத்துக் கொடுத்த தேங்காய் நெற்றைக் கன்ருக்கி வளர்த்தார்கள் தெற்கு வீட்டுக்காரர். அந்த நெற்றையும், அது தோன்றிய இடத்தையும், அதைப் போற்றிக் காத்துத் தந்தவரின் பெருமையையும் நினைத்தாலும் உள்ளம் பெருமிதம் எய்தும். ஆனால் அந்த வேப்பமரத்தின் வரலாறு அப்படிப்பட்டது அன்று. தென்னை நெற்றுத் தந்தவரின் நிலத்திலேயே குப்பை கொட்டும் பள்ளத்தில் வேம்பின் தப்புவிதை விழுந்தது; அது முளைத்து வளர்ந்து செடியாக இருந்த போது அதைக் கொண்டுவந்து நாட்டார் வடக்கு வீட்டுக்காரர். ஆகையால் அதன் தோற்றத்திலும் தொடக்க வளர்ச்சியிலும் ஒரு பெருமையும் இல்லை. ஆனால் இன்று அந்த வேம்பு மரமாக வளர்ந்து கிளைகள் செழித்து நாற்புறமும் பரவிப் பலர் விரும்பும் வகையில் நிழல் தருகிறது. உயர்வும் பழம் பெருமையும் உடைய தென்னையோ மெல்ல மெல்ல வளர்ந்து, இன்னும் அந்த வேப்ப மரத்தின் நிழலுக்குள்ளேயே கட்டுண்டு கிடக்கிறது.

வடக்கு வீடு பெரிய வீடு; அந்த வீட்டில் வாழ்பவர்களுக்குத் தெருவிலும் நல்ல மதிப்பு இருக்கிறது. புதிய மதிப்பே என்றாலும் பெரிய மதிப்பாக இருக்கிறது. தெற்கு வீடு சின்ன வீடு; வீடு அழகாக அமைந்திருக்கிறதே தவிர வீட்டில் உள்ளவர்கள் வாழத் தெரியாதவர்கள். வீட்டினுள் வாழும் ஏழெட்டுப் பேரும் எந்நேரமும் வீண் வன்பும் துன்பும் செய்தபடியே ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொண்டு, சிதறுண்டு கிடக்கிறார்கள்; ஆகையால் தெருவில் உள்ளவர்கள் அவர்களை அவ்வளவாக மதிப்பதில்லை. வடக்கு வீட்டில் ஆட்கள் பலர் இருக்கிறார்கள்; அதில் முப்பது நாற்பதுபேர் இருந்தும், எப்படியோ அவர்கள் ஒரு குடும்பமாக ஒன்றுபட்டு வாழ்கிறார்கள். ஒருவரை ஒருவர் ஏய்க்காமல், பொறாமை கொள்ளாமல் எப்படியோ கூடிவாழ்ந்து வல்லவர்களாக இருக்கிறார்கள்.

ஒற்றுமை குலைந்து சீர்கெட்டு வாழும் தெற்கு வீட்டார் தம் குறையை எண்ணிப் பார்ப்பதே இல்லை. ஆனால் எந்நேரமும் தென்னை நெற்றின் பெருமையையும் அதைத் தந்தவரின் தூய அன்பையுமே புகழ்ந்து சொல்லிக் காலம் கழிக்கிறார்கள். அடுத்த வீட்டு வேப்பமரம், குப்பையில் முளைத்த செடி என்று அதன் பழைய வரலாற்றைச் சொல்லிச் சொல்லி எள்ளி நகையாடுகிறார்கள்.

வேப்ப மரமோ இவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. நிலத்திலுள்ள சத்தை உறிஞ்சி வளர்ந்தபடியே இருக்கிறது. வடக்கு வீடு முழுவதையும் மறைத்து நிழல்கொடுக்கும் அளவிற்குச் செழித்து வளர்ந்ததோடு நிற்காமல் தெற்குப் பக்கமாகவும் பல கிளைகளை நீட்டி வளர்ந்து நிழல் கொடுக்கத் தொடங்கி விட்டது. இனி இந்த வேப்ப மரத்திற்கு நீரும்

தேவையில்லை ; உரமும் தேவையில்லை. இரண்டு ஆண்டுகள் மழையே பெய்யாமல் காய்ந்தாலும் வாழ வல்ல வளர்ச்சியை அது பெற்றுவிட்டது. ஆனாலும், வீட்டார் அதைக் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்று கிறார்கள். நாள்தோறும் நீர் வார்க்கிறார்கள். வாரந் தோறும் உரம் இடுகிறார்கள். ஆடுகள் வந்து எட்டி வாய் வைக்காத உயரத்திற்கு அது வளர்ந்திருக்கிறது. அவ்வாறு இருந்தும், அந்த வீட்டுக்காரர் வன்மையான வேலியும் இட்டுக் காப்பாற்றுகிறார்கள்.

தெற்கு வீட்டுக்காரரோ, எந்நேரமும் வீட்டுக் குள் இருந்து ஏதேனும் குழப்பம் செய்தபடியே இருக் கின்றனரே அல்லாமல், இந்தத் தென்னையின் வளர்ச் சிக்கு வேண்டிய நீரையும் ஒழுங்காகப் பாய்ச்சுவ தில்லை ; உரமும் இடுவது இல்லை. என்றோ ஒருநாள் எதையாவது செய்துவிட்டு, கடமையைச் செய்து விட்டதாக எண்ணிக்கொண்டு, அடுத்து வாய்க்கக் கூடிய சண்டை சச்சரவுகளில் ஆர்வம் காட்டுகின் றனர்.

இந்த இரண்டு வீடுகளின் எதிரே ஒரு பெரிய பந்தல் உள்ளது. அது எதிர்வீட்டுக்காரர் போட்ட பந்தல். வேப்பமரம் வளர்ந்து நிழல் தருவதற்கு முன், தெற்கு வீட்டாரும் வடக்கு வீட்டாரும் அடிக்கடி அந்தப் பந்தலின் நிழலில்தான் அமர்ந்து பேசிக்கொண் டிருந்தனர் ; அந்த இரண்டு வீட்டுச் சிறுவர்களும் அந்தப் பந்தலின் நிழலில்தான் விளையாடிக் காலம் கழித்தனர். எதிர்வீட்டுக்காரர் முன்னே பெரிய செல்வமும் செல்வாக்கும் உடையவராய் வாழ்ந்த போது அந்தப் பந்தலைப் போட்டார். இப்போது அவருடைய வாழ்க்கையில் எப்படியோ வறுமை வந்து விட்டது. அந்தப் பந்தலைப் பழுது பார்க்கவும் ஆற்ற லற்றவராகிவிட்டார் அவர். கடைசியில் எதிர்வீட்

டைக் காலிசெய்துவிட்டு வேறிடத்திற்குப் போய் விட்டார்.

வேப்பமரம் வளர்ந்து நிழல் தரத் தொடங்கிய பின், வடக்கு வீட்டார் இனி அந்தப் பந்தல் வேண்டியதில்லை என எண்ணினார். பந்தலைப் பிரித்துவிட வேண்டும் என்று துணிந்தார். எதிர் வீட்டுக்காரரோ “நீங்கள் எப்படியாவது செய்துகொள்ளுங்கள். இனிமேல் எதுவும் உங்கள் விருப்பம். நான் அங்கே குடியிருக்கவில்லை. ஆகையால் எப்படியாவது செய்யுங்கள்” என்றார். பந்தலோ பெரிய பந்தல். வடக்குப் பகுதியைப் பிரித்துத் தெற்குப்பகுதியைப் பிரிக்காமல் இருக்கமுடியாது. ஆகவே, வடக்குவீட்டார் தெற்கு வீட்டாரை அணுகி, “ஐயா, இனிமேல் எதிர் வீட்டுப் பந்தல் வேண்டா. நிழல் வேண்டுமானால் நாம் இனி இந்த வேப்பமரத்தின் நிழலிலேயே இருக்கலாம். நம் இரண்டு வீட்டுப் பிள்ளைகளும் இந்த நிழலிலேயே விளையாடுவார்கள். நிழல் இப்போது பரப்பாக இல்லாவிட்டாலும், வர வரப் பெருகிவிடும். தவிர, இது நம் சொந்த நிழல்; அந்நியரின் பந்தல் அல்ல. அன்றியும், வேப்பமரத்தின் நிழல் உடம்பிற்கு நல்லது. வடக்கு வீட்டாரின் மரத்தின் நிழல் நமக்கு உதவுமா என்று நீங்கள் எண்ண வேண்டாம். இதோ பாருங்கள்! உங்கள் வீட்டுப் பக்கமாகத் தெற்கு நோக்கி எத்தனை கிளைகள் நீண்டு வளர்ந்துவருகின்றன. இவற்றை நீங்கள் உங்கள் சொந்தமாக எண்ணிப் போற்ற வேண்டும்” என்றார்.

தெற்கு வீட்டார் ஆத்திரப்பட்டார்; கொதித்தார். “நாங்கள் அந்தப் பந்தலைப் பிரிக்க மாட்டோம். இதுவரையில் நாங்கள் அந்தப் பந்தலின் நிழலில் வளர்ந்துதான் முன்னேறினோம். இனியும் அப்படித் தான் செய்வோம். நீங்கள் பிரித்தாலும் நாங்கள்

பிரிக்க மாட்டோம். உங்கள் வேப்பமர நிழல் எங்களுக்கு வேண்டாம். அது உங்களுக்குச் சொந்தம் ஆயினும் எங்களுக்கு அந்நியப் பொருளே. உங்கள் கிளைகள் தெற்குப் பக்கமாக வரவிடாதீர்கள். வந்தால் வெட்டித் தொலைப்போம். வீண் வன்பாக முடியும். இப்போதே சொல்லிவைக்கிறோம். எங்கள் தென்னை தான் பழையது, உயர்ந்தது, பயனுள்ளது" என்று சினம் அடங்கினர். இவருக்குத் துணையாக இன்னொருவர் பேசத் தொடங்கி, "மரத்தின் நிழல் நாகரீகமானது அல்ல; பந்தல்தான் நாகரிகம். அதுதான் உலகம் எங்கும் உள்ளது. அதை அழிக்க உங்களால் முடியாது. பந்தலால் எவ்வளவோ பயன் பெற்றிருக்கிறோம். இப்போது அதைப் பிரிப்பது அறியாமை" என்று வெவ்வேறு வகையாக அதே கருத்தை எடுத்துரைத்தார்.

இவற்றைக் கேட்டுக்கொண்டேயிருந்து வடக்கு வீட்டிலிருந்து வேறு இருவர் வந்தார்கள். "இவ்வளவு தொல்லை ஏன்? இந்த வேப்பமரம், அந்தத் தென்னை மரம், தெருவில் உள்ள மற்ற மரங்கள் எல்லாவற்றிற்கும் நீர் ஊட்டிப் புரப்பது மழைதான். அந்த மழை மேகம் உலகம் தோன்றிய நாள்முதல் வானத்தில் உலாவியபடியே நம் எல்லோருக்கும் நிழல் கொடுத்து வந்திருக்கிறது. அதனால்தான் அதைத் தேவநிழல் என்றும் முனிவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுவே போதும். அதனுடைய பெருமைதான் பெருமை. அது தான் உலகத்திலே பண்பட்டது. அதை மட்டும் போற்றுவோம். மற்ற மரங்கள், பந்தல் எல்லாம் அதன் கீழ் இருக்கட்டும்" என்றார்கள்.

தெற்கு வீட்டார்க்கு இது மேலும் கொதிப்பை வளர்த்தது. "வானத்தில் திரியும் மேகம், நிழல் தருவதற்காகவா ஏற்பட்டது? அதன் நிழலை நம்பி நாம்

வாழ்க்கை நடத்த முடியுமா? உங்களுக்கு இவ்வளவு வெறி இருக்கும் என்று எங்களுக்கு முன்னமே தெரியாமற் போயிற்று. உலகமெல்லாம் ஒன்று, உயர்வு தாழ்வே இல்லை என்று உதட்டில் பேசுகிறீர்கள். உள்ளத்தில் இவ்வளவு வெறி கொண்டு வாழ்கின்றீர்களே" என்று கடிந்துரைத்தார்.

இத்தனை பேச்சுக்களையும் பொருட்படுத்தாமல், அந்தப் பந்தலின் கால்கள் கரையானுக்கு இரையாகி வருகின்றன; மூங்கில்கள் உளுத்துவருகின்றன. வேப்பமரமோ யாருடைய பேச்சையும் பொருட்படுத்தாமல், நாளொரு மேனியாய் விரைந்து வளர்ந்து, தன் நிழலைப் பெருக்கிவருகிறது. தென்னை மரமோ போதிய நீரும் பெறுமல், உரமும் இல்லாமல், வீட்டாரின் குழப்பத்திற்கு இடையே கூழையாய்ப் பொலிவிழந்து வாடி நிற்கிறது.

இதுதான் நம்நாட்டின் இன்றைய மொழிச் சிக்கல்.

இந்தி மொழி வேகமாகப் பரப்பப்பட்டுவருகிறது. தமிழ் மொழியைக் காக்கக் கடமைப்பட்டவர்கள் பிணக்கிலும் பூசலிலும் காலம் கழித்துவருகின்றனர். செல்வாக்குத் தளர்ந்துவரும் ஆங்கிலத்தை மட்டும் இழுத்துப் பிடித்துவைக்க முயல்கிறார்கள். இவற்றிற்கு இடையே செயற்கைக் கற்பனை மொழியான வடமொழிக்கு ஆட்சித் தலைமை பெற்றுத்தர வாய்ப்புக் கிடைக்குமா என்று சிலர் ஏங்கி நிற்கின்றனர்.

மற்றவர்களைப் பற்றிக் கவலை இல்லை. தமிழர் என்ன செய்ய வேண்டும்?

என்ன செய்கின்றனர்?

விளைவு என்ன ஆகும்?

பழி யாரைச் சாரும்?

தமிழர் இன்று செய்யத் தகாத செயலில் ஈடுபட்டுத் தம் வலிமையைக் குறைத்துக்கொள்ள லாகாது.

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வே' என்னும் உண்மையை எவர் மறந்தாலும் மறக்கலாம்; சிறுபான்மையோர் மறத்தலாகாது. மொழி வகையில் தமிழர் சிறுபான்மையோர்தான்; தமிழ் ஒரு காலத்தில் இமயம் முதல் குமரிமலை, பஃறுளியாறு வரையில் பரவியிருந்த பெருமொழிதான்; ஆனால் இன்று தென்னிந்தியாவில் இரண்டரை கோடி மக்கள் மட்டுமே பேசும் மொழியாக—சிறுபான்மையோரின் மொழியாக—குறுகிவிட்டது. இந்த நிலையில் தமிழ் மொழி வாழ வேண்டுமானால் தமிழர் ஒன்றுபட்டு முழங்க வேண்டும்; ஒன்றுபட்டு வழக்காடவேண்டும். இல்லையேல், இந்தி மத்திய அரசாங்க மொழியாக மட்டும் நிற்காமல் ஆங்கிலம் போல் அரசினர் மொழியாகவும் போதனை மொழியாகவும் திணிக்கப்படுவது உறுதி. அப்போது பழிக்கு உரியவர் யார்? ஒற்றுமை குலைந்து மொழியைக் காக்க வகை அறியாமல் கைவிட்டு இந்தத் தலைமுறையில் வாழ்ந்த தமிழரே பழிக்கப்படுவர்.

இன்றைய நிலையில் தமிழர் பிறமொழிகளைப் பழித்துப் பேசியும் வெறுத்துப் பேசியும் ஆறுதல் அடைவதில் பயனில்லை. பிறரை வெறுப்பதில் உள்ள ஆர்வத்தில் ஒரு பாதியாவது தம்மவரை விரும்புவதில் உள்ளதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். பிற மொழியைப் பழிப்பதில் உள்ள ஊக்கத்தில் கால் பங்காவது தம் மொழியைப் போற்றுவதில் உள்ளதா என்று கவனித்துக்கொள்ள வேண்டும். கடைத்தெரு முதல் பல்கலைக்கழகம் வரையில் தமிழர்க்குத் தமிழ் மொழியில் பற்று உள்ளது என்பதற்குச் சான்றுகள் வேண்டும். நான்கு பேர் கூடினால் தமிழ் பேசக் கூசுவது, தமிழில் கடிதம் எழுத நாணுவது, தமிழை போதனைமொழியாகக் கொள்ளத் தயங்குவது ஆகிய இவற்றையே இன்று தமிழகம் காண்கிறது.

ஆங்கிலம் போதனை மொழியாக (Medium of instruction) இருக்க வேண்டும் என்ற நிலை மற்ற மாகாணங்களில் மாறிவிட்டது. ஆனால் தமிழ் நாட்டில்தான் ஆங்கிலத்தின் வாயிலாகப் பாடங்களைக் கற்பிக்கும் வகுப்புகளுக்குச் செல்வாக்கு மிகுதியாக உள்ளது. ஆங்கிலம் போதனை மொழியாக உள்ள வகுப்புக்களிலே பிள்ளைகளைச் சேர்க்கப் பெற்றோர்கள் இந் நாட்டில் முனைந்து பாடுபடுகிறார்கள். பல்கலைக் கழகங்களில் தமிழ் போதனைமொழியாக வர முடியாது என்று துணிந்து கூறும் அஞ்சாமையும் தமிழர்களுக்குத்தான் உள்ளது. "உங்கள் தாய்மொழியிலே பாடங்களைக் கற்றுக்கொள்ள உங்களால் முடியும்" என்று மற்றவர்கள் சொல்லும்போதும், "எங்கள் தாய் மொழியால் முடியவே முடியாது" என்று கூறும் நாக்கு இந்தத் தமிழ் நாட்டில் பலர்க்கு அமைந்திருக்கிறது. தமிழ் நாட்டில் அதிகாரிகள் பலர் ஆங்கிலத்தின் உயிர்வாழ்வுக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு மார்தட்டி நிற்கிறார்கள். இவர்களில் பலர்க்குத் தமிழன்பு இல்லை என்பதை எண்ணும்போது, இந்நாட்டின் பிற்போக்கு நிலை தெளிவாகிறது. ஆங்கிலம் அறிவுமொழியாக இருக்க வேண்டும் என்று கூறுதல் பொருந்தும்; அது அந்த நிலையில் இன்றியமையாதது என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் ஆங்கிலமே போதனைமொழியாக நீடு விளங்க வேண்டும் என்று கூறும்போதுதான், அவர்களுக்கு ஆங்கிலத்தில் உள்ள மோகம், தேம்ஸ் நதிக்கரையில் உள்ளவர்களின் பற்றைவிட மிகுதி என்று தெரிகிறது. இதன் பயனாக நாட்டின் இளைஞர்களின் வாழ்வில் விளையும் தீமை எத்தகையது என்பதை அவர்கள் எண்ணிப்பார்ப்பதே இல்லை. உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் பயிலும் மாணவர்கள்

அறிவை வளர்ப்பதை மறந்து ஆங்கிலச் சொற்களை யும், சொற்றொடர்களையும் நெட்டுருப் போடுவதி லேயே பெரும்பங்கான காலத்தைச் செலவிடுகிறார் கள். அறிவை வளர்ப்பதற்கு உரிய இளமூளைகள், சொற்களையும் சொற்றொடர்களையும் கற்பதில் இடர்ப் பட்டு வருந்துகின்றன. கடைசியில் திக்கற்ற தாய் மொழியும் வளராமல், 'அருமை' ஆங்கிலமும் வளரா மல், அறிவும் வளராமல், உடம்பும் உரம்பெறுமல் காலத்தை வீணே கழித்துக் கல்லூரிகளை விட்டு வெளியேறுகிறார்கள்.

மற்றுமொன்று; ஆண்டுதோறும் பரீட்சையில் தவறிவிடும் தமிழ்மாணவர்களில் எத்தனை பேர் ஆங்கிலத் தேர்வில் போதிய எண்கள் (மார்க்குகள்) பெறாத காரணத்தால் தவறுகின்றார்கள் என்பதைக் கணக்கெடுத்துப் பார்த்தால், தமிழ் நாட்டு இளைஞர் கள் எவ்வளவு கொடுமைக்கு ஆளாகியுள்ளார்கள் என்பது விளங்கும். ஆங்கிலத் தேர்வில் போதுமான எண் (மார்க்கு) வாங்க முடியாத காரணத்தால் தவறுகின்றவர்களே, எஸ். எஸ். எல். சி., இண்டர் மீடியட், பி. ஏ., பி. எஸ். சி., பி. ஏ. ஆனர்ஸ் என் னும் பரீட்சைகளில் பெரும்பாலோராக உள்ளனர். தமிழர் இயற்கையாகவே அறிவுக் கூர்மைபெற்ற இன மாக இருந்தும், ஆங்கிலத் தேர்வு முறை அவர்களை அல்லற்படுத்துகிறது. அவர்களின் உடல் நலமும் மன நலமும் கெட்டுத் தேர்வுகளில் தவறித் தவறி இடர்ப் பட்டு இளமையின் ஊக்கத்தைப் பாழ்படுத்திக் கொள்வதற்கு ஆங்கிலத் தேர்வுகளே காரணமாக உள்ளன.

ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்டுத் தமிழர் பட்ட தொல்லைகளைவிட ஆங்கிலத்திற்கு அடிமைப்பட்டுத் தமிழ் இளைஞர் படும் தொல்லைகள் மிகுதியாக உள்

ளன. இதற்குக் காரணம் ஆங்கிலேயர் அல்ல; அறிவு மொழியாகிய ஆங்கிலமும் அல்ல; தமிழ்ப் பற்று இல்லாத தமிழர்க்கு உள்ள ஆங்கில மோகமே காரண மாகும்.

தாய் மொழியில்தான் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் முடியும் என்று உள நூல் அறிஞர், மொழி நூல் அறிஞர் பலரும் எடுத்துரைக்கின்றனர். எச். ஜி. வெல்ஸ் முதலான ஆங்கிலேயரும் எடுத்துரைத்துச் சென்றனர். ஆங்கில நாட்டுக் கல்வி அதிகாரிகளும் உரைக்கின்றனர். ஆனால் தமிழ் நாட்டுத் தமிழர்க்கு இன்னும் அந்தத் தெளிவு பிறக்கவில்லை. ஆங்கில மோகம் அவர்களின் கண்ணை மறைக்கிறது. ஆங்கிலத்தில் ஆங்கிலேயர்போல் பேசவும் எழுதவும் வேண்டும் என்று இவர்கள் வற்புறுத்துகின்றார்கள். அவ்வாறு பிழையற்ற ஆங்கிலம் எழுத வராத தமிழ் இளைஞர்களை மேல் வகுப்புக்குத் தேற முடியாது என்று அவர்களின் வாழ்வுக்கு இடையூறு செய்து தேர்வுகளில் மட்டம் தட்டுகின்றனர். யார்? ஆங்கிலேயர் அல்லர்; தமிழ் நாட்டுத் தமிழர்கள்.

வங்காளிகள், ஜப்பானியர் முதலான மற்ற நாட்டு மக்கள் ஆங்கில மொழியை அறிவு வளர்ச்சிக்கு உதவும் கருவியாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். ஆனால் தமிழர் ஆங்கில மொழியின்மேல் உள்ள மோகத்தால், அறிவை வளர்க்க முடியாமல் அல்லல் பட்டுப் பயனை இழக்கின்றனர். ஆங்கிலம் மற்றவர்களுக்குப் பயன் தரும் கருவியாக உள்ளது; தமிழர்க்கோ தடைப்படுத்தும் கருவியாக உள்ளது. மற்றவர்கள் அரைகுறையாகவே அதைக் கற்று உலக மதிப்பைப் பெற்று உயர்ந்து வாழ்கின்றனர். தமிழரோ, அதை ஆங்கிலேயரைப் போலவே பேசவும்

எழுதவும் பாடுபட்டு முழுவதும் கற்க முயன்று தோல்வியுற்றுச் சீரழிகின்றனர்.

இந்த நிலையில் குப்பையில் முளைத்த வேப்பஞ் செடி மரமாகிச் செழித்துப் பரவிப் பெருநிலை அடைகிறது. உயர்ந்த தென்னையிலிருந்து பெற்ற நெற்று, கன்றாக வளரும்போதே போதிய வளர்ச்சி பெறாமல் கூழையாய்க் கெடுகிறது.

தாழ்ந்திருந்தவர் திறமையால் செல்வாக்குப் பெற்று உயரலாம். உயர்ந்திருந்தவர், வாழும் வல்லமை இல்லாத காரணத்தினால் தாழலாம். இது உலக இயற்கை. மொழியிலும் இப்படி நேரலாம். பழம் பெருமை பேசுவதால் பயன் இல்லை. கடமையைச் செய்யாமல் கெடுத்துக்கொள்கிறோமே என்று நெக் குருகி வருந்துவதால் பயன் உண்டு. பழம்பெருமை மட்டும் இதுவரையில் எந்த நாட்டையும் மொழியை யும் காக்கவில்லை. பழம்பெருமை உடைய நாடுகள் பலவும் மொழிகள் பலவும் அழிந்திருத்தலை வரலாறு கூறுகின்றது.

கேட்டை இருவகையால் வருவித்துக்கொள்ள முடியும் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

ஒன்று : செய்யத் தகாதவற்றைச் செய்து கேடு அடையலாம்.

மற்றொன்று : செய்யத் தக்கவற்றைச் செய்யாம லிருந்து கேடு அடையலாம்.

ஒற்றுமைப்பட்டு வாழவேண்டிய (மொழி வகை யால் சிறுபான்மையோர் ஆகிய) தமிழர் காலமெல்லாம் பிரிந்தும் பிளந்தும் ஒருவரை ஒருவர் பழித்தும் வெறுத் தும் ஒற்றுமை குலைந்து மதிப்பு இழந்து கெடுகின்றனர். செய்யத்தகாதவற்றைச் செய்து அடையும் கேடு இது.

இந்தியின் கிளைகள் தமிழகத்தை மூடி மறைப் பதற்கு முன்னே, தொன்மைத் தமிழாகிய தென்னை

மரத்தைச் செழித்து வளரச் செய்ய வேண்டும். தென்னை மரம் இந்தியின் கிளைகளை ஊடுருவிக் கடந்து மேலெழுந்து வளர்ந்துவிட்டால், நேரே கதிரவன் ஒளியையும் காற்றையும் தடையின்றிப் பெற்று வாழ முடியும். இந்தி புகுவதற்கு முன்னமே, பல்கலைக் கழகங்களிலும் அலுவலகங்களிலும் ஆங்கிலம் இருந்த இடத்தில் தமிழ் விளங்குமாறு செய்துவிட வேண்டும். ஆனால் இன்னும் அதைப் பற்றித் தமிழர் தம் கடமையைச் செய்யவில்லை. தபால்கார்டு முதலியவற்றில் தமிழுக்கு இடம் இல்லாத நிலைமை ஏற்பட்டபிறகும், தமிழர்க்கு இந்தக் கடமையுணர்ச்சி ஏற்படவில்லை. தமிழ் போதனை மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் ஆக வழியின்றிக் கேடு உறுகின்றது. செய்யத் தக்கவற்றைச் செய்யாமல் அடையும் கேடு இது.

*செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க*
*செய்யாமை யானும் கெடும்.*

(திருக்குறள். 466)

இந்நிலையில் ஒற்றுமையும் வலிமையும் கடமையுணர்ச்சியும் இழந்து வாழும் மக்கள்மீது எதையும் திணிப்பது யார்க்கும் எளிது. மத்திய அரசாங்க மொழியாக மட்டுமே இருப்பதற்கு உரிய இந்திமொழி அவ்வாறு நிற்காமல், ஆட்சி மொழியாகவும் போதனை மொழியாகவும் திணிக்கப்படுமானால் இந்தப் பழி யாரைச் சாரும்? தமிழரையும் சாரும். செய்யத்தகாதன செய்தும், செய்யத்தக்கன செய்யாமலும் இரு வகையாலும் கெட்ட தமிழரையும் பழிசாரும். இந்தி யாரால் புகுந்தது என்றால், இப்படிப்பட்ட தமிழரால் புகுந்தது என்று கூற இடம் ஏற்படும்.

# தியாகம் தேவை

இந்த நாட்டுக்கு ஒரு பொது மொழி தேவை. அதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்கக் காரணம் இல்லை. ஏன் எனில், இந்த நூற்றாண்டில் உலகமே ஒரு குடும்பம் போல் வாழ வேண்டி ஏற்பட்டுள்ளது. உலகம் பரந்த பெரிய உலகம்தான். ஆனால் விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள போக்குவரவுக் கருவிகளும், செய்தி பரவும் விரைவும், பழகுதற்கு உற்ற வாய்ப்புக்களும் சேர்ந்து, பெரிய பரந்த உலகத்தைச் சிற்றூர்போல் ஆக்கிவிட்டன. ஆகவே, இனி எந்த நாடும் தன்னளவில் தனித்து ஒதுங்கி வாழமுடியாது. அடுத்துள்ள நாடு நட்புள்ளதாக இருக்காமல் பகையான நாடாக இருப்பினும், தூதரை அனுப்பிப் பேசவும் உடன்படிக்கை முதலியன நிகழ்த்தவும் ஒரு பொதுமொழி தேவையாகின்றது. ஒரு மாநிலத்தார் மற்றொரு மாநிலத்தாருடன் உறவுகொண்டு பழகுவதற்கும் பொதுமொழி தேவை; அல்லது, பகை கொண்டு போராடுவதற்கும் பொதுமொழி தேவை.

பெரிய துணைக்கண்டம் போல் உள்ள இந்தியாவில் உள்ள பல நாடுகள் அல்லது மாநிலங்களாகிய இவற்றிற்கும் ஒரு பொதுமொழி கட்டாயம் தேவை. அந்தப் பொதுமொழி எது என்பது நெடுங்காலமாக எண்ணிப் பேசப்பட்டு வந்தது. இந்திய அரசியல் சட்டம் (Indian Constitution) வகுத்தவர்கள் கூடி, அந்தப் பொதுமொழி இந்தி என முடிவு செய்தனர்.

'இந்தியைப் பொதுமொழி எனக் கொள்வதில் பல மாநிலத்தார்க்கு எந்த வகையான இடர்ப்பாடும் இல்லை. வடக்கே உள்ள பல மாநிலத்தார் இந்தியே

தாய்மொழியாகக் கொண்டவர்கள். ஆகவே, தங்கள் தாய்மொழி இந்தியாவின் பொதுமொழியாகின்றது என்பது அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாகும். தன் தாய் அரசியாகின்றாள் என்று கேள்வியுறும் மக்களைப் போல் அவர்கள் பூரிப்படைய இடம் உண்டு. முப்பது கோடிக்கு மேற்பட்ட தொகையினராகிய மக்கள் பொதுமொழியாகக் கொள்வதையே தங்கள் தாய் மொழியாகக் கொண்டவர்கள் உண்மையாகவே 'பாக்கியவான்கள்' எனக் கூற வேண்டும். அவர்கள் தங்கள் தாய்மொழியைமட்டும் கற்பதால், ஒரு பெரிய நாட்டில் மூலை முடுக்கெல்லாம் சென்று பழகவும் வாணிகம் செய்யவும் ஆட்சி நடத்தவும் தடையில்லாத பெருவாய்ப்பைப் பெறுகின்றார்கள். இத்தகைய பொதுமொழி சில ஆண்டுகளில் மிக வேகமாக வளரக் கூடிய ஆற்றல் நிறைந்து, அறிவு நூல்கள் பலவற்றையும் பெற்று விளங்கும் ஆகையால், அடுத்த தலைமுறையில் வரும் அவர்களின் மக்கள் அவர்களைவிடப் பெருமைப்படுவார்கள். தங்கள் தாய்மொழி பரந்த பெரிய நாட்டின் மொழி என்பதுமட்டும் அல்லாமல், அறிவு நூல்கள் பல பெற்று அறிவை வளர்க்கும் சிறப்புள்ள மொழி என்றும் அடுத்த தலைமுறையார் மகிழ்வார்கள்.

ஒரு சிறு நாட்டின் பண்படாத மொழியாக இருந்த ஆங்கிலம் இப்படித்தான் வேகமாக வளர்ந்து இன்று உலக மொழியாக—அறிவு மொழியாக—விளங்குகின்றது. ஆங்கிலேயரின் ஆட்சி பல நாடுகளிலும் பரவி, பல நாட்டு மக்களின் அரசியல் மொழியாக விளங்கிய காரணத்தால்தான் ஆங்கிலம் வேகமாக வளரத் தொடங்கியது என்பதையும், அதன் பிறகே அறிவு நூல்கள் அந்த மொழியில் கணக்கின்றிப் பெருகிவிட்டன என்பதையும் இங்குக் கருத

வேண்டும். பதினெட்டாம் நூற்றாண்டிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இங்கிலாந்தில் இருந்த பள்ளிக்கூடங்கள் லத்தீன் பள்ளி (Latin School) என்று அழைக்கப்பட்டு வந்தன. அந்தப் பள்ளியில் படித்தவன்தான் கல்வி பெற்றவனாகக் கருதப்பட்டுவந்தான். லத்தீன் அல்லது கிரேக்க மொழி படிக்காமல், தாய்மொழியாகிய ஆங்கிலம் மட்டும் படித்த ஆங்கிலேயர்க்கு மதிப்பு இல்லாமலிருந்த காலம் அது. அதே இங்கிலாந்தில் இன்று ஆங்கிலம் ஒன்றுமட்டும் படித்து, உலகத்தை ஆட்டிவைக்கும் கருத்துவளம் பெற்ற எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் இருந்துவருகின்றனர். ஒரு காலத்தில் லத்தீன் மொழியும் கிரேக்க மொழியும் பண்பாடு உள்ள மொழிகளாகக் கருதப்பட்டு, தாய் மொழியாகிய ஆங்கிலம் பண்பாடு அற்றதாக அங்கே கருதப்பட்டு வந்தது.

இன்று இந்தியும் இலக்கியப் பண்பாடு அற்ற மொழியாக உள்ளது; ஆயினும், பலகோடி மக்கள் அதைப் பொதுமொழியாக ஏற்றுச் செல்வாக்குத் தந்தால் சில தலைமுறையில் இதுவே வேகமாக வளர்ந்து சிறப்புள்ள மொழியாக விளங்க முடியும். அன்று இங்கிலாந்தில் லத்தீன் கிரேக்க மொழிகள் சிறந்து நின்றதுபோல், இன்று இங்கே வடமொழி, வங்காளி, தமிழ், தெலுங்கு, மராத்தி முதலியவை சிறந்து நிற்கலாம். ஆனால் சில தலைமுறைகளில் இந்தி இவற்றைவிட வேகமாக வளர்ந்து முன்னிற்க முடியும்.

ஆகவே, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், அது பொது மொழியாக ஏற்படுவது குறித்துக் களித்துக் கூத்தாடலாம். ஆனால் மற்றவர்களின் நிலை என்ன?

மற்றவர்கள் தங்கள் தாய்மொழியாக வங்காளி, தமிழ், தெலுங்கு, மராத்தி முதலிய மொழிகளில் ஒன்றைக் கற்க வேண்டும்; அதோடு இந்தியாவின் பொது மொழியான இந்தியையும் கற்க வேண்டும். அப்படி இரு மொழி கற்பவர்கள், இருமொழியிலும் நல்ல தேர்ச்சி பெறமுடியாது. யாரோ ஒரு சிலர் மட்டுமே அத்தகைய தேர்ச்சி பெற முடியும். தாய்மொழியை நன்கு கற்பவர்கள் பொதுமொழியில் திறமை இல்லாமல் தடுமாறுவார்கள். தாய்மொழியைப் புறக்கணிக்கின்ற துணிவு உடையவர்கள் மட்டுமே பொதுமொழியில் திறமை பெறுவார்கள். (கான்வெண்ட் பள்ளிகளில் படித்துத் தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தைக் கற்பவர்கள் ஆங்கிலத்தில் திறமை பெறுவது போல், தமிழைப் புறக்கணித்து இந்தியைக் கற்பவர்கள் மட்டுமே இந்தியில் தேர்ச்சி பெற முடியும். விதிவிலக்காக ஒரு சிலர் இரு மொழியிலும் திறமை பெறக் கூடும். அப்படிப்பட்டவர்கள் பதினாயிரத்தில் ஒருவர் இருவர் இருக்கலாம். மற்றப் பெரும்பாலோரால் அது இயலாது). அறிஞர் பெர்னார்ட் ஷா, எச். ஜி. வெல்ஸ் முதலான சிறந்த அறிஞர்களாலேயே இருமொழிப் புலமை பெற முடியாமற் போனது. ஆகவே அனைவரும் இருமொழியும் கற்று வல்லவர்களாக முடியும் என்று எதிர்பார்த்தலாகாது.

இவ்வாறு இருமொழி கற்பதோடு கடமை தீர்ந்துவிடுமா எனின், அதுதான் இல்லை. உலக மொழியாகிய ஆங்கிலமும் கற்காவிடின், அறிவு வளர்ச்சியில் குறையாக நிற்கும் நிலைமை உள்ளது. ஆகவே ஆங்கிலமும் மூன்றாவது மொழியாகக் கற்றுத்தீர வேண்டும். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இந்தியும் ஆங்கிலமுமாக இருமொழி கற்றுப் போதும் என அமையலாம். தமிழர் முதலான மற்றவர்களோ,

தாய்மொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் கற்றுத் தீர வேண்டும்.

ஐரோப்பிய நாடுகளில் பலர் மூன்று மொழிகள் கற்கின்றனர். ஆனால் அவர்கள் மூன்று வகையான வேறுபட்ட எழுத்துக்களைக் கற்பதில்லை. ரோமன் எழுத்து முறை ஒன்று (A B C D முதலியவை) கற்றால் போதும். அந்த ஒருவகை எழுத்து முறை கொண்டே ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலான பல மொழிகளையும் ஐரோப்பிய நாடுகளில் கற்க முடிகின்றது. தவிர, அந்த மொழிகளின் சொற்கள் பல பொதுவான சொற்கள்; ஆகவே ஒத்த சொற்களைக் கற்பதில் முயற்சியும் குறைகிறது. இந்தியாவில் மூன்று மொழி கற்பவர்க்கு இந்த நன்மை இல்லை; அவர்கள் வேறுபட்ட மூவகை எழுத்துக்களைக் கற்க வேண்டும். தமிழ் எழுத்து, தேவநாகரி எழுத்து, ஆங்கில எழுத்து மூன்றும் கற்றால்தான் தமிழன் ஒருவன் மூன்று மொழிகளைக் கற்க முடியும். இந்த எழுத்துமுறைகள், மூன்றும் மூன்றுவகையானவை என்பது மட்டும் அன்று; ஒலிகளும் வேறுபட்டவை; சொல்லமைப்புகளும் வேறுபட்டவை; இலக்கண முறைகளும் ஒன்றுக்கொன்று முரணானவை. ஆகவே மூன்று மொழி கற்பதில் இங்குள்ள இடர்ப்பாடு சிறிது அன்று.

இத்தகைய சிக்கலைத் தீர்க்க வழி இரண்டு. ஒன்று துணிவு; மற்றொன்று தியாகம்.

'இந்தியா பல மொழியினர் வாழும் நாடு. பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழி இந்தி. பெரும்பாலோருக்கு நன்மை செய்தால் போதும், சிறுபான்மையோர் துன்பப்படவேண்டியது அவர்களின் தலைவிதி' என்று ஆள்வோர் துணிய வேண்டும். ஆகவே, பெரும்பான்மையோருடைய மொழியே எல்லோ

ருடைய மொழியாகவும் ஆக்கிவிட வேண்டும். அதைச் செய்வது எவ்வாறு? வன்பு முறையில் சிறுபான்மையோருடைய தாய்மொழியை நேரடியாகக் கொலை செய்துவிடுவது ஒரு வழி; அதாவது, அந்தச் சிறுபான்மையோருக்குப் பள்ளிக்கூடத்தில் தாய்மொழி கற்பிப்பதற்குத் தடை விதிக்க வேண்டும். தாய்மொழிப் பள்ளிகளை மூட வேண்டும். அதனால் அந்தத் தாய்மொழிகள் விரைவில் மறையும்; எல்லோருக்கும் இந்தியே தாய்மொழியாக ஆகிவிடும். அல்லது, மறைமுகமான முறையில் சிறுபான்மையோருடைய தாய்மொழிகளைக் கொலை செய்துவிட வேண்டும்; அதாவது, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அலுவலகங்களிலும் போட்டித் தேர்வுகளிலும், இந்திக்கு முதலிடமும் தாராளமான பண உதவியும் சிறப்பும் சலுகையும் கொடுத்து, தாய்மொழிகளை உள்ளபடியே விட்டுவிட்டால், அவைகள் தாமாகவே படிப்படியே செத்து ஒழியும். இந்த இரண்டும் செய்யத் துணிவு வேண்டும்.

பெரும்பாலோர் வாழ்வதற்காகச் சிறுபான்மையோரின் உரிமைகளை நசுக்குதல் கூடாது என்று அற நெஞ்சம் கொண்டவர்களுக்கு மேற்கூறிய துணிவு வராது. அவர்கள் அந்த வன்பு நெறியான துணிவை மேற்கொள்ளாமல், அன்பு நெறியான தியாகத்தை மேற்கொள்ள வேண்டும்.

என்ன தியாகம்?

சிறுபான்மையோராகிய தமிழர் முதலியவர்கள் மூன்று மொழி கற்கும் தொல்லையைக் குறைத்து இரு மொழி கற்குமாறு இசைய வேண்டும். அதற்கு வழி: உலக மொழியாகவும் அறிவு மொழியாகவும் வளர்ந்துள்ள ஆங்கிலத்தையே இந்தியாவின் பொதுமொழியாகவும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு

ஏற்றால், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவரும் இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழி கற்க வேண்டும்; மற்றவர்களும் தங்கள் தாய்மொழியும் ஆங்கிலமுமாகிய இருமொழி கற்க வேண்டும். ஆங்கிலம் ஆங்கிலேயருடைய மொழிமட்டும் அன்று; அறிவு வேட்கை கொண்ட அனைவருக்கும் உரிய மொழியாக வளர்ந்து விட்டது. இன்று ஆங்கிலம் கற்காத நாடே இல்லை. ஆகையால் நாம் அதனை ஏற்றுக்கொள்வதால் தீமை ஒன்றும் இல்லை; நம் சுதந்திரத்துக்கும் இழுக்கு இல்லை. உலகம் ஒரு குடும்பமாக வளரும் வளர்ச்சிக்கு நாமும் துணைசெய்தவர்கள் ஆவோம்; உலக முற்போக்கை நாம் என்றும் விடாமல், பின் தங்காமல் பயன் பெறவும் முடியும். பெரும்பான்மையோராகிய 'இந்தி' மக்கள் இதற்கு இசைய வேண்டுமே! பொது நன்மையைக் கருதி, தம் தாய்மொழிக்கு வரக்கூடிய பெருமையை விட்டுக்கொடுக்க வேண்டுமே! இந்தத் தியாகம் அவர்களிடம் எதிர்பார்க்க முடியுமா?

அல்லது:

'பொதுமொழி' என்ற தொடரை நேர்ப்பொருளில் பயன்படுத்தி, ஒரு மாநிலத்தார் மற்றொரு மாநிலத்தாருடன் பழகவும் எல்லா மாநிலத்தாரும் மத்திய அரசாங்கத்துடன் பழகவும் உரிய அளவில்மட்டும் இந்தியை வழங்க வேண்டும். அவ்வாறானால், ஒரு மாநிலத்து (மாகாணத்துத்) தலைமை நிலையத்தில்மட்டும் இந்தி மொழிபெயர்ப்புத் தெரிந்த சிலர் இருந்தால் போதும். மிகுதியாகத் தேவை எனினும், அலுவலகங்களில் டைப் அடிக்கத் தெரிந்தவர்கள் ஒரு சிலர் இருப்பதுபோல், மத்திய அரசாங்கத் தொடர்புக்காக ஒருசிலர் இந்தி மொழிபெயர்ப்பில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தால் போதும். ஆகவே, நாட்டில் பிறந்த எல்லோரும் இந்தி படித்துத் தேறியவர்களாக இருக்க

வேண்டியதில்லை ; பள்ளிக்கூடங்களில் இந்தி கட்டாயப் பாடமாக இருக்க வேண்டியதும் இல்லை ; விருப்பப்பாடமாக இருக்கலாம் ; மொழிக்கல்வியில் ஆர்வம் உள்ள சிலர் மட்டும் அப்போது இந்தி படிக்கலாம். கணக்குக் கற்பதில் ஒரு சிலர்க்கே ஆர்வம் உண்டு ; ஒரு சிலர்க்கே ஆற்றலும் திறமையும் இயல்பாக அமையும் ; அதுபோல் இரண்டுமொழி மூன்று மொழி கற்கும் திறமையும் ஆர்வமும் சிலருக்கே உண்டு. அவர்கள் மட்டும் ஆங்கிலமும் இந்தியும் கற்றால் போதும் என்ற அமைதி பெறலாம். எல்லோருக்கும் பலமொழிக் கல்வியைத் திணிக்க வேண்டியதில்லை. அதோடு, பொதுமொழி என்பது இந்த நோக்கத்தில் அமையுமானால், தபால் கார்டுகளிலும் மணியார்டர் தாள்களிலும் பிறவற்றிலும் இந்தி கட்டாயமாக்கப்படவேண்டியதில்லை ; மத்திய அரசாங்கத் தொடர்புள்ள அலுவலகங்களில் மட்டும் மொழிபெயர்ப்புத் துறையளவில் நின்றுவிடலாம். ஆனால், சிறுபான்மையோரின் நலம் கருதி அவர்கள் தங்கள் தாய்மொழியைப் பரப்பும் வெறியைத் தணித்துக் கொள்ள முடியுமா ? வேட்கையையும் கைவிட முடியுமா ? அத்தகைய தியாக மனப்பான்மை வடநாட்டார்க்கு வருமா ?

அல்லது :

ஐரோப்பிய நாடுகளில் பலமொழி கற்போருக்கு உள்ள நன்மையையாவது இங்கே ஏற்படுத்த வேண்டும் ; அதாவது, ஒரே எழுத்து முறைகொண்டு அந்த மூன்று மொழியும் கற்கச் செய்ய வேண்டும். அப்படியானால், எந்த எழுத்து முறையைப் போற்றுவது என்ற சிக்கல் எழுகின்றது. இந்தியாவில் பெரும்பான்மையோருடைய எழுத்துமுறை தேவநாகரி. உலகத்திற்குப் பொதுவாக வளர்ந்து பரவியுள்ள

எழுத்துமுறை ரோமன் முறை. இந்த இரண்டில் எதைப் போற்றுவது? பண்டித ஜவஹர்லால் நேரு ஒரு காலத்தில் ரோமன் எழுத்தால் இந்தியும் கற்றுக் கொள்ளலாம் என்று கூறியவர். சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸின் தலைமையுரை ஆற்றியபோது, ரோமன் எழுத்தால் இந்தி எழுதப்படவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார். இராணுவத்தில் உள்ள வர்களுக்கு ரோமன் எழுத்துக்களால் இந்தி கற்பிக்கும் முறை நெடுங்காலமாக இருந்துவருகிறது. ஆனால் இன்று எடுத்துச்சொல்ல ஆள் இல்லை. காரணம், பலர்க்கு மொழிவெறி எழுத்துவெறியளவிற்கு வளர்ந்துள்ளது. 1, 2, 3 என்ற பழகிய எண்களையும் தேவநாகரி எண்களால் எழுத வேண்டும் என்று எழுத்துவெறி பெருகியுள்ள நாடு வடநாடு. இந்த நிலை யில் தேவநாகரி எழுத்து வேண்டாம் என்று கூற முற்படுகின்றவர் வெறியாளரின் குண்டுக்கு இரை யாகும் நெஞ்சத் திட்பம் உடையவர்களாக இருக்க வேண்டுமே. காந்தியடிகளுக்குப் பிறகு அந்தத் திட்பம் குறைந்துவருகிறது. வெறியர் கை ஓங்கி வருகின்றது. நடுநிலையாளரின் வாயும் அடங்கி வருகின்றது. கவிதை தவிர மற்ற எல்லா வற்றையும் ஒரு மொழியிலிருந்து மொழிபெயர்த்துப் படித்தால் போதும் என்ற தெளிவு வளர வேண்டிய இந்நூற்றாண்டில், சமஸ்கிருத மொழி கற்றுச் சமஸ் கிருத இலக்கியங்களைக் கற்காதவன் நாகரிக அறிவு நிரம்பாதவன் என்று 'பிரசாரம்' செய்யப்பட்டு வரு கிறது. சமஸ்கிருதமே நாட்டின் பொதுமொழியாக, ஆட்சிமொழியாக விளங்கவேண்டும் என்று பெரிய இடத்துப் பேச்சுக்களிலும் ஒரு சிலரால் வற்புறுத்தப் பட்டு வருகிறது. மொழிவெறி இந்த அளவிற்கு வளர்ந்துவரும் இந்நாளில், அதன் மகவாகிய எழுத்து

வெறியைத் தணிக்க வழி என்ன? வல்லொலிக் ககரம் மெல்லொலிக் ககரம் இந்தஇரண்டு ககரங்கள்போதும், ஹகர ஒலியுடன் கூடிய வேறு இரண்டு ககரங்கள் வேண்டியதில்லை; அவை இல்லாமலே மொழி விளங்க முடியும் என்று காரணங்கள் எடுத்து விளக்கினாலும் ஆத்திரம்கொண்டு குற்றம் சாட்டுகின்றவர்கள், உங்கள் எழுத்து வேண்டாம் என்றால் பொறுத்திருப்பார்களோ? அச்சுக்கும் டைப்புக்கும் இடையூறான கூட்டெழுத்துக்களை விட்டுவிடுங்கள் என்று முறையிட்டால் சினந்து கூக்குரலிடுகின்ற வெறியுடைய அவர்கள், தேவநாகரியை விட்டுவிட்டுச் சிற்சில மாறுதல்கள் செய்துகொண்டு ரோமன் எழுத்தில் எழுதுங்கள் என்று சொன்னால், சொல்வதைக் கேட்கப் பொறுமையாவது இருக்குமோ? சிறுபான்மையோரின் நலம் கருதி இந்தச் சிறு தியாகமாவது செய்வார்களா?

சிறு தியாகமும் செய்யப் போவதில்லை எனின், இந்த நாட்டில் எல்லோருக்கும் ஒத்த உரிமை உண்டு என்று சொல்லாமலிருப்பது நல்லது. எல்லோருக்கும் ஒத்த உரிமை வழங்கும் நாடு இது என்று உலகத்தில் பறையறைந்து புகழ்பெற முயலும் முயற்சியையாவது நிறுத்த வேண்டும். அந்தப் புகழையாவது தியாகம் செய்ய வேண்டும்.

# மொழிச்சுவை

ஒவ்வொருவரும் மூன்று மொழி நான்கு மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளைச் சுற்றி வந்தவர்கள் சிலர் அங்கெல்லாம் மாணவர்கள் மூன்று நான்கு மொழிகளைக் கற்பதாகச் சொல்கிறார்கள். பிரெஞ்சு நாட்டில் பார்த்தேன், அங்கு மாணவர்கள் மூன்று மொழி கற்கிறார்கள் என்கிறார் ஒருவர். ஸ்விட்ஸர்லாந்து மாணவர்கள் நான்கு மொழி கற்கிறார்கள் என்கிறார் மற்றொருவர். ஒருசில மாணவர்கள் ஐந்து மொழியும் கற்றிருக்கின்றனர் என்கிறார் மற்றொருவர். இவ்வாறு கூறி, தமிழ் மாணவர்கள் தமிழ் தவிர வேறு இரண்டு மூன்று மொழிகளும் கற்பது நல்லது என்று அறிவுறுத்த முயல்கிறார்கள். நோக்கம் நல்ல நோக்கமாக இருக்கலாம். ஆனால் பயன்படாததாக உள்ளது. தமிழ் மாணவர்களுக்குத் தாய்மொழி என்று ஒன்று இல்லையானால் அவர்களுடைய அறிவுரையைப் போற்றுவது எளிதாக இருக்கும். அந்தத் தாய்மொழி பண்படாத மொழியாக, இலக்கிய வளமற்ற மொழியாக இருந்தாலும் தமிழர்கள் அதைக் கற்காமலே புறக்கணிக்கவும் முடியும். ஆனால் தமிழர்களின் பொல்லாத காலம், அவர்களின் பண்பட்ட தாய்மொழியையும் ஒரு மொழியாகப் போற்றிக் கற்கவேண்டியுள்ளது. தமிழர்களுக்கு உலகத்தொடர்பு தேவையாயிருத்தலால் உலக மொழியாகிய ஆங்கிலத்தையும் கற்கவேண்டியுள்ளது. தமிழர்களின் நாடு இந்திய மத்திய அரசாங்கத்திற்கு உட்பட்டதாக இருப்பதால் இந்தியாவின் பொது மொழியாகிய இந்தியும் வேண்டும் என்கின்றனர்.

இந்த மூன்று மொழியும் போதாது என்று நான்காவதாக வடமொழியும் ஒவ்வொருவரும் கற்கவேண்டும் என்று சிலர் விரும்புகின்றனர். வடமொழி இந்திய நாட்டுக் கலையையும் பண்பாட்டையும் விளக்கும் கருவூலங்களைக் கொண்டிருப்பதால் அம்மொழியை ஒவ்வொருவரும் கற்கவேண்டும் என்பது அவர்களின் விருப்பம். இவ்வாறு மூன்று மொழியோ நான்கு மொழியோ கற்றுத் துன்பப்படவேண்டிய நிலைமை குறித்துத் தமிழர்கள்மேல் இரக்கம் கொள்ளல் வேண்டும். அவ்வாறு இரக்கம் கொள்ளாமல் மூன்று நான்கு மொழிகளைக் கற்பது எளிது என்று ஊக்கம் ஊட்ட முன்வருகின்றனர் தலைவர்கள் சிலர். அதற்காகவே ஐரோப்பிய மாணவர்கள் பல மொழி கற்று முன்னேறுவதை எடுத்துக்காட்டாகக் கூறிவருகின்றனர்.

ஆனால் அவர்கள் சில உண்மைகளை மறந்துவிடுகின்றனர். அவற்றுள் ஒன்று பல மொழிகள் கற்பதாலேயே ஒருவன் அறிஞனாகி விடமுடியாது. அதற்கு மாறாக அறிவை வளர்ப்பதற்குரிய நேரத்தில் பெரும் பகுதியைப் பிறமொழிச் சொற்களைக் கற்பதற்காகச் செலவிட்டு அறிவை வளர்க்கும் முயற்சியில் குறைபாடு நேரலாம். உலகத்தில் அழியாப் புகழுடைய காவியங்களை எழுதிய புலவர்கள், திறம்பட ஆட்சி நடத்திய தலைவர்கள், புதிய விஞ்ஞானக் கருவிகளைக் கண்டு உதவிய அறிஞர்கள் ஆகியோரில் பலர் பல மொழி அறிவு பெற்றவர்கள் அல்லர். அவர்கள் பெரும்பாலும் தம் தாய்மொழிக் கல்வி அளவில் நின்று தெளிந்த அறிவு பெற்றுத் துலங்கியவர்கள். இன்றும் இது உண்மையாதலைப் பல நாடுகளை ஆராய்ந்து காணலாம். பிற மொழிக் கல்வி பற்றி அவ்வளவாகக் கவலைப்படாத அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடு

களில்தான் முன்னேற்றம் விரைந்து காணப்படுகின்றது. தமிழர்கள் ஆங்கிலத்துக்காக 'உயிரைக் கொடுப்பது போல்' ஜப்பானியன் எவனும் தொல்லைப்படுவதில்லை. ஆங்கிலேயரைப் போலவே பேச வேண்டும், ஒலிக்க வேண்டும் என்று தமிழர்கள் பெருமுயற்சியுடன் கற்கின்றார்கள். அதனால் காணும் பயனோ மிகக் குறைவு. அது ஆகாத வேலை என்பதை ஜப்பானியர் முதலானோர் உணர்ந்துகொண்டுள்ளனர்; அதனால்தான் முன்னேறுகின்றனர். ஆங்கிலேயர் பேசுவதைக் கேட்டும் எழுதுவதைக் கற்றும் பொருளுணர்ந்து கொண்டால் போதும் என்பதே அவர்களின் நோக்கம். ஆங்கிலேயனைப் போல் பேசவேண்டும், ஒலிக்க வேண்டும் என்ற வீண் கனவை அவர்கள் காண்பதில்லை. அதனால் முயற்சியில் தோல்வியுறுவதும் இல்லை. அவசியம் நேர்ந்தால் தவறான ஆங்கிலத்தைப் பேசவும் எழுதவும் தயங்குவதும் இல்லை. எப்படியோ தங்கள் கருத்தைத் தெரிவித்துவிட்டால் போதும் என்று அமைகின்றார்கள். ஆனால் தமிழ் நாட்டில் நேர்மாறான நிலைமை இருக்கிறது. தமிழ் நாட்டுப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலமே உயிராக உள்ளது. மாணவர்களின் உயிரை வாங்கும் உழைப்புக்குக் காரணமாக இருக்கிறது. எதிர்காலத்தில் இந்தி கட்டாய மொழியாக ஏற்பட்டால் அதுவும் இவ்வாறு தமிழர்களுக்குத் தொல்லை கொடுக்கும். இன்று தமிழர்கள் ஆங்கில மொழிக் கல்விக்கு மிக்க ஆர்வம் காட்டி அறிவுக் கல்வியை இழந்து வருதல் போல்-எதிர்காலத்தில் ஆங்கிலம் இந்தி ஆகிய இரு மொழிகளுக்காகவும் பெருமுயற்சி செய்து அறிவுக் கல்வியைப் பாழ்படுத்திக்கொள்வார்கள். ஆகவே பிறமொழி எதற்காக எந்த அளவிற்குக் கற்பது என்று வரையறை செய்யாமல், மூன்று நான்கு மொழி

களைக் கற்குமாறு தாராளமாக அறிவுறுத்தல் நன்று அன்று.

இரண்டாவதான உண்மை: ஐரோப்பிய மாணவர்களுக்குத் தம் தாய்மொழியைப் பற்றித் தாழ்வு மனப்பான்மை இல்லை. தன் குஞ்சு பொன் குஞ்சு என்னும் காக்கைகளாக உள்ளனர் அவர்கள். தமிழர்களோ பொன் குஞ்சு பெற்றும் ஏங்கும் பேதை நெஞ்சம் உடையவர்களாக உள்ளனர். தமிழர்களில் பெரும்பாலோர்க்கு மொழிப்பற்று இல்லை. (வீட்டுப் பெயர்கள், கடைப் பெயர்கள், விற்பனைச் சீட்டுக்கள், கடிதத் தலைப்புக்கள், கடித முகவரிகள், அளவளாவும் பேச்சுக்கள் முதலியவற்றைக் காணின் இந்த உண்மை விளங்கும். இந்திய நாட்டிலேயே மொழிப் பற்றுக் குறைந்த இனம் தமிழினம் என்பதும் இவற்றால் விளங்கும். மொழிப்பற்று உடைய படித்த தமிழருள் பலர்க்குத் தம் தாய்மொழி எந்தக் கருத்தையும் உணர்த்தும் கருவியாக விளங்க வல்லது என்ற நம்பிக்கை இல்லை. அந்த நம்பிக்கைகொண்ட சிலருள்ளும் பெரும்பாலோர் ஆங்கிலமே கல்விமொழியாக இருக்க வேண்டும் என்றும், அதுவே ஆட்சிமொழியாகவும் இருக்க வேண்டும் என்றும் ஆசை கொண்டவர்களாய் உள்ளனர். ஆகையால் இந்த நிலைமையை மாற்றாமல் இவர்கள் ஐரோப்பிய மாணவர்களைப் போல் மூன்று நான்கு மொழிகளைக் கற்கத் தொடங்குதல் கூடாது. ஐரோப்பிய மாணவர்கள் தம் தாய்மொழியின் வாயிலாகவே அறிவுக் கல்வி பெறுகின்றனர். மற்ற மொழிகளை வேறு காரணங்களுக்காகக் கற்கின்றனர். அவ்வளவே அல்லாமல் பயபக்தியுடன் கற்பதும் இல்லை; அந்நிய மாகத்துடன் கேற்பதும் இல்லை. பிறமொழியில் புலமையோ திறமையோ பெற விரும்புவதும் இல்லை. ஆதலின் அவர்கள் நிலைமை முற்றிலும் வேறாகும்.

மூன்றாவது உண்மை: ஐரோப்பிய மாணவர்கள் மூன்று மொழி கற்பது என்றால் அவர்கள் கற்கும் எழுத்து ஒரே வகை; ஒலி ஒரே வகை; இலக்கணமும் ஏறக்குறைய ஒரே வகை; சொற்களும் பெரும்பாலும் தொடர்புடையவை.

தமிழ் மாணவன் ஒருவன் மூன்று மொழி கற்பது என்றால், வெவ்வேறான மூன்று எழுத்து முறைகள் கற்க வேண்டும்; வேறுபட்ட மூன்று வகை ஒலிகளைக் கற்க வேண்டும்; தொடர்பு இல்லாத மூன்று வகை இலக்கணம் கற்க வேண்டும். இயைபு அற்ற வெவ் வேறுசொற்களையும் கற்க வேண்டும். ஆகவே பிரெஞ்சு மாணவன் ஒருவன் மூன்று மொழி கற்பது, நடக்கும் ஒருவன் வேகமாக நடப்பது போன்றது. தமிழன் மூன்று மொழி கற்பது, நடப்பதும் நீந்துவதும் தாவு வதும் போன்ற மூன்று வெவ்வேறு தொழில்களாகும். காரணம் ஐரோப்பிய மொழிகளெல்லாம் உறவு உடைய ஓரின மொழிகள். ஆனால் தமிழும் ஆங்கில மும் இந்தியும் வெவ்வேறு போக்கு உடைய மொழிகள்.

இங்கு மற்றொன்றும் கருதல் வேண்டும். தமிழன் நிலைமையைவிடக் கன்னடத்தான், மலையாளி, தெலுங் கன், மராட்டியன், வங்காளி ஆகியவர்களின் நிலைமை ஒருவகையில் சிறிது மேலானதாகும். எவ்வாறெனில் அவர்கள் மூன்று மொழி கற்பதானாலும் மூன்று ஒலி வகை இல்லை; இருவகை ஒலிமுறையே கற்றால் போதும். இந்தி மொழியின் ஒலி முறையும், கன்னடம் முதலியவற்றின் ஒலி முறையும் ஏறக்குறைய ஒரே வகையானவை. எழுத்துக்கள் வெவ்வேறாயினும் ஒலிகள் பெரும்பாலும் ஒத்திருப்பவை. ஏனெனில் கன்னடம் முதலியவற்றில் மிகக் கலந்துள்ள வட மொழியே இந்தியின் வளர்ப்புத்தாய் ஆகும். அதனால் தான் இந்திமொழி எழுதப்படும் தேவநாகரி எழுத்து

முறைப்படியே கன்னடம் முதலியவற்றின் எழுத்து முறையும் அமைந்துள்ளது. தமிழிலோ அந்த எழுத்து முறை வெற்றி பெருமல் போய்விட்டது. கிரந்த எழுத்து வாழ முடியாமல் தோற்ற இடம் தமிழ் நாடு. ஆகவே சிறுவர்களும் மூன்று மொழி கற்க வேண்டும் என்று வற்புறுத்தும் செயல் இன்றுவரை தமிழ் பெற்றுவரும் வெற்றிக்காகப் பழிவாங்கும் செயலாக உள்ளது.

இந்திய நாட்டின் ஒற்றுமைக்காகத் தமிழர்கள் இந்தச் சிறு துன்பத்தை ஏற்று, மூன்று எழுத்து, மூன்று ஒலி, மூன்று இலக்கணம், மூன்றுவகைச் சொற்கோவை ஆகியவற்றைக் கற்கக்கூடாதா என்று கேட்கலாம். இது நல்ல கேள்விதான். தமிழர்களிடம் இந்தத் தியாகம் எதிர்பார்க்கத் தக்கதுதான். ஆனால் இந்திய நாட்டின் ஒற்றுமைக்காக மற்றவர்கள் மொழித்துறையில் செய்வது என்ன? அவர்கள் ஒரு சிறு துன்பத்தை ஏற்றுக்கொள்ளுதல் கூடாதா? துன்பமும் அன்று; ஒரு மாறுதலை வரவேற்கக் கூடாதா? அந்த மாறுதல் வேறொன்றும் இல்லை. பண்டித நேருவும் சுபாஷ் சந்திர போஸும் முதல் முறையாகத் தலைமைதாங்கிய காங்கிரஸ் பேரவைகளில் அந்தந்தத் தலைமையுரைகளில் அவர்கள் உணர்த்திய ஒரு மாறுதலே யாகும். அதாவது இந்திமொழியை A B C D என்ற ரோமன் எழுத்தில் எழுதுவது ஆகும். பண்டித நேருவின் தங்கையின் திருமண அழைப்பிதழ் இவ்வாறே அச்சிட்டு அனுப்பப்பட்டது. அன்று காங்கிரஸ் தலைமை உரைகளில் முழங்கப்பட்ட இந்தக் கருத்தை இன்று கேட்டதும் சீற்றம் கொள்ளும் நிலைமையில் வடநாட்டார் உள்ளனர்.

சீற்றம் கொள்வதால் பயன் இல்லை. இந்திய நாட்டின் ஒற்றுமையைக் கருதிப் பொறுமையோடு

எண்ணிப் பார்க்க வேண்டும். ஐயாயிரம் ஆறாயிரம் ஆண்டுகளாக இலக்கிய வளத்தோடு பண்பட்டு வந்த தமிழையும் தேவநாகரியில் எழுத வேண்டும் என்று வடக்கேயிருந்து குரல் கேட்கின்றது. இந்திமொழிக்கு இத்தகைய வரலாற்றுப் பழமையும் இலக்கிய வளமும் இல்லை. அது நேற்றைய குழந்தை; இன்றைய சிறு பிள்ளை. அதன் உடையில் மாறுதல் செய்வதால் தலை முழுகிப் போய்விடாது. எழுத்துக்களை மாற்றி அமைப்பதால் அதன் பழமைக்கோ வளமைக்கோ பழுது ஏற்படாது. இனிமேல் வளர வேண்டிய அந்த மொழி இந்தப் புதிய எழுத்தில் வளர்ந்து உருப்படி ஆகலாம். ஆகையால் எழுத்து மாறுதல் என்றதும் சீற்றம் கொள்ள இடம் இல்லை.

இந்தி மொழியை இந்தியா முழுதும் கற்க வேண்டும் என்று கூறுவது இந்தியின் இலக்கியத்தைப் பரப்புவதற்காக அன்று: இந்தியைக் காப்பதற்காகவும் அன்று; இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பதற்காகவே என்று கூறப்படுகிறது. ஆகையால் ஏன் இந்த மாறுதல் செய்யக் கூடாது? அன்றாட அரசியல் நடைமுறைக்கும், வாணிகப் பழக்கத்திற்கும், மக்கள் போக்குவரத்திற்கும் வேண்டிய அளவிற்குப் பயன் படுவதற்காகவே இந்தி வேண்டும். அதற்கு உலக மெல்லாம் செல்வாக்குப் பெற்ற அந்த ரோமன் எழுத்தையே துணைக்கொண்டால் மாணவர்களுக்கு எழுத்துச் சுமையாவது குறையும். இவ்வாறு செய்வது இந்தி மொழிக்குப் புதியதும் அன்று. இது முன்னமே பழக்கப்பட்டு வந்துள்ள முறைதான். பல ஆண்டுகளாகவே ராணுவத் துறையில் இந்தி மொழியை ரோமன் எழுத்தில் கற்கும் பழக்கம் இருந்துவருகிறது. ஒரு துறையில் இருந்துவரும் அந்தப் பழக்கத்தையே மற்றப் பொதுத் துறைக்கும் நீடித்தால்

போதும். இவ்வாறு செய்ய முனைந்தால் அந்த நல்ல செயல் உண்மையாகவே இந்திய நாட்டின் ஒற்றுமையை நாடுகிறார்கள் என்பதற்கு அறிகுறியாகும். இல்லையானால் நாட்டு ஒற்றுமை என்ற பெயரால் வேண்டாத மக்களின் தலையில் சுமை ஏற்றும் முறையாகும்

# எதிர்பாராதவை

தனி மனிதனுடைய வாழ்க்கையில் எண்ணிய படியே எல்லாம் நடைபெறுவதில்லை. மக்கள் அமைக்கும் அரசாங்க முறையிலும் சில வேளையில் எண்ணிய படியே எல்லாம் நடப்பதில்லை.

தனி மனிதனுடைய வாழ்க்கை அவன் ஒருவனுடைய விருப்பு வெறுப்பை ஒட்டி நடக்கக்கூடியது மட்டும் அன்று. அவன் வாழும் குடும்பத்திலும் ஊரிலும் நாட்டிலும் உள்ள பலருடைய விருப்பு வெறுப்புகளை ஒட்டியே பெரும்பாலும் அவனுடைய வாழ்க்கை இடம் பெறுகிறது. அவைமட்டும் அல்லாமல், இயற்கையின் ஆணைக்கும், அவனுடைய வாழ்க்கை கட்டுப்பட வேண்டியுள்ளது. வாழ்க்கைக்கு அடிப்படையாக உள்ள அவனுடைய உடம்பு மண், நீர், தீ, காற்று ஆகியவைகளால் அமைந்தது. அதனால் இயற்கையின் தட்பம் வெப்பம் முதலியவை அவனுடைய உடம்பைத் தாக்கும் ஆற்றல் பெற்றிருக்கின்றன. அவற்றை வெல்ல மனிதன் எவ்வளவோ முயற்சி செய்கிறான். ஆயினும் அவனுக்கும் இயற்கைக்கும் போர் நடந்துகொண்டே இருக்கிறது, அப்போருக்கு ஒரு முடிவு இருப்பதாகவே தெரியவில்லை. ஆகையால் தனி மனிதனுடைய வாழ்க்கையில் எண்ணியபடி எல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்க முடியவில்லை.

ஆனால் மக்கள் அமைத்துக்கொள்ளும் அரசாங்கத்தில் இப்படிப்பட்ட பெரிய தடை ஒன்றும் இல்லை. ஆட்சிமுறை பெரும்பாலோர் எண்ணி வகுக்கின்ற வழியில் நடைபெற முடியும். தனி மனிதனுடைய

வாழ்க்கையில் எதிர்பாராதவை நிகழ்வது பெரும் பான்மை என்றால், அரசாங்க முறையில் எதிர்பார்த் தவைகளே பெரும்பாலும் நிகழ வேண்டும்.

அரசாங்கத்திலும் சிறுபான்மையோர் எண்ணுவ தெல்லாம் நிறைவேறுவது அருமையே. ஏன் எனில், பெரும்பாலோரின் விருப்பத்தை நிறைவேற்றுவதே அரசாங்கக் கடமை ஆகின்றது. கூடியவரையில் சிறுபான்மையோரைத் தழுவி அவர்களுக்கு வேண் டியவற்றைச் செய்து உதவ முடியும். ஆனால், பெரும் பாலோரின் தேவைக்கும் விருப்பத்திற்கும் மாறான பகுதிகள் நடைபெற முடியுமா? முடியாது. சிலருக் காகப் பலர் தம் உரிமை இழந்து வாடுவதோ, நன்மை இழந்து துன்புறுவதோ நடக்காது.

ஆகையால் பெரும்பாலோரின் விருப்பத்தை நிறை வேற்றுவதே அரசாங்கத்தின் முறையான போக்கு. இதுவே அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் மக்கள் எதிர்பார்ப்பது.

ஆனால் தடுக்கக்கூடியதைத் தடுக்காமல் விடுவதே குறையாகும். அது குடியரசு முறை வேறொன்றாத தால் ஏற்படுவதாகும். இவ்வாறு நிகழ்வனவே உண் மையில் எதிர்பாராதவை என்று கூறத்தக்கவை.

ஒரு நாட்டின் உரிமைப்போர் வெறுங் கல்லுக்கும் மண்ணுக்கும் உரிமை பெற்றுத் தரும் போர் அன்று. கருத்துக்கும் வாழ்வுக்கும் உரிமை பெற்றுத் தரும் போரே ஆகும். கருத்திலும் வாழ்விலும் மொழியே உயிர் போன்ற சிறந்த கருவியாகக் கலந்துநிற்கிறது. ஆகவே நாட்டு உரிமை என்பது நாட்டு மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாத மொழிக்கும் உரிமை ஆகும். இதனா லேயே சிலர் நாட்டுப்பற்றும்மொழிப்பற்றும் இணைந்து செல்வன என்று கருதுவர். ஆதலின் நாட்டுப் பற் றுக் கொண்டவர் மொழிப்பற்றும் உடையவராக

விளங்குவர் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பாராமல் நிகழ்வது முற்றிலும் மாறாக உள்ளது. தமிழ்மொழியில் அரசாங்க நடைமுறைகளை நடத்த முடியாது என்றும், அதற்குப் போதுமான சொற்கள் இல்லை என்றும் சிலர் கருதுகிறார்கள். அரசாங்கம் ஆணை பிறப்பித்துச் சில மாவட்டங்களில் தமிழில் கடிதங்களையும் மற்றவைகளையும் எழுதுமாறு செய்தும், அந்த முயற்சி வெற்றி பெறாது என்று காட்ட அதிகாரிகள் முன்வருகிறார்கள். லங்காஷயர் மில் துணியைப் போல் மெல்லிய ஆடையை இந்நாட்டு மில்லில் உண்டாக்க முடியாமலிருக்கலாம். அதற்காக நாம் பிற நாட்டுத் துணியை வாங்க முன் வரவில்லை. மென்மை குறைந்த ஆடையாக இருந்தாலும் நம் நாட்டு ஆடையை உடுத்துவதே நாட்டுப் பற்று என்று அன்று உணர்ந்தோம். அதுபோலவே, ஆங்கிலம் போல் திறம்பட எழுத முடியாவிட்டாலும், தமிழில் நடத்துவதே உரிமை யுணர்ச்சிக்கு அடையாளம் என்று உணர வேண்டும். ஆனால் தமிழ்மொழி அவ்வளவு பிற்போக்கான மொழியும் அன்று. இலக்கிய வளமும் சொல்லாக்கச் செல்வமும் உடைய மொழி தமிழ். ஆகையால் உரிமை உணர்ச்சிக்கு மாறாக இவ்வாறு சிலர் கருதுவது எதிர்பாராத ஒன்றாகும்.

தமிழ்மொழி வாயிலாகவே உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ் மாணவர்கள் கல்வியறிவு பெற வேண்டும் என்பது எதிர்பார்த்த நிலைமை. நல்லோர் முயற்சியின் பயனாக இன்று உயர்நிலைப் பள்ளிகள் பலவற்றில் தமிழ் எதிர்பார்த்த இடத்தைப் பெற்றுவிட்டது. இது போற்றி மகிழக் கூடிய முன்னேற்றமாகும். ஆனால் கல்லூரிகளில் தமிழ் வாயிலாகக் கற்பித்தல் என்றால் பலரும் அஞ்சுகிறார்கள். தமிழில் போதுமான நூல்கள்

இல்லை என்று நொண்டிச் சாக்குச் சொல்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளுக்கோ பாடப்புத்தகம் என்பவை கட்டாயமாகத் தேவையாக உள்ளன. கல்லூரிகளில் இன்ன இன்ன பொருள் பற்றிப் பாடம் நடைபெறும் என்று அறிவித்தால்போதும். அந்தந்தப் பொருளைப் பற்றி எந்த எந்த நூலிலிருந்தாவது கற்றுத் தெரிந்து கொள்ளலாம். ஆகையால் பாடப்புத்தகங்கள் தமிழில் எழுதப்படும் வரையில் இந்த முயற்சி காத்திருக்க வேண்டியதில்லை. கற்பிக்கும் ஆசிரியர் தமிழில் எண்ணத் தெரிந்தவராக, தமிழ் பேசத் தெரிந்தவராக இருந்தால் போதும். அவர் ஆங்கில நூல்களில் கருத்துக்களைப் படித்துவிட்டுக் கல்லூரி வகுப்புக்களில் தமிழில் கற்பிக்கலாம். மாணவர்களும் ஆசிரியர் கற்பிப்பதைத் தமிழில் கேட்டறிந்து நூல்நிலையத்தில் ஆங்கிலப் புத்தகங்களைப் பார்த்து ஒப்பிட்டு அறிவை வளர்க்கலாம். சில சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்கள் கிடைக்காத குறையால், ஆசிரியர் சிறிது தடுமாறலாம். தேர்வுகளில் எழுதும்போது மாணவர்களும் சிறிது தடுமாறலாம். இந்தச் சிறு சிறு தடுமாற்றங்களுக்காக அஞ்சி நல்ல முயற்சிக்கும்—உரிமை உணர்வோடு செய்யும் சீர்திருத்த முயற்சிக்கும்—அறிஞர் முட்டுக்கட்டையாக இருப்பது கூடாது. தொடர்ந்து பல ஆண்டுகள் ஆசிரியர்கள் இவ்வாறு கற்பிப்பதும், மாணவர்கள் இவ்வாறே கற்பதும் நிகழ்ந்துவந்தால், பத்து ஆண்டுகளில் இவர்களில் சிலர் நூலெழுதும் அளவிற்கு முன்வந்துவிடுவார்கள். தமிழ் நூல்களை ஆசிரியர்களும் மாணவர்களும் தேடும் தேவையை முன்னே ஏற்படுத்திவிட்டால், தேவையை உணர்ந்து நூலெழுதும் எழுத்தாளர்கள் தோன்றிவிடுவார்கள். தேவையை நல்ல வகையில் ஏற்படுத்துவதே முதல் கடமை. அவ்வாறு செய்வதை விட்டு, நூல்கள் இல்

லாத குறையைக் காட்டித் தமிழ் வாயிலாகக் கற்கும் முயற்சியைத் தடைப்படுத்துவது விந்தையாகவே உள்ளது. இதுவும் எதிர்பாராததே. நாடு உரிமை பெற்ற பின் இடர்ப்பாடுகளும் தடுமாற்றங்களும் ஏற்படும் என்பதை அறிந்தும் உரிமை பெற அஞ்சாத நாம், மொழிவகையில் மட்டும் ஏன் நேர்மாறாகக் கருத வேண்டும்? குறையிருந்தாலும் நம் ஆட்சியே வேண்டும் என்று போராடியது போல், குறையிருந்தாலும் நம் மொழிக் கல்வியே வேண்டும் என்று உணர வேண்டாமா?

மற்றும் ஒன்று. ஒரு மாகாணத்தில் மக்கள் யாராக இருந்தாலும், பழங்குடியாக இருந்தாலும் அல்லது புதிதாகக் குடிபுகுந்தவராக இருந்தாலும், அந்த மாகாணத்து மொழியைக் கற்கவேண்டும். இது எதிர்பார்த்தது. ஆனால் தமிழ் மாகாணத்தில் தமிழைப் படிக்காமல் பிறமொழி படித்துத் தேறவும் பட்டம் பெறவும் வழி இன்னும் இருக்கிறது. தமிழர்கள் வேறு எந்த மாகாணத்திற்குச் சென்றாலும், அங்கே தமிழைப் படிக்கப் பள்ளிக்கூடம் இல்லை. தமிழர் பெருந்தொகையினர் வாழ்வதாய்த் தமிழ்நாட்டோடு ஒட்டியுள்ள சித்தூர் மாவட்டக் கிராமங்களிலும் திருப்பதி நகரத்திலும் தமிழில் கற்பிக்கும் தொடக்கப் பள்ளி ஒன்றும் இல்லை. பம்பாயிலும் கல்கத்தாவிலும் தமிழில் படித்துப் பட்டம் பெற வழி இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் எந்த மாகாணத்தவர் வந்தாலும், தமிழல்லாமல் வேறு மொழி படித்துப் பட்டம் பெற வழி இருக்கிறது. அது மட்டும் அன்று. தமிழ் நாட்டுத் தமிழனே வேறு மொழி படித்துப் பட்டம் பெற வாய்ப்பு இருக்கிறது. அது மாத்திரம் அன்று. தமிழே தமிழர்க்குக் கட்டாய பாடமாகாத இந்த நாட்டில் சமஸ்கிருதத்தை எல்லா மாணவர்க்கும்

கட்டாய பாடமாக்க முயற்சியும் நடைபெறுகிறது. மற்ற அறிவுப் பாடங்களில் வரலாறு முதலிய ஏதேனும் ஒன்றனுக்கு ஈடாகச் சமஸ்கிருதம் படிக்க இடந்தரும் நேரிய முறையைக் கைவிட்டு, தாய்மொழியைப் புறக்கணித்துவிட்டுச் சமஸ்கிருதம் படிக்கவும் வாய்ப்பு இருக்கிறது. நம் உரிமையை யார் எப்போது எவ்வகையில் பறித்தாலும் அவரோடு போராட வேண்டும் என்று நாட்டுத் துறையில் உணர்ந்த மக்கள், மொழித்துறையில் மட்டும் அதற்கு மாறாக உரிமையைப் பறிப்பதையும் பறிகொடுப்பதையும் கடமையாகக் கொள்வது ஏன்? இதுவும் எதிர்பாராததே.

# அடிமை மனப்பான்மை

தமிழ் நாட்டில் தமிழ் படிக்காமலேயே பட்டம் பெறுவதற்கு வாய்ப்பு இருந்துவந்தது; இருக்கின்றது. ஆங்கிலேயரும் ஆங்கிலோ இந்தியரும் நடத்தும் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் (கான்வெண்ட் பள்ளிகளில்) தமிழ்க் குடும்பத்தார் ஒருவர் தம் பிள்ளையைச்சேர்த்து விட்டால் போதும். ஏ. பி. சி. என்ற எழுத்துக்கல்வி தொடங்கிச் சொற்களையும் வாக்கியங்களையும் ஆங்கிலத்திலேயே கற்கத் தொடங்கலாம். அதே போக்கில் கணக்கு, வரலாறு, நிலநூல், விஞ்ஞானம் முதலிய பல துறைகளில் பல பாடங்களையும் ஆங்கிலத்திலேயே கற்று உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடிக்கலாம்; மெட்ரிகுலேஷன் தேர்விற்குச் செல்லலாம்; தமிழ் கற்காமலே செல்லலாம். பிறகு கல்லூரியில் சேர்ந்து இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்காமல் விதிவிலக்குப் பெற்று ஆங்கிலத்தோடு உறவுடைய பிரெஞ்சு மொழியோ வேறொன்றோ கற்று இண்டர் மீடியட் தேறலாம். அதன் பிறகு இரண்டாம் மொழி இல்லாத ஒரு பட்டப் படிப்பில் புகுந்து பட்டமும் பெறலாம். மேல் நாடுகளுக்குச் சென்று திரும்பி வந்து தமிழ் நாட்டில் உயர்ந்த பதவிகளும் பெறலாம். இவ்வளவிற்கும் வழி இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன் கல்வி அமைச்சர் ஒருவர் உரிமை உணர்ச்சியுடன், தாய்மொழிப் பற்றுடன், செய்த திருத்தத்தினால் இந்தக் குறுக்கு வழிக்கு இடர்ப்பாடு நேர்ந்தது. தொடக்கத்திலிருந்தே ஆங்கிலப் பள்ளியில் பயில்வோரும் நாட்டு மொழியாகிய தமிழை அடியோடு புறக்கணிக்கஃமுடியாத நிலைமை ஏற்பட்டது.

ஆனால் அங்கிலேயிலும் ஒன்றைத் தவிர்க்க முடிய வில்லை. உயர்நிலைப்பள்ளிகளில் தமிழுக்கு ஈடாக வடமொழியை எடுத்துக்கொண்டால், வடமொழி ஆங்கிலம் ஆகிய இருமொழிப் பாடங்களையும், ஆங்கிலத்தின் வாயிலாக வரலாறு முதலிய பாடங்களையும் கற்று உயர்நிலைப் படிப்பை முடிக்கலாம், இவ்வாறே கல்லூரிப் படிப்பிலும் நாட்டு மொழியைக் கைவிட்டு வடமொழியைக் கற்றுப் பட்டப் படிப்பைப் பெறலாம். இந்த வாய்ப்பு இன்றும் உள்ளது.

பிரெஞ்சு மொழியையோ வட மொழியையோ படிக்க விரும்புகின்றவர்களைத் தடுப்பது நன்றன்று. ஆனால் நாட்டு மொழியாகிய தமிழுக்கு ஈடாக அவற்றைப் படிக்க அனுமதி தருதல் பொருந்தாது. கணக்கை விட்டுவிட்டு வடமொழி விரும்பினால் கற்கலாம். வரலாற்றிற்கு ஈடாகப் பிரெஞ்சு மொழி கற்கலாம். பிறமொழியார்வம் மிக்கவர்கள், வரலாறு முதலிய மற்றப் பாடங்களில் ஒன்றை விட்டு அம்மொழியைக் கற்க அனுமதி தரலாம். அவ்வாறன்றி ஒரு நாட்டில் வாழும் உரிமையை விரும்புகின்றவர்கள் அந்த நாட்டின் மொழியைப் புறக்கணித்து வேறொரு மொழியைக் கற்க இடந்தருதல் அந்நாட்டின் நன்மைக்கு இடையூறாகும்; மற்றொரு மொழியார்க்கும் இடையூறு ஆகும். ஏன் எனின் இவ்வாறு செய்தலே அந்த இரு மொழியார்க்கும் பகை வளர்வதற்குக் காரணமாகும்.

இந்த இடர்ப்பாட்டை நீக்கி நாட்டு மொழியின் ஆக்கத்திற்கு வழி கோலுவதற்கு முன்னமே வேறொரு வகையான இடர்ப்பாடும் வந்து சேர்கின்றது.

வட இந்தியாவின் பல்கலைக் கழகங்கள் சில இந்தி மொழியைப் போதனை மொழியாக்க முனைந்துள்ளன. பல மாகாணங்களில் இந்தி கட்டாய மொழியாக்கப் பட்டு வருகின்றது. தமிழ் நாட்டிலும் சில உயர்நிலைப்

பள்ளிகளிலும் சில கல்லூரிகளிலும் இந்தி பயிலும் மாணவரின் தொகை மிகுந்துவருகின்றது. தமிழும் ஆங்கிலமும் இரு மொழிகளாக எடுத்துப் படிப்பதற்கு ஈடாக இந்தியும் ஆங்கிலமும் எடுத்துப் படித்து உயர் நிலைப் படிப்பையும் கல்லூரிப் படிப்பையும் நிறை வேற்ற வாய்ப்பு ஏற்பட்டுவருகின்றது. இந்த வாய்ப் புத் தருகின்ற பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் மத்திய அரசாங்கத்தின் அன்புப் பார்வை கிட்டு கின்றது. அவைகளுக்கு மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியும் மிகுந்துவருகின்றது. சென்னையில் ஒரு பள்ளிக்கூடம் இந்த உதவிக்காகவே தமிழும் ஆங்கிலமு மாக இருந்த போதனையை இந்தியும் ஆங்கிலமுமாக மாற்றித் தமிழைக் கைவிட்டது. இவ்வாறு கல்வி கற்றுத்தேறியவர்களுக்கு மத்திய அரசாங்க அலுவ லகங்களின் ஆதரவு கிடைத்துவருகின்றது.

இந்தப் போக்கில் இந்தியும் கட்டாயமாகும் நிலைமை நேருமானால் மொழிப்பற்று உடைய தமிழன் மூன்று மொழிகளை (தமிழ், ஆங்கிலம், இந்தி) கற்று எதிலும் நிரம்பிய அறிவு பெற முடியாமல் அல்லல் படவேண்டி நேரும். மொழிப்பற்று இல்லாத தமிழன் இரண்டு மொழிகளை மட்டும் (இந்தி, ஆங்கிலம்) கற்று மத்திய அரசாங்கத்தின் அன்பையும் ஆதரவையும் பெற வல்லவனாவான். தாய்மொழிப் பற்றுக்குத் தண்டனையும் தாய்மொழித் துரோகத்திற்குப் பரிசும் தரும் முறை காலப்போக்கில் தெளிவாக அமைந்து விடும்.

சென்ற தலைமுறையில் இவ்வாறு நாட்டுமொழிக் குத் துரோகம் செய்தவர்கள் ஆங்கிலத்தை நன்றாகக் கற்றுத் தேற முடிந்தது. ஆங்கிலேயர்களின் அன்பை யும் ஆதரவையும் பெற முடிந்தது. அதே நிலைமை எதிர்காலத்தில் இந்தி மொழியாரின் உதவியைப் பெற

விரும்பும் தமிழர்களுக்கும் வாய்க்கும். தமிழைப் புறக்கணித்து இந்தியும் ஆங்கிலமும் மட்டும் கற்றவர்கள் மற்றத் தமிழர்களைவிட இந்தியில் பேச வல்லவர்களாக இருப்பார்கள். அதனால் அப்படிப்பட்டவர்களுக்கு மத்திய அரசாங்கத்திடம் மதிப்பும் உயரும். ஆனால், மறைமுகமாக மொழிப்பற்றுக்கு இடையூறு வளர்க்கும் இந்தப் போக்கு ஜனநாயகம் என்னும் மக்களாட்சி முறைக்கு இடையூறேயாகும். மொழி பற்றிய உரிமை விளங்க இடமில்லாத பொழுது மற்ற உரிமைகளும் போலியாய் மங்கிப் போகும். அன்று ஆங்கிலேயர் செய்த செயல் ஏகாதிபத்தியப் போக்காகும். ஆதலால் அந்தக் காலத்தில் நாட்டு மொழித் துரோகம் குற்றமாகக் கருதப்படவில்லை. அது மதிப்புடைய செயலாகவே கருதப்பட்டு வந்தது. மக்களாட்சியில் அதைக் குற்றமாகக் கருதினால்தான் உரிமைப் பேச்சுக்கு இடம் உண்டு. ஆகவே, தமிழ்நாட்டில் உள்ள எந்தப் பள்ளிக்கூடத்திலும், எந்தக் கல்லூரியிலும் எந்தக் குடும்பத்து மாணவன் கற்றாலும் அவன் தமிழைக் கட்டாய மொழியாகக் கற்குமாறு செய்ய வேண்டும். இல்லையானால் உரிமை உணர்ச்சி குன்றி நாட்டு மொழியைப் புறக்கணிக்கும் துரோக மனப்பான்மையும் மத்திய அரசாங்கத்தைக் காக்கை பிடிக்கும் அடிமை மனப்பான்மையுமே வளரும்.

> வேறு வேறு பாஷைகள்—கற்பாய் நீ
> வீட்டு வார்த்தை கற்கிலாய்—போ போ போ
>
> —பாரதியார்

# உண்மை ஒதுங்குகிறது

ஆட்டுவிப்போர் ஒருவர் அல்லது இருவர்; ஆடுவோர் பலர். பழங்காலத்தில் ஆட்சி, சமயம், பொருள், போர் முதலிய பல துறைகளிலும் இருந்து வந்த நிலைமை இதுதான்.

ஒருவனுடைய எண்ணப்படியே நாடு முழுதும் ஆடும். ஒருவன் கையிலேயே அரசியல் அதிகாரம், நீதி, செல்வம், உணவுப் பொருள் எல்லாம் திரண்டு இருந்த காலம் அது. அதனால் ஒருவன் நினைத்ததை உடனே எளிதில் செய்ய முடிந்தது. இப்போது காலம் மாறிவிட்டது. எதையும் யாரும் நினைத்த உடனே செய்ய முடியாத நிலைமை இன்று உள்ளது. பலருடைய கருத்தையும் முயற்சியையும் ஒருங்கே திரட்டினால்தான் ஒரு செயல் ஆற்ற முடிகின்றது. உணவுப் பொருளில் கட்டுப்பாடு ஏற்படுத்தல், விலையைக் கூட்டல், குறைத்தல், ஒரு புதிய மருந்தைப் பரப்புதல், நீதிச் சட்டத்தை மாற்றுதல், கல்விமுறையைத் திருத்துதல், சமயச் சடங்குகளைச் சீர்திருத்துதல் முதலான எந்தத் துறையிலும் இன்று ஒருவர் இருவருடைய ஆணையோ அதிகாரமோ செல்லாது. அவர் அமைதியாக இருந்து விடாமல் முயன்று பலருடைய கருத்தைத் தம் பக்கம் திருப்பிக்கொண்ட பிறகுதான் ஏதேனும் செய்ய முடிகின்றது.

உணவுப்பொருள் முதலியவை இன்று சிலருடைய பொறுப்பில் இல்லை. அவைகளெல்லாம் பலர்க்கும் பொதுவாக மாறிவருகின்றன. மக்கள் எல்லோரும் ஒத்த உரிமையுடையவர் என்ற கொள்கை பரவப்

பரவ எந்தத் துறையிலும் ஒரு சிலருடைய ஆட்சி என்பது குறைந்துகொண்டே வருகின்றது. மிகப் பெரும்பான்மை பெற்ற கட்சியில் நிகரற்ற தலைவராய் உள்ளவரும் தயங்கித் தயங்கியே செயலாற்ற வேண்டி உள்ளது. இவ்வாறு ஏறக்குறைய எல்லாத் துறையிலும் ஆட்டுவிப்போரின் செல்வாக்குக் குறைந்து கொண்டே வருகின்றது. ஆளுகின்றவர்க்குச் செல்வாக்கு ஏற்பட்டுவருகின்றது. சில காலங்களில்—தேர்தல் காலங்களிலும் புரட்சிக் காலங்களிலும் ஆடுவோர் ஆட்டும் வல்லமையைப் பெற்றுவிடுகின்றனர். மக்களின் விருப்பத்தை அறிந்து தலைவர்கள் நடக்கவேண்டிய நிலை ஆகின்றது.

தொழில், செல்வம், நீதி முதலிய பல துறைகளிலும் அந்த மாறுதல் ஏற்பட்ட போதிலும், அறிவுத் துறையில் மட்டும் மாறுதல் அந்த அளவிற்கு ஏற்படவில்லை. அறிவுத்துறையில் இன்னும் ஆட்டுவிப்போர் சிலராகவும், ஆடுவோர் பலராகவுமே உள்ளனர். இதற்குக் காரணம் என்ன? பழங்காலத்தைவிட இந்தக் காலத்தில் உணவுப்பொருள் ஒன்றுக்கு நூருக விளைந்துவிட வில்லை. மற்றச் செல்வங்களும் அளவு கடந்து பெருகிவிட வில்லை. ஆனால் நூல்கள் மட்டும் பழங்காலத்தை விட மிகப் பல மடங்கு பெருகியுள்ளன. பழங்காலத்தில் ஒரு நல்ல நூல் ஒரு நாட்டில் ஐம்பது அறுபது இருந்திருக்கலாம். இப்போது ஐம்பதினயிரம் அறுபதினயிரம் நூல்கள் பரவுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டுவிட்டன. நூல்களை விட நாள் இதழ், வார இதழ், திங்கள் இதழ் முதலிய பத்திரிகைகள் கருத்தை வேகமாகப் பரப்பும் கருவிகளாக உள்ளன. வானெலி, திரைப்படம் முதலிய கருவிகளும் பெரிய அளவில் துணை செய்கின்றன. ஆகவே கருத்தைப் பரப்புவதற்கு இன்று உள்ள வாய்ப்பில் ஆயிரத்

தில் ஒரு பங்கும் பழங்காலத்தில் இல்லை எனலாம். கருவிகளைப் பொறுத்த மட்டில் அல்லாமல் அந்தக் கருவிகளைப் பயன்படுத்திக் கருத்தைப் பரப்பும் வேகத்திலும் இத்தகைய பெரிய மாறுதலைக் காண லாம். லினோ டைப் முதலான அச்சுப் பொறிகள் சிறிது நேரத்தில் எவ்வளவோ செய்திகளை அச்சடித் துத் தந்துவிடுகின்றன. மிகப் பல பக்கங்கள் உள்ள பெரிய புத்தகங்களையும் சில நாட்களில் ஆயிரக்கணக் காக அச்சிட்டு முடிக்கும் ஆற்றல் வந்துவிட்டது. வானொலியோ ஒரு நொடிப் பொழுதில் செய்திகளை உலகெங்கும் பரப்பிவிடுகின்றது.

வாய்ப்பும் வேகமும் இவ்வளவு பெருகிய போதி லும் அறிவுத் துறையின் ஆட்சி ஒரு சிலர் கையில் தான் உள்ளது. அந்த ஒரு சிலர் காக்கையை வெள்ளை என்று கூறினாலும் நம்பக்கூடிய அளவிற்குப் பல ரிடம் கண்மூடித் தன்மை உள்ளது. அதனால் மேற் சொன்ன வாய்ப்பும் வேகமும் ஆட்டுவிப்போர்க்கே ஆற்றலைப் பெருக்கிவிட்டன. புகழ்பெற்ற எழுத் தாளர் ஒருவர் ஒரு நூலிலோ அல்லது பத்திரிகை யிலோ அரிசியில் சத்து இல்லை என்று எழுதினால் மறுநாள் பெரும்பாலோர் அதை நம்பிவிடுகிறார்கள். அவ்வாறே மற்றோர் எழுத்தாளர் அரிசி போதுமான சத்துள்ள நல்ல உணவு என்று எழுதுவாரானால் அடுத்த நாளில் அந்தக் கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றார்கள். எவருக்குப் புகழ் மிகுதியோ அவருக்குக் கருத்தைப் பரப்பும் ஆற்றலும் மிகுதியாக உள்ளது. புகழ் மிகுந்த விஞ்ஞானி ஒருவர் ஆப்பிள் பழத்தின் நன்மையை விளக்கி எழுதுவாரானால், சிறிது காலத்திற்குள் ஆப்பிள் தோட்டம் ஆப்பில் வியா பாரம் முதலியவை எல்லாம் பெருகிவிடுகின்றன. இன்னொரு விஞ்ஞானி மற்றொரு நாள் முன்வந்து

ஆப்பிள் பழம் சத்தற்றது என்றும், நீர் தவிர வேறு ஒன்றும் அதில் இல்லை என்றும் கூறுவாரானால் அந்தக் கருத்தும் மக்களிடையே காட்டுத் தீப் போல் பரவி விடுகின்றது. அதன் பயனாக ஆப்பிள் தோட்டமும் வியாபாரமும் எதிர்பாராத வகையில் குறைந்துவிடுகின்றன.

பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே
மெய்யுடை ஒருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

என்று புலவர் ஒருவர் உணர்த்திய உண்மை இன்றைய உலகத்திற்கு மிகப் பொருந்துவதாக உள்ளது.

அறிவுத்துறை விளம்பரத்திற்கு இரையாகி அல்லல் படும் நிலைமை இது. சொல்லும் திறமையும் விளம்பர வாய்ப்பும் குறைவாக இருந்தால், உண்மையானவர் சொன்னாலும் அவர் கருத்து எளிதில் பரவுவது இல்லை. விளம்பர வாய்ப்பு இருந்தால் எந்தக் கருத்தும் எளிதாகப் பரவி மக்களைக் கவர்ந்துவிடுகின்றது. அதனால் செல்வமும் செல்வாக்கும் மிக்கவர் பத்திரிகை முதலான கருவிகளை வைத்துக்கொண்டு எதையும் பரப்ப முடிகின்றது. அவர்கள் கையில் எல்லாத் துறையும் வந்து சேர்ந்துவிடுகின்றது. அறிவை வளர்க்கும் கல்விக் கூடங்களும் அவர்கள் ஆட்டுவிப்பது போல் ஆடுகின்றன. மனப்பாடம் செய்வது நல்லதா கெட்டதா, எந்தக் கதைகளை எந்த வயது மாணவர் எந்த அளவிற்குக் கற்க வேண்டும், பரீட்சை முறைகளும் பட்டம் பெறும் நெறிகளும் எவ்வாறு அமைய வேண்டும் என்பவை போன்ற கருத்துக்களில் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கும் உரிமையை

விடப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு உள்ள ஆற்றல் மிகுதியாகிவிட்டது. அதனால் ஒரு தீய கருத்தை—தவறான கருத்தை—எதிர்க்கவோ மறுக்கவோ எண்ணினால், உள்ளம் உணர்ந்த கருத்தைச் சொன்னால் மட்டும் போதாது. அதைப் பரப்பும் வாய்ப்பையும் வேகத்தையும் தேட வேண்டியுள்ளது.

ஆகவே மக்களின் கண்மூடித் தன்மையை அகற்ற வேண்டிய அறிவுத்துறை, அந்தக் கண்மூடித் துறையையே விளையாட்டுக் கருவியாக வைத்துக்கொண்டு வாழ இடம் இருக்கின்றது.

அதனால்தான் மொழிப் பற்று வேண்டும் என்ற முழக்கம் கேட்ட இதே நாட்டில், இப்போது மொழிப் பற்று ஒரு குறுகிய நோக்கம் என்ற கருத்தும் பரப்பப் படுகின்றது. மொழிவழி மாகாணம்தான் மக்களாட்சிக்கு அடிப்படை என்ற கருத்தை வளர்த்த பிறகு, மொழிவழி மாகாணம் இந்தியாவின் ஒன்றுபட்ட தன்மைக்கு இடையூறானது என்ற கருத்தும் பரப்பப்படுகின்றது. இவ்வாறே மாறுபட்ட கருத்துக்கள் பரப்பப்படுவதை ஒவ்வொரு துறையிலும் காண்கின்றோம். யாரும் எதையும் சொல்லிக் கருத்தைப் பரப்ப முடியும் என்ற எண்ணம், புகழும் செல்வாக்கும் உள்ளவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. அவர்களின் கருத்தை மாற்றவும் மறுக்கவும் யாரேனும் முயலுவதானால் தாங்கள் சொல்வதைக் கேட்பதற்கு ஆள் திரட்ட வேண்டியுள்ளது. இவ்வாறு தம் சார்பாக ஆள் திரட்டும் தொண்டுதான் கட்சி அமைப்புக்குக் காரணம் ஆகும். கட்சி அமைத்தவர்கள் தம் கருத்தைப் பரப்புவதற்காக வேகமும் வாய்ப்பும் தேடுவதோடு கருத்துக்களுக்குச் சுவை ஊட்டவும் முயலுகின்றனர். உண்மை சுவை குறைந்தது. ஆகையால் பொய்யும் வழுவும் கலந்து சுவைபடச் சொல்லவும்

எழுதவும் முயல்கின்றனர். அவர்களுக்கு வல்லமையாகப் புகழும் செல்வாக்கும் விளங்க, இவர்களுக்குச் சுவை ஊட்டும் கலையே உறு துணையாக உள்ளது. ஒரு பக்கம் மக்களைச் செல்வாக்கு இழுக்க, மற்றொரு பக்கம் சுவை இழுக்கின்றது. செல்வாக்கைச் சார்ந்து சிலரும், சுவையை விரும்பிப் பலருமாக மக்கள் இரு வேறு கட்சியாகப் பிரிந்துவிடுகின்றார்கள். இவ்வாறு ஆடுவோர்க்குள் ஏற்படும் பிரிவுக்குக் காரணம் ஆட்டுவிப்போர்க்கு இடையே உள்ள பிளவே ஆகும். செல்வாக்கு விரும்பும் கட்சியாளர் தம் தம் வெற்றியே குறிக்கோளாகக் கொண்டு இந்த அறிவு விளையாட்டுப் போரில் இறங்குவதால் உண்மை ஒதுங்குகின்றது. மொழிப் பற்றும் குறுகிய நோக்கம் என்று பேசப்படுகின்றது. மொழிவழி மாகாண அமைப்பும் பிற்போக்குத் தன்மை என்று பேசப்படுகின்றது. அதனால்தான் அவற்றைப் பற்றிய உண்மையை நிலைநிறுத்த இன்னொரு பக்கம் கலைச்சுவை ஊட்டி மக்களைத் திரட்ட வேண்டிய நெருக்கடி மற்றொரு சாரார்க்கு ஏற்படுகின்றது.

# முடியுமா ?

ஒரே மொழி பேசும் மக்கள் வாழும் நிலப் பரப்பு இரண்டு நாடாகப் பிரிக்கப்பட்டால் அதனுல் இடையூறு ஏற்படுவதில்லை. இரண்டு நாடுகளுக்கும் இரு வேறு ஆட்சி அமைகின்றது. பொருளாதாரம் முதலியவற்றில் சார்ந்து வாழ வேண்டிய காரணம் இருந்தால் அந்த இரண்டு நாடுகளும் உறவு கொண்டு வாழ்கின்றன. இல்லையாளுல் பகை கொண்டு வாழ் கின்றன.

ஆனுல் வேறு வேறு மொழி பேசும் மக்கள் வாழும் நிலப் பகுதிகளை ஒரு நாடாகச் சேர்த்து அமைக்கும் போது இடையூறு ஏற்படுகின்றது. நாட்டின் ஆட்சி யில் மொழி ஒன்ருக இருக்க முடிவதில்லை. இரண்டு மூன்று மொழிகளையுடைய ஆட்சியாக அமைக்க வேண்டி வருகின்றது. அந்த நாட்டுச் சட்ட சபையில் இரண்டு மூன்று மொழிகளுக்கு இடம் தர நேர் கின்றது. கல்விக் கூடங்களிலும் அலுவலகங்களிலும் பல மொழி அறிவு தேவையாகின்றது. இதனுல் எவ்வளவோ முயற்சியும் காலமும் பொருளும் வீணு கின்றன என்றே கூறலாம். 'இதைத் தடுக்கவோ வழி இல்லை. இன்று இலங்கையில் சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழி பேசுவோர் வாழ்வதால் இத்தகைய சிக்கல் ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.

ஒரே மொழி பேசுவோர் மொழியின் காரணமாக ஒன்று சேர்ந்து வாழ்வார்கள் என்று எண்ணுவதற் கும் இல்லை. அவர்களுக்குள் வேறு காரணத்தால் பகைமை ஏற்பட்டு இருவேறு நாடாகப்பிரிந்து வாழ்வ

தையும் காண்கின்றோம். கிழக்கு வங்காளமும் மேற்கு வங்காளமும் மொழி ஒற்றுமை இருந்த போதிலும் வெவ்வேறு அரசியலைக் கொண்டு பிரிந்து அமைந்துள்ளன. வேறு வேறு மொழி பேசுவோர் எந்தக் காரணத்தாலோ உறவுகொண்டு ஒரு நாடாக அமைந்து வாழ்வதும் உண்டு. மொழியால் வரும் சிக்கலையும் கடந்த பெரிய உறவு இருப்பதே அதற்குக் காரணம் ஆகும்.

ஆகவே பகைக்கும் உறவுக்கும் மொழி காரணம் அன்று என்று புறக்கணிக்கலாமோ என்றால் அது கூடாது பிரிந்து வாழ்ந்தாலும் மொழி வேண்டும்; சேர்ந்து வாழ்ந்தாலும் மொழி வேண்டும். தனி மனிதர் வாழ்வே ஆனாலும், நாட்டு மக்களின் ஆட்சி ஆனாலும் மொழி இன்றியமையாதது ஆகின்றது. மொழிக்கு முதல் இடம் இல்லையானாலும் இரண்டாவது இடமாவது கொடுத்தே ஆக வேண்டும். அதனால் தான் ஒரு சின்ன நாடாக இருந்தாலும் இரண்டு மொழி பேசுவோர் உள்ள நாட்டில் அந்த இரண்டு மொழிக்கும் உரிமை வேண்டியிருக்கின்றது. ஏழெட்டு மொழி பேசுவோர் சேர்ந்து வாழும் நாட்டில் ஏழெட்டு மொழிக்கும் இடம்தர வேண்டியிருக்கிறது. அவ்வாறு இடம்தர மறுத்தால் என்ன ஆகும்? ஏழெட்டு மொழிகளில் நாளடைவில் ஒவ்வொரு மொழியாகச் செத்துப்போகும். இரண்டு மூன்று மொழியாய் நிற்கும். காலப் போக்கில் அவற்றிலும் ஒவ்வொன்றாய்ச் செத்துக் கடைசியில் ஒரு மொழி நிற்கும். அல்லது, வேறு எந்தக் காரணத்தாலோ உறவு கொண்டு சேர்ந்து ஒன்றாக அமைந்த மக்கள் இப்போது மொழியின் காரணமாகப் பிரிந்து வேறு வேறு நாடாகப் பிரிந்து போக முயல்வார்கள். இந்த இரண்டில் ஒன்றுதான் நடக்க முடியும். சர்வாதிகார ஆட்சி

யாக இருந்தால் முன்னது நடக்கும். உரிமை குறைந்த மக்களாட்சியாக இருந்தால் பின்னது நடக்கும். இந்த இரண்டும் நடக்காமல் இருக்க வேண்டுமானல் அது மொழி உரிமை பெற்ற மக்களாட்சியாக இருக்க வேண்டும். இந்திய அரசியலில் உள்ள சிலர் இந்த உண்மைகளை உணர்ந்தோ அல்லது உணராமலோ நெறி தவறிப் போய்க்கொண்டிருக்கின்றனர். வெவ்வேறு மொழி வழங்கும் நிலப்பகுதிகள் இருப்பதை அறிந்தும், நாடு முழுமைக்கும் ஒரே மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று விரும்பிக் கூறுகின்றார்கள். கல்வி நிலையங்களிலும் அலுவலகங்களிலும் ஒரே மொழி செல்வாக்குப் பெற வேண்டும் என்று கூறிவருகின்றனர். ஆங்கில ஆட்சியின் போது ஒரே மொழி ஆட்சி புரிந்ததுபோல் இனியும் நாடு முழுதும் ஆட்சிமொழி ஒன்றாக இருக்க வேண்டும் என்று கனுக் காண்கின்றார்கள். ஆங்கில ஆட்சி அந்நிய ஆட்சி; மக்களாட்சி அன்று. ஆங்கில ஆட்சியின்போது மக்கள் எல்லோருக்கும் வாக்குரிமையும் இல்லை. ஆகையால் அன்று நடந்தது இன்றும் நடக்கும் என்று எதிர்பார்ப்பது வீண் கனவு ஆகும். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்ற போக்கு ஆகாது. ஒன்று, மொழி உரிமை அளித்து மக்களாட்சியைக் காக்க வேண்டும். அல்லது, மொழி உரிமையைப் பறித்து ஆட்சி முறையை மாற்ற வேண்டும். இந்த இரண்டிற்கும் இடைப்பட்டது என்று ஒன்று இல்லை.

மாகாணங்களில் மொழி பற்றிய எண்ணமும் கிளர்ச்சியும் போராட்டமும் அடிக்கடி தலை எடுக்கின்றனவே என்று சிலர் உளம் நொந்து வருந்துகின்றனர். வருந்திப் பயன் இல்லை. செயல் முறையில் இறங்க வேண்டும். அரசியல் சட்டத்தைத் திருத்தி

மக்களாட்சி முறை இல்லாமல் மாற்றிவிட வேண்டும். அது மட்டும் செய்தால் போதாது; மேலும் இன்னொன்று செய்ய வேண்டும். மக்களின் மூளையோடு நெருங்கித் தொடர்புள்ளது தாய் மொழி. குழந்தைப் பருவம் முதல் இறுதி மூச்சு வரையில் மூளையோடு நெருங்கிய தொடர்புள்ளது மொழி. ஆகையால் அவர்களின் மூளையில் மாகாண மொழி இடம் பெறுமல் செய்ய வேண்டும். இவ்வாறு மூளையிலே கிள்ளி எறிந்தால்தான் இவர்களின் எண்ணம் நிறைவேறும்.

மக்களின் மூளையில் தாய் மொழி இடம் பெறுமல் செய்வது எப்படி? அந்தந்த மாகாண மக்கள் தம் தம் மொழிகளைப் பள்ளிக்கூடங்களில் படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் செய்ய வேண்டும். மாகாண மொழியில் கடிதங்களோ விளம்பரங்களோ எழுதாதபடி தடுக்க வேண்டும்; பாட்டுகளும் படங்களும் பரவாமல் தடுக்க வேண்டும். மாகாண மொழிப் பத்திரிகைகளைச் சட்ட விரோதம் ஆக்க வேண்டும். மாகாண மொழியில் பொதுக் கூட்டங்கள் நடக்காமல் தடுக்க வேண்டும். நாளடைவில் தெருவில் நான்கு பேர் சேர்ந்து அந்த மொழியில் பேசுவதும் அரசியல் குற்றம் ஆக்கப்பட வேண்டும். வீட்டிற்குள் தாய் தன் மக்களோடு அந்த மொழியில் பேசுவதையும் தடுத்தே ஆக வேண்டும்.

# தாயா ? பேயா ?

பெற்ற தாயை அன்போடு போற்றிவருவது கடமை. சிலர் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில்தான் அவ்வாறு கடமையைச் செய்கின்றார்கள். அதற்குப் பிறகு மாறிவிடுகின்றார்கள். திருமணம் ஆகும் வரையில் தாயிடம் அன்பு செலுத்துகின்றார்கள். அதற்குப் பிறகும் சில ஆண்டுகள் வரையில் சிலர் அன்பு செலுத்திவருகின்றார்கள். மனைவியின் பாசம் வளர்ந்த பிறகு அந்த அன்பு சிறிது சிறிதாகக் குறைந்து நாளடைவில் அடியோடு இல்லாமல் போவதும் உண்டு. தெளிவான அறிவும் கடமை உணர்ச்சியும் உடையவர்கள் இவ்வாறு மாறுவதே இல்லை. தாயிடமும் மனைவியிடமும் ஒருங்கே அன்பு செலுத்த அவர்களால் முடியும். மற்றவர்களின் வாழ்க்கையில் மனைவியின் பாசம் வளர வளரத் தாயிடம் அன்பு செலுத்துவது படிப்படியாகக் குறைந்து போகும். பழைய அன்பையும் காத்துப் புதிய அன்பையும் போற்றக்கூடிய ஆற்றல் அவர்களுக்கு இல்லை. ஒன்று குறைந்தால்தான் மற்றொன்று வளர முடியும் என்ற போக்கில் அவர்களின் மனம் மாறிவிடுகின்றது.

இது பெருந் தவறு. இந்தத் தவற்றிற்கு ஒரு குடும்பத்தில் பிறந்த மகன் மட்டும் காரணம் அல்லன். அவனை வளர்த்த தாயும் காரணமாக இருக்கலாம்; அவனை மணந்துகொண்ட மனைவியும் காரணமாக இருக்கலாம். புதியவளிடம் உள்ளத்தைப் பறிகொடுக்கின்றானே என்ற பொறாமையால் தாய் அவனுடைய மனத்தை வேறுபடுத்த முயன்றிருக்கலாம். அதனால் மருமகளின் மனம் கெட்டிருக்கலாம். அல்லது, தன்னிடமே முழு அன்பும் செலுத்தவேண்டும் என்ற ஆசையால் அந்த மனைவி அவனுடைய மனத்தைத்

தாயிடமிருந்து பிரிக்க முயன்றிருக்கலாம். அதனால் தாயின் மனம் கெட்டிருக்கலாம். எப்படியோ யாருடைய மனக் குறையாலோ தீமை விளையத் தொடங்கி அவனுடைய மனத்தை மாற்றியிருக்க லாம். ஆகையால் குற்றம் முழுதும் அவனையே சார்ந்தது என்று சொல்லிவிட முடியாது.

மனக்குறை யாரிடமிருந்து எவ்வாறு தாக்கிய போதிலும் தன்னைத் தான் காத்துக்கொள்ளும் ஆற்றல் உடையவனுக்கு - கடமை உணர்ச்சியும் அறிவுத் தெளிவும் உடையவனுக்கு - இழுக்கு ஒன்றும் நேர்ந்துவிடாது. மற்றவன்தான் அல்லல் படுகின்றான்; அல்லது, அல்லல் படுத்துகின்றான்.

தமிழ் நாடு வரலாற்றுக்கு முற்பட்ட மிகப் பழங் காலம் முதல் கிளைவ் கோட்டை பிடித்த காலம் வரை தமிழ் மொழியே ஆட்சி மொழியாகக் கொண்டு விளங் கிய நாடாகும். இவ்வளவு நீண்ட காலம் - மூவாயிரம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட நெடுங்காலம் - தொடர்ந்து ஒரே மொழி ஆட்சி மொழியாக இருந்து வந்ததை உலக வரலாற்றில் வேறு எங்கும் காண் பதற்கு இல்லை. இந்த நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ்மொழி பண்பட்ட பழம் பெருந் தாய்; இந்த நாட்டின் அமைதிக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் கலை மேம்பாட்டிற்கும் காரணமாக இருந்து இதை வளர்த் துப் போற்றிய நல்ல தாய். இன்றும் அந்தத் தாய் ஆற்றலும் அன்பும் நிறைந்தவளாய் விளங்கிவரு கின்றாள். ஆனால் நாட்டின் வாழ்வில் புதிய உறவு ஏற்பட்டுள்ளது. கிளைவின் முயற்சியால் அமைந்த ஆங்கில ஆட்சியே அதற்கு ஒரு வகையில் காரணம் என்று கூறலாம். ஆங்கில ஆட்சிக்கு முன் தமிழ் நாட்டிற்கும் டில்லிக்கும் எவ்வகையான உறவும் இருந்ததில்லை. தொடர்பும் இருந்ததில்லை. ஆங்கில

ஆட்சியின் போது தலைநகரமாக இருந்த டில்லி மா நகரமே சுதந்தர ஆட்சியிலும் தலை நகரமாக அமைவதாயிற்று. அன்று ஆங்கிலேயர் ஏற்படுத்திய அந்தப் புதிய உறவு இன்று நாமே விரும்பி உரிமை உணர்ச்சியோடு மேற்கொண்ட உறவாக உள்ளது.

இந்தப் புதிய உறவு வேண்டாம் என்று கூறுவோரும் உள்ளனர். அதற்குக் காரணம் இந்தப் புதிய மனைவியின் பேராசை; முழுதும் தன்னிடமே அன்பு செலுத்தித் தன் விருப்பப்படியே நடக்க வேண்டும் என்று முயலும் தன்னலம். பழைய உறவைப் படிப் படியே குறைத்து மாற்றினால்தான் நம் புதிய பிணைப்பு நிலை பெறும் என்று தவறான எண்ணத்தால் செய்யும் சில முயற்சிகள். புதிய உறவின் இந்தச் சில குறைகளால் பழைய தாயின் மனமும் ஓரளவு கெடுகின்றது; புதிய உறவு வேண்டாம் என்று மறுக்கும் அளவிற்கும் வெறுக்கும் அளவிற்கும் மனக்குறை ஏற்படுகின்றது.

தெளிந்த அரசியல் அறிவும் குன்றாத கடமை உணர்ச்சியும் உடையவர்களாக இருந்து எண்ணிப் பார்த்தால், இன்று உலகமெல்லாம் பிணைக்கப்பட்டு வாழவேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதை உணரலாம். தமிழ் நாடு மத்திய அரசாங்கத்தோடு சேர்ந்து வாழ்ந்தே தன் மொழியையும் போற்றிக் காத்துக் கொள்ள முடியும் என்று தோன்றுகிறது. ஆனால் மத்திய அரசாங்கத்திற்குச் சார்பாக இருப்பவர்களின் வாய், அல்லது இருப்பதாக நடிப்பவர்களின் வாய் நன்றாக இல்லை. அவர்களின் மனம் நன்றாக இல்லை. தன்னோடு வாழ்வதற்காகத் தாயையும் புறக்கணிக்க வேண்டும் என்று வற்புறுத்தும் மனைவியின் போக்கில் அவர்களின் சொல்லும் செயலும் இருக்கின்றன. அதனால் தமிழ்நாட்டில் மொழிப்பற்று உடையவர்களின்

மனம் கெடுகின்றது. மத்திய அரசாங்கத்தை வலுப் பெறச் செய்வதே முதல் கடமை என்றும், அதற்காக மாகாணப் பற்றையும் மாகாண மொழிப் பற்றையும் வளர்க்கக் கூடாது என்றும் அவர்கள் சொல்கின்றார்கள். அவர்கள் வாயால் பேசும் அளவிற்கு உள்ளத்தில் உறவு கொள்ளவில்லை என்றும், அதனால் அவர்கள் நம்பத்தகாதவர்கள் என்றும், முக்கால் அணாத் தபால் அட்டையிலும் மாகாண மொழிக்கு இடம் தராதவர்களை எப்படித்தான் நம்பமுடியும் என்றும் இவர்கள் கூறுகின்றார்கள்.

அவர்களும் இவர்களுமாக இந்த அளவில் நின்று விட்டாலும் தீமை வளராமல் இருக்கலாம். இவர்களிலேயே ஒருசிலர் இப்பொழுது புறப்பட்டுவிட்டார்கள். மொழிப் பற்றுக் கொண்டு செய்யும் செயல்களை இந்த ஒரு சிலர் வெளிப்படையாகப் பழிக்கத் தொடங்கிவிட்டார்கள். தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக அமைந்து வாழும் வகையில் எல்லை வகுக்க வேண்டும் என்று தமிழர்கள் செய்யும் முயற்சியைத் தமிழரிலேயே ஒருசிலர் பழித்துக் குறைகூறத் தொடங்கிவிட்டார்கள்.

இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு இந்தத் தாய் மொழிப் பற்று இடையூறானது என்று உபதேசம் செய்யத் தலைப்பட்டுவிட்டார்கள். தாயைப் போற்றுகின்ற மக்களுக்குத் தாயைப் புறக்கணிக்க வேண்டும் என்ற அளவில் இந்த உபதேசம் தலையெடுக்கின்றது. பத்திரிகைகள் இந்தப் போக்கில் தலையங்கம் எழுதத் தொடங்கிவிட்டன; தாய்மொழியைப் பிசாசு என்று நையாண்டிப் படம் தீட்டத் தொடங்கிவிட்டன. இந்த உபதேசத்தையும் கடந்து கடமைஉணர்ச்சி உள்ளவர்கள் யார், நன்றி மறந்தவர்கள் யார் என்று நாடு உணரத்தான் போகின்றது.

# தமிழுக்கு முதல் இடம்

ஒரு நாட்டில் பெரும்பாலான மக்கள் என்ன மொழி பேசுகின்றார்களோ அந்த மொழியிலேயே ஆட்சி முதல் ஆடல்பாடல் வரையில் எல்லாம் நடைபெறுதல் வேண்டும். அப்படி இல்லையானால் அது அந்த நாட்டிற்கே தீமையாக விளையும். அந்த நாட்டு மொழி பல வகையிலும் குறைபாடு உடைய மொழியாகவும் இருக்கலாம். வேறு நாட்டு மொழி அதைவிடச் சிறப்பு உடையதாகவும் இருக்கலாம். ஆனாலும் அந்த நாட்டின் வாழ்வில் நாட்டு மொழிக்கே முதன்மையான இடம் இருக்கவேண்டும். ஓர் இரு துறைகளில் மட்டும் அல்லாமல் பல துறைகளிலும் முதல் இடம் இருக்க வேண்டும். வேற்று நாட்டு மொழி எவ்வளவு சிறப்பு உடையதாக இருந்தாலும் முதல் இடம் பெறக் கூடாது. அதனால் விளையும் பயன் கருதி அதற்கு இரண்டாம் இடம் தரலாம். அவ்வாறு செய்தால் தான் அந்த நாட்டு மக்களின் வாழ்வு உட்பகையும் பிளவும் குழப்பமும் இல்லாததாக இருக்க முடியும். குறிப்பிட்ட சில பயன் கருதி வேற்று மொழிக்கு இடம் கொடுத்தால் நிகழ்காலத்தில் தீமையற்ற நன்மை விளைவது போல் தோன்றும். ஆனால் காலப் போக்கில் நன்மையும் தீமையாக மாறி விளைந்து விடும். ஆகையால் அப்போதைக்கு ஏற்படும் பயனை மட்டும் கருதாமல் நாட்டின் எதிர்கால வாழ்வையும் கருதி நிலையான நன்மைக்கே வழி வகுக்க வேண்டும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னே தமிழ்நாட்டில் கோயில்களில் தமிழ்மொழிக்கு இடம் தராமல் வட

மொழியை அங்கு விளங்க வைத்தார்கள். அதனால் அன்று ஒரு தீமையும் ஏற்படவில்லை. அந்த விதை காலப் போக்கில் முளைத்து வளர்ந்து இன்று தீமையை விளைத்துவருகின்றது. தமிழ் நாட்டில் இன்று உள்ள வகுப்புப் பூசலுக்கும் வட மொழி-தென் மொழி போராட்டத்திற்கும் அன்று செய்த அந்தத் தவறே காரணம் எனலாம். அன்று விதையாக இருந்தது இன்று மரமாக வளர்ந்துள்ளது. இன்று காணும் இந்தப் பெரிய மரத்திற்கு அன்று கண்ட அந்த விதை காரணம் அன்று என்று சிலர் கருதலாம். வேறு காரணமும் கூற முயலலாம். அந்த முயற்சியால் பயன் இல்லை. உண்மையை உணர்ந்தால்தான் பயன் உண்டு. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழ் பாடி வளர்த்த அந்தக் கோயில்களில் தமிழுக்கு முதல் இடம் அளித்திருந்தால் இன்று எத்தனையோ வம்புகள் விளையாமல் தடுத்திருக்க முடியும். கோயில்களில் தமிழ் முழக்கம் வேண்டும் என்ற கிளர்ச்சிக்கே இடம் இல்லாமல் அதை ஒட்டி வளரும் பூசலுக்கும் இடம் இல்லாமல் அமைதி நிலவியிருக்கும்.

அன்று செய்த தவறு போலவே நேற்றும் ஒரு தவறு செய்தோம். இசைத் துறையில் தலைமுறை தலைமுறையாகத் தமிழ்நாடு வளர்த்து வந்த பண்கள் பல. அந்தத் தமிழ் இசை பிற்காலத்தில் கருநாடக சங்கீதமாக வளர்ந்து மாறி இன்றும் போற்றப்பட்டு வருகின்றது. ஆனால் பழைய பெயர்கள் இல்லை. அதனால் புதியதொரு கலைபோல் பலர் மருள்கின்றார்கள். பழைய பண்களின் இலக்கணம் இன்று விளங்கவில்லை. அவற்றின் பெயர்களும் கேட்டறியாத புதுப் பெயர்கள் போல் உள்ளன. இங்குள்ள ராகங்களின் பெயர்களோ தமிழுக்குத் தொடர்பு இல்லாதவைகளாக உள்ளன. கருநாடக சங்கீதத்

தைக் கண்டு பலர் மருளுதலுக்குக் காரணம் அது தான். இவ்வளவு மாறுதலும் ஏற்பட்டதற்குக் காரணம் இசைக் கலையில் தமிழ்மொழிக்கு முதல் இடம் இல்லாமல் போன குறைதான். அன்று நேர்ந்த அந்தக் குறையே இன்று தமிழ் இசைப் போராட்டம் நடக்கக் காரணம் ஆயிற்று. அதன் தொடர்பாக ஏற் பட்டு இன்றும் அங்கங்கே இருந்துவரும் சிறுபூசல்களுக் கும் அதுவே காரணம் ஆகும். ராகங்களின் பெயர் மாறியது ஒருபுறம் நிற்க; அந்த ராகங்களுக்கு உரிய பாட்டு, தமிழர் பொருள் உணரக் கூடிய தமிழ்ப் பாட்டாக இல்லாமல்போனதுதான் குறை. கருநாடக சங்கீதத்தில் எல்லாப் பாட்டும் தமிழாக இருக்க வேண்டும் என்பது கருத்து அன்று. கருநாடக சங்கீதம் தெலுங்கு நாட்டில் வளரும்போது தெலுங்குப் பாட் டுக்களின் துணை வேண்டும். மைசூரில் வளரும்போது கன்னடப் பாட்டுக்களின் துணை வேண்டும். ஒருகால் வங்காள மாகாணத்தில் வளர்வதாக இருந்தால் வங் காளிப் பாட்டுக்களின் துணையே வேண்டும். தமிழ் நாட்டில் வளரும்போது தமிழ்ப் பாட்டுக்களின் துணையே வேண்டும் என்பதுதான் கருத்து ஆகும். கல்யாணி ராகத்தைத் தமிழர்கள் தமிழ்ப் பாட்டின் துணை கொண்டு அனுபவிக்க வேண்டும். அதுபோலவே தெலுங்கு மக்கள் அனுபவிப்பதற்குத் தியாகராயர் பாடல் முதலான தெலுங்குப் பாட்டுக் கள் மிகுந்த நன்மை பயக்கும். இந்த அளவிற்குத் தெளிவும் உரிமையும் வளரவிட்டிருந்தால் இன்று இசைத் துறையில் மொழிப் போராட்டம் தலை யெடுத்திருக்காது. போராட்டம் வளரும்போது போரா டும் மக்களைப் பார்த்துக் குறை கூறுவதனால் பயன் இல்லை. அதற்குக் காரணமான தவறு முன்னமே நேர்ந்துவிட்டதை எண்ணி வருந்த வேண்டும்.

விதைத்தது விளைந்தே தீரும். விளையும்போது அங்கு இருப்பவர்களை நோக்கி நோவதனால் பயன் இல்லை. விதைத்த காலத்தை எண்ணியே வருந்த வேண்டும்.

அதற்குப் பிறகு நேர்ந்த தவறு ஆட்சித் துறையில் தமிழுக்கு முதல் இடம் அளிக்காமல் போனது ஆகும். அதற்காக நாம் யாரை நொந்துகொள்வது? ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக்கிடந்த நம் அடிமைத் தனத்தையே நொந்துகொள்ள வேண்டும். அடிமை வாழ்வு நீங்கி உரிமைவாழ்வு பெற்றுள்ள நாம் இனியேனும் அந்த குறை தீர வழி வகுக்க வேண்டும். உரிமை பெற்ற எந்த நாட்டிலும் அந்நிய மொழி ஆட்சி மொழியாக இருப்பது இல்லை. ஆகவே இங்கும் இருப்பது பொருந்தாது.

ஆட்சி மொழிக்கு எப்போதும் செல்வாக்கு மிகுதி. ஒரு மொழி ஆட்சித் துறையைக் கைப்பற்றிவிட்டால் மற்றத் துறைகள் தாமே வந்து அதனிடம் சேரும். ஒலியிலும் இலக்கணத்திலும் சொல்வகையிலும் மிக்க குறைபாடுள்ள மொழியாக இருந்தும், ஆங்கிலம் உலக மொழியாக வளர்ந்துள்ளதற்குக் காரணம் அதுதான். 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்ற பழமொழி மொழித் துறைகளுக்கும் பொருந்தும். ஆட்சித் துறையில் உள்ளது எந்த மொழியோ அந்த மொழியே கல்வி, தொழில், வாணிபம், கலை, பொழுதுபோக்கு முதலான எல்லாத் துறைகளிலும் செல்வாக்குப் பெற்றுவிடும். நாடோடிகளாய்த் திரியும் குருவிக்காரர் மொழியாக இருந்தாலும் அதை ஆட்சிமொழி ஆக்கிவிட்டால் ஒரு நூற்றாண்டு அளவில் அதுவே பல துறைகளிலும் வளர்ந்த ஒரு மொழியாகிவிடும். அவ்வாறே எவ்வளவு சிறப்புடைய மொழியாக இருந்தாலும் ஆட்சித் துறையில் அதற்கு இடம் இல்லையென்றால் மற்றத்

துறைகளில் அதன் வாழ்வு தானுகவே மங்கிவிடும். இது இயற்கை.

தமிழ் நாட்டில் பத்திரிகைத் துறையில், நேற்று வரையில் தமிழ் பிற்போக்காக இருந்ததற்குக் காரணம், ஆட்சி மொழியான ஆங்கிலத்திற்கு இருந்த செல்வாக்கே ஆகும். இவ்வாறு பத்திரிகைத் துறையில் தமிழ் செல்வாக்குடன் விளங்க முடியாமல் இருந்ததனுலும் நாட்டிற்குத் தீமை விளைந்தது; இன்னும் விளைந்துவருகின்றது. என்ன தீமை? தமிழ் நாட்டில் ஆங்கிலப் பத்திரிகைகள்தான் மிகச் செம்மையாக வளர்ந்துள்ளன; பெரிய அளவில் விற்பனையும் ஆகின்றன. அந்தப் பத்திரிகைகள் நாட்டுமொழித் தொடர்பு இல்லாத காரணத்தால் நாட்டு மக்களின் உள்ளத் தொடர்பை இழந்துவிட்டன. அதனுல் தமிழ்நாட்டுச் செய்திகளைவிட வெளி உலகச் செய்திகளுக்கே சிறப்பிடம் தருகின்றன: நாட்டில் நெருக்கடியான போராட்டம் நடக்கும்பொழுதும் தமிழ் மக்களின் நன்மையைப் பெரிதாகக் கருதாமல் வெளியுலகத்து மதிப்பையே பெரிதாகக் கருதி வாய்மூடிக் கிடக்கின்றன. அந்தப் பத்திரிகைகள் வாழ்வது தமிழ் நாட்டில்; ஆனுல் தமிழ் மக்களின் போராட்டங்களில் அவை தீண்டாமையை மேற்கொள்கின்றன. மனைவி மக்களோடு வாழும் ஒரு குடும்பத்தில் விருந்துண்டு அந்தக் குடும்பத் தலைவனுக்குத் துறவறம் போதிக்கும் அமாவாசைச் சாமியார்கள் போல் தமிழ்நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகள் சில வேளைகளில் தமிழ் மக்களுக்குப் பரந்த நோக்கம் போதிக்கின்றன. மொழி வழியாகத் தமிழ்நாடு அமைக்கும் முயற்சி, சென்னை தமிழருக்கு உரியதாக ஆக்கிய போராட்டம், வடக்கெல்லையாகிய சித்தூர் மாவட்டத் தமிழர்களின் கூக்குரல், தெற்கே நாஞ்சில் நாட்டுத் தமிழ்

மக்களின் உரிமை வேட்கை, தமிழைக் கல்வி மொழியாக்கச் செய்யப்படும் முயற்சி முதலிய பலவற்றிலும் இந்த ஆங்கிலப் பத்திரிகைகள் அமாவாசைச் சாமியார்களாகவே நடந்துகொண்டன; நடந்துகொண்டு வருகின்றன. இதன் பயனாக இன்று தமிழ் மக்கள் பெரும்பாலார் உள்ளத்தில் அந்தப் பத்திரிகைகளைப் பற்றி நல்ல எண்ணம் இல்லாமல் போயிற்று. இரத்தத்தை உறிஞ்சி வாழும் உணியைப் போலவே அவற்றைச் சிலர் வெறுக்கவும் வெறுக்கின்றார்கள். இவ்வளவிற்கும் காரணம் என்ன? பத்திரிகைத் துறையில் தமிழுக்கு முதல் இடம் இல்லாமல் போன குறைதான். தமிழ்ப் பத்திரிகைகள் ஒரு லட்சம் இரு லட்சம் பிரதிகள் பரவுகின்றன என்றும், ஆங்கிலப் பத்திரிகைகள் நாலாயிரம் ஐயாயிரம் பரவுகின்றன என்றும் சொல்லக்கூடிய நிலைமை வந்துவிட்டால், இந்த ஆங்கிலப் பத்திரிகைகள் அப்போதுதான் தமிழ்மக்களைப் பற்றிச் சிந்தனை செய்யத் தொடங்கும். ஆனால் இன்றைய நிலைமை நேர்மாறாக உள்ளது. சில தமிழ்ப் பத்திரிகைகளும் ஆங்கிலப் பத்திரிகைகளுக்குப் பின்பாட்டுப் பாடி அமாவாசைச் சாமியார்களாக வாழ முயல்கின்றன. இந்த நிலைமை நீடிக்காது என்பதை விரைவில் காண்போம். தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சிமொழியாகிவிட்டால், பத்திரிகைத் துறையிலும் தமிழ் முதல் இடம் பெற்றுவிடும். மேலே சொன்ன குறையும் கசப்பும் குழப்பமும் நீங்குவதற்கு வழி அதுதான்.

# தாராள மனப்பான்மை!

பெங்களூர்க்குச் செல்லும் வழியில் ஜோலார்ப் பேட்டையை அடுத்த பச்சூர் ரயில் நிலையத்தில் இறங்கி, என் நண்பர் எழுதிய ஊர்ப் பெயரைச் சொல்லி வழி கேட்டேன். என் எதிரே இருந்தவர்க்கு அந்தப் பெயரே விளங்கவில்லை. "எந்த ஊருக்கு?" என்றார்.

"மாமுடிமானபல்லிக்கு" என்றேன்.

"அப்படி ஒரு கிராமம் இந்தப் பக்கத்திலே இல்லையே" என்றார் அவர்.

ஒரு வேளை அவர் புதியவராக இருக்கலாம் என்று வேறொருவரை அணுகிக் கேட்டேன். அவர்க்கு அந்த அளவிற்குப் பொறுமையும் இல்லை. "தெரியாது அய்யா" என்று சொல்லிவிட்டு நகர்ந்துகொண்டே இருந்தார்.

மற்றொருவரை அணுகிப் பொறுத்திருந்து கேட்டேன். "வேறு யாரையாவது கேட்டுப் பாருங்கள்" என்றார் அவர்.

உடம்பின் மேல் சொக்காய் அணியாமல் மேல் துண்டை எடுத்துத் தலைப்பாகையாகச் சுற்றிக் கொண்டிருந்த ஒரு பெரியவரைக் கண்டேன். நாகரிகம் குறைந்த நாட்டுப்புறத்தார் எப்போதும் நல்லவர்கள், உதவிக்கு முன்வருவார்கள் என்று அவரிடம் சென்று, "அய்யா, மாமுடிமானபல்லி எந்தப் பக்கம்? வழி எப்படி!" என்றேன். "என்ன ஊர், சாமி? இங்கே இல்லையே. மல்லப்பள்ளி என்று ஓர் ஊர் இருக்கிறது; அதோ அங்கே" என்றார் அவர்.

உடனே பெட்டியைத் திறந்து நண்பர் எழுதிய கடிதம் இருக்கிறதா என்று தேடினேன். கடிதம் உடனே கிடைத்தது. எழுத்து எழுத்தாகப் பார்த்தேன். மா-மு-டி-மா-ன-ப-ல்-லி என்று ஒவ்வோர் எழுத்தாகக் கூட்டினேன். அந்தப் பெரியவரையும் விட்டு, இன்னும் யாரைக் கேட்பது என்று எண்ணிப் பார்த்தேன். ரயில் நிலையத் தலைவரின் எண்ணம் வந்தது. பெட்டியை எடுத்துக்கொண்டு அவருடைய அறைக்குச் சென்றேன். அங்கே இருந்தவரைப் பார்த்ததும், தாய்மொழியில் பேசினால் மதிக்கும் தமிழரோ, மதிக்காத தமிழரோ என்ற ஐயம் வந்து விட்டது. தாய்மொழியை மதித்தாலும் மதிக்காவிட்டாலும், பிறமொழியில் பேசுவதைத் தமிழன் எப்போதும் வெறுக்க மாட்டான் என்று ஓர் ஆண்டு மலரில் யாரோ எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது. ஆங்கிலத்தில் வணக்கம் செலுத்தி, ஊர்ப் பெயரையும் சொல்லி வழி கேட்டேன். 'ஐ டோண்ட் நோ' என்றார் அந்தத் தமிழரும். எனக்கு இவ்வாறு பதில் சொல்லிவிட்டு, உடனே பக்கத்தில் இருந்தவரிடம் தமிழிலே பேசிக் கேட்டார். "'மாமுடிமானபல்லி' அந்த ஊர் உனக்குத் தெரியுமா அய்யா ?" என்றார்.

அவர் உடனே, "அதோ தெரியுதே அந்த ஊர்; இந்தக் கொடி வழியே போக வேண்டும்" என்று திசையைச் சுட்டிக்காட்டினார். இருண்ட வழியில் போய்க்கொண் டிருந்தவனுக்கு மின்னல் மின்னியது போல் இருந்தது அவருடைய உதவி.

ஒரு பெருமூச்சு விட்டு "அப்பா! யாரைக் கேட்டாலும் தெரியவில்லை என்று சொல்கிறார்கள்; கடைசியில் நீங்கள்தான் சொன்னீர்கள்" என்று நன்றியுணர்வோடு அவரைப் பார்த்து, "எத்தனை மைல் ?" என்றேன்.

"இங்கிருந்து ஒரு கல் தூரம் தான். எல்லாருக்கும் தெரிந்த ஊர்தான். ஆனால் நீங்கள் வெள்ளைய கவுண்டனூர் என்று கேட்டிருக்க வேண்டும். அப்படிக் கேட்டிருந்தால் எல்லாரும் சொல்லிவிட் டிருப்பார்கள். மாமுடிமானபல்லி என்றால் சிலருக்குத்தான் தெரியும்" என்றார்.

"அந்த ஊருக்குத்தான் இந்தப் பெயரா? இன்றைக்குத்தான் நான் கேள்விப்படுகிறேன்" என்றார் மற்றவர்.

"வெள்ளைய கவுண்டனூர் என்பதுதான் பழைய பெயர். மாமுடிமானபல்லி என்ற பெயர் ரிஜிஸ்தர் ஆபீசில்தான் தெரியும். நான் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுச் சாட்சிக்குப் போயிருப்பதால் எனக்கு தெரியும்" என்றார் எனக்கு உதவியவர்.

நன்றி கூறி விடைபெற்றேன். கூலியாளிடம் பெட்டியைக் கொடுத்துவிட்டு அவர் காட்டிய கொடி வழியில் நடந்தேன். "எந்த ஊருக்கு?" என்றான் கூலியாள். "வெள்ளையகவுண்டனூருக்கு" என்றேன். "ஒரு கல் தூரம் இருக்கிறது சாமி. பார்த்துக் கூலி கொடுக்க வேண்டும்" என்றான். "சரி, நட" என்று நடந்தேன்.

வீட்டிற்குப் போய்ச் சேர்ந்து நண்பரைக் கண்டதும் நான் பட்ட தொல்லையை எடுத்துரைத்தேன். "அடடா" என்று கையை நொடித்தார் அவர்; "நான் கடிதத்தில் அதை எழுத மறந்து விட்டேன். வெள்ளையகவுண்டனூர் அல்லது வெள்ளையானூர் என்று கேட்டால்தான் சொல்வார்கள். நான் தெளிவாக எழுதியிருக்கவேண்டும்" என்று வருத்தத்தை முகத்தாலே தெரிவித்துக்கொண்டார்.

"மாமுடிமானபல்லி என்று கடிதத்தில் விலாசம் எழுதினால் வந்து சேருமா?" என்றேன்.

"இரண்டு இடத்தில்தான் அந்தப் பெயர் தெரியும். ஒன்று ரிஜிஸ்தர் ஆபீஸ். மற்றொன்று தபால் ஆபீஸ். ரிஜிஸ்தர் ஆபீசில் வெள்ளையகவுண்டனூர் என்று எழுதினால் பத்திரம் செல்லாது. தபால் ஆபீசில் செல்லும். அதனால் வருகிற தபாலில் பெரும்பாலான கடிதங்கள் வெள்ளையகவுண்டனூர் என்றுதான் வரும்" என்றார்.

ஆர அமர இருந்து, அந்தச் சிற்றூரின் தெருக்களைச் சுற்றிப் பார்க்கலாம் என்று மாலையில் புறப்பட்டேன். தெருக்களாக இல்லை; எல்லாம் குடிசைகளின் கதம்பமாக இருந்தன. முப்பது குடிசைகள் சேர்ந்தாற்போல் இருந்தன. கொல்லைக் கொட்டாய்களாக ஆங்காங்கே நாற்பது ஐம்பது குடிசைகள் சிதறியிருந்தன. எல்லாம் சேர்ந்து வெள்ளைய கவுண்டனூர் என்ற பெயரில் அடங்கக் கூடியவை எழுபது எண்பது குடிசைகள். அங்குள்ள நீர்வளமும் நிலவளமும் நோக்க, வீட்டுவளம் எவ்வளவோ மட்டமாக இருந்தது. நீர்க்கும் நிலத்துக்கும் இருந்த வளத்தை வாழ்க்கையில் பயன்படுத்தாத குறையே என்று உணர்ந்து வருந்தினேன்.

அன்று இரவு உணவு உண்டு, நிலவொளியில் ஊரை அடுத்த பெரிய பாறையின் மீது உட்கார்ந்து நண்பருடனும் மற்றொருவருடனும் பேசிக்கொண்டே மெல்ல அசைந்து வந்த தென்றலின் இன்பதை நுகர்ந்துகொண்டிருந்தேன். தென்றலை அசைவளி என்று பண்டைப் புலவர்கள் பாராட்டிய திறத்தை எடுத்துரைத்தார் நண்பர்.

"தென்றலுக்கு அசைவளி என்று அழகான பெயர் வைத்துப் பாராட்டினார்கள் சங்கப் புலவர்கள். நீங்கள் உங்கள் ஊருக்கு மாமுடிமானபல்லி என்று யாருக்கும் தெரியாத பெயர் வைத்துப் பாராட்டுகிறீர்கள்" என்றேன்.

"பெயராவது பாராட்டாவது! யாருக்குத் தெரியும் அந்தப் பெயர்? இந்த ஊரில் வாழ்கிறவர்களைக் கேட்டாலே அந்தப் பெயர் ஒருவர்க்கும் தெரியாது. பச்சூர்க் கணக்கருக்குத் தெரியும்; மணியகாரருக்குத் தெரியும். எனக்கே போன தை மாதத்துக்கு முன் தெரியாது. எங்கள் வீட்டில் சொத்துப் பங்கிடும் போது எழுதினார்களே, அப்போதுதான் தெரியும். அப்போது தகப்பனார் சொன்னார்" என்றார் உடனிருந்தவர்.

"என்ன சொன்னார்?" என்று கேட்டார் நண்பர்.

"அந்தப் பெயர் இருபது ஆண்டுகளுக்கு முன்னே வைத்த பெயராம். பொப்பிலி ராஜா அதிகாரத்தில் இருந்தபோது, இந்தக் கிராமங்களை எல்லாம் குப்பம் தாலுக்காவில் சேர்த்துச் சித்தூர் ஜில்லாவில் அடக்குவதற்காக முயற்சி செய்தார்களாம். அதற்காக ஊர்ப்பெயர்களை எல்லாம் தெலுங்குப் பெயர்களாக மாற்றி ரிகார்டுகளில் ஏற்றிவிட்டார்களாம்" என்றார் அவர்.

"குப்பம் தாலுக்கா இப்போது எந்த மாவட்டம்?" என்று நான் குறுக்கிட்டேன்.

"முன்னே வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருந்தது. இருபது ஆண்டுகளுக்கு முன்னே சித்தூரில் சேர்த்துவிட்டார்கள்" என்றார் அவர்.

"அப்படியானால் உங்கள் ஊர்க்கு வட ஆர்க்காடு மாவட்டம் என்று முகவரி கொடுத்தீர்களே" என்றேன்.

"குப்பம் தாலுக்காவைப் பெரியதாக்கிச் சித்தூர் ஜில்லா விழுங்கப் பார்த்தது; அதன் தொண்டை சிறியது ஆகையால் பிடிக்கவில்லை. இந்தக் கிராமம் எல்லாம் சித்தூரின் வாய்க்குள் போக முடியாமல் நின்றுவிட்டது" என்றார் அவர்.

"இப்படி இந்தக் கிராமம் ஒன்றுதான் நின்று விட்டதா?'' என்றேன்.

"ஏழெட்டுக் கிராமங்கள் நின்றுவிட்டன" என்று அவற்றின் பழைய தமிழ்ப் பெயர்களையும் யாருக்கும் தெரியாமல் பதிவு நிலையத்தில் மட்டும் வழங்கும் புதிய பெயர்களையும் சொல்லிவந்தார்.

**பழைய தமிழ்ப் பெயர்**

பச்சூர்
பழையனூர்
புதூர்
கட்காலூர்
பழையபேட்டை
கோமுட்டியூர்
வெலாரிப்பட்டி

**தெரியாத புதுப் பெயர்**

பந்தாரபல்லி
அதன கவுனி பல்லி
கொண்ட சிந்தன பல்லி
கொத்தூர்
ஜயந்திபுரம்
பய்யப்ப நாயனு பேட்டெ
நல்ல கதிரன பல்லி

இந்தப் பெயர்களை வைக்கத் துணிந்தவர்களின் வீரத்தைப் பாராட்டுவதா, அல்லது அவர்களின் துணிவுக்கு இடம்தந்த தமிழரின் தாராள மனப்பான்மையைப் பாராட்டுவதா என்று தெரியவில்லை.

தமிழரின் தாராள மனப்பான்மைக்கு என்றும் குறைவு இல்லை. ஆனால் விழுங்க எழுந்த சித்தூர்

மாவட்டத்தின் தொண்டைதான் குறுகலாக இருந்தது. இல்லையானால் இருந்த தமிழ்ப் பெயர்கள் எப்போதோ மறைந்து போயிருக்கும்; "முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்" என்று பாரியின் வண்மையைப் பார்த்துக்கொண்டிருந்த கபிலரைப் போல் தமிழர்களும் மகிழ்ச்சியோடு இருந்திருப்பார்கள்.

இன்று இந்தத் தமிழ்ப் பெயர்களை மக்கள் இன்னும் நினைவில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அது தமிழ்மக்களின் மொழிப்பற்றையோ நாட்டுப் பற்றையோ காட்டவில்லை. ஆந்திர அரசியல் தலைவர்களுக்கு அந்தக் காலத்தில் இருந்த 'போதும்' என்ற மனப்பான்மையே காரணம் என்று கூறவேண்டும். ஆந்திரர் விழுங்க ஆயத்தமாக இருந்திருந்தால், தமிழர் வழங்க ஆயத்தமாக இருந்திருப்பார்கள்.

தமிழர்களுக்கு இதற்கென்று ஆயத்தம் ஒன்றும் தேவை இல்லை. நாட்டையும் மலையையும் பாரி வழங்கியது போல், மானத்தைத் தவிர மற்ற எல்லாவற்றையும் வாரி வழங்குவது தமிழர்க்கு இயற்கையான பண்பு. அப்படி வழங்கிவிட்டு வாழ வழி இல்லாமல் திகைப்பதில் தனி மகிழ்ச்சியும் கண்டவர்கள் தமிழர்கள். தம்மைப் பெற்று வளர்க்கும் நாட்டுத் தாயையும் பேணி வளர்க்கும் மொழித் தாயையும் புறக்கணிக்கும் அளவிற்குத் தமிழர்க்குத் தாராள மனப்பான்மை உண்டு. தாய் அரிசிப் பிச்சை எடுக்க மகன் அன்னசத்திரம் கட்டினான் என்பது இந்த நாட்டுப் பழமொழிதான். "ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை பெருஞ்செல்வம் உற்றக் கடை" என்பது இந்தத் தமிழ் மொழியில் திருவள்ளுவர் என்பவர் எழுதிய எழுத்துத்தான்.

ஆகவே, இன்று சித்தூரின் எல்லையில் அழகான தமிழ்ப் பெயர்கள் அமைந்த ஊர்கள் காணப்படுவது

விந்தை என்றே கூற வேண்டும். ஆந்திரர் தம் முயற்சியை நிறுத்திக்கொள்ளவே அந்தந்த ஊர் மக்கள் பழைய பெயர்களையே வழங்கிவருகிறார்கள். வெலாரிப் பட்டி, புதூர், பச்சூர் முதலான பழைய நல்ல தமிழ்ப் பெயர்கள் இன்று நம் செவி குளிர வழங்குகின்றன. பச்சூரை அடுத்துள்ள ஓர் ஊருக்கு நாட்டறம்பள்ளி என்று பெயர். அதைச் சொல்லச் சொல்ல நா இனிக்கின்றது.

நண்பருடைய மாமுடிமானபல்லியின் உண்மைப் பெயரும் நல்ல பெயர்தான். வெள்ளையகவுண்டன் என்பவன் முதலில் குடிசை அமைத்து வளம்படுத்தி வழிகாட்டிய ஊர் அது. ஆகையால் அவனுடைய பெயரால் அதை வெள்ளையகவுண்டனூர் என்று வழங்குகிறார்கள். நன்றியுணர்வு மிக்க தமிழருக்கு இவ்வாறு பெயர் வைப்பது இயல்பே.

நண்பருக்கு நான் சொன்னேன்: "இனிமேல் மாமுடிமானபல்லி என்று வழங்காதீர்கள். தயவு செய்து இந்தத் தாராள மனப்பான்மையை விட்டு விடுங்கள்" என்றேன்.

"அரசாங்கம் வைத்த பெயர். அதை எப்படி மாற்றுவது?" என்றார்.

"மாற்றுவது அல்ல இது; மறந்துவிடுவது; இதற்கு முயற்சியே வேண்டாமே" என்றேன்.

"இருந்துபோகட்டுமே எந்தப் பெயராவது" என்றார்.

"இந்தத் தாராள மனப்பான்மைதான் தமிழருக்கு வேர்ப் புழுவாக இருப்பது; இதுவே தமிழரைக் கடமை யுணர்ச்சி அற்ற மரங்களாக ஆக்கியது. இனிமேலும் இந்தப் பேச்சு வேண்டாம் அய்யா. விருத்தாசலமும் வேதாரண்யமும் தாராள மனப் பான்மையைக் காட்ட இருக்கின்றன. நல்ல காலமாக

அங்கெல்லாம் எல்லைத் தொல்லை இல்லை. எல்லை யிலாவது கண் திறந்து வாழ வேண்டாமா?'' என்றேன் நான்.

"இந்தச் சிறு சிறு வேறுபாடு எல்லாம் மறையப் போகிறது'' என்று வாயைச் சப்பினார் நண்பர்.

"அய்யா! உலகத்தில் மற்ற இனங்கள் நடக்கவும் முயலவில்லை. நீ ஏன் ஓட்டத்திற்கு வரிந்து கட்டுகிறாய்? தலைவர் பண்டித நேரு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் சொன்னதை மறக்காதே. 'நீங்கள் பொதுவுடைமைக்காரர், ஏன் சொத்து வைத்திருக்கிறீர்கள்?' என்று யாரோ கூட்டத்தில் அவரைக் கேட்டார்கள். 'பொதுவுடைமைத் திட்டம் நடைமுறையில் வரும்போது, தனிச்சொத்தை இழப்பதில் நான் முதலில் நிற்பேன்' என்றார் அவர். இது தான் அறிவாளிகளின் போக்கு; நேர்மையான வழியும் இதுதான். மற்ற நாட்டு மக்கள் பிறரை விழுங்கும் பேராசையை இன்னும் விடவில்லை. நீ மட்டும் ஏன் தற்காப்பும் தேடமாட்டேன் என்கிறாய்?'' என்று ஆத்திரத்தோடு தொடங்கி மெல்ல அடங்கினேன்.

"என்ன செய்யச் சொல்கிறீர்கள்?'' என்றார் நண்பர்.

"ஊரெல்லாம் சேர்ந்து எழுதிப் போடுங்கள், பழைய பெயரே இருக்கவேண்டும் என்று.''

"அந்த விண்ணப்பம் நேராகக் குப்பைத் தொட்டிக்குப் போகும்.''

நண்பர் இவ்வாறு சொன்னது உண்மைதான் என்று எனக்குப் பட்டது. யாரோ சில அதிகாரிகள் ஆந்திர ஆட்சியின்கீழ் ஒரு நாளில் எண்ணியவுடன் மாமுடிமானபல்லி என்று மாற்றிவிட்டார்கள். ஆனால் நெடுங்காலமாக வழங்கிய பெயரே இருக்க வேண்டும் என்று ஊரார் எல்லாரும் சேர்ந்து பாடு

பட்டாலும் இப்போது நடப்பதாகத் தெரியவில்லை. நம்பிக்கையும் இல்லை. மேலிடத்தாரின் எண்ணம் எல்லாம் உடனே செயலாகிறது; மக்களின் முயற்சி எல்லாம் குப்பையாகிறது. இந்த விந்தையை எண்ணிப் பார்த்தேன். ஆங்கிலேயர் அமைத்த பழையமுறை குடியாட்சி முறையாலும் அசைக்க முடியாததாக இருப்பதை உணர்ந்தேன். உடனே மற்றொன்றும் எண்ணினேன். பெயரளவில் வந்துள்ள கிராமமக்களின் வாழ்வின் அளவில் வளர்ந்துவிட்டால் இத்தகைய முயற்சிகள் எளிதில் நிறைவேறும் என்று நம்பிக்கை கொண்டேன். நண்பரைப் பார்த்து, "என்ன கொடுமை! ஊரில் வாழ்கிற மக்கள் வைக்கிற பெயரைத்தானே அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்? ஊருக்குப் பெயர்வைக்க ஊராருக்கு உரிமை இல்லையா?" என்றேன்.

நண்பர் பேசாமல் இருந்தார்.

திடீரென்று என் உள்ளத்தில் ஒளி வீசியது. "ஒன்று செய்யுங்கள். அது உங்களால் ஆகும். பத்திரம் எழுதுவதும் பதிவு செய்வதும் என்றோ ஒருநாள் நடப்பது. தபால் போக்குவரத்து நாள்தோறும் உள்ளது. இனிமேல் நோன்பு வைத்துக்கொள்ளுங்கள். எந்தக் கடிதத்திலும் வேறு எதிலும் மறந்தும் அந்த அந்நிய ஆதிக்கப் பெயரைக் குறிக்கக்கூடாது. அடுத்த தபாலில் எனக்கும் எழுதக் கூடாது. படித்தவர்களாகிய நாம் சிறு கடமையைச் செய்தால் படிக்காத பொதுமக்கள் தமிழ்ப்பெயரை மறக்க மாட்டார்கள்" என்றேன்.

நண்பர் உடனே தம் சட்டைப்பையில் எழுதி வைத்திருந்த மூன்று கடிதங்களை எடுத்து, அவற்றில் தேதிக்குமேல் குறித்திருந்த ஆந்திரப் பெயர்களை அடித்தார்.

"இப்படி வாழவேண்டும் தமிழர்கள்" என்றேன். நண்பர் புன்முறுவலோடு என்னைப் பார்த்தார்.

"காந்தியடிகள் அடிக்கடி சொல்லி வந்தது நினைவுக்கு வருகிறது. அஹிம்சை கோழையின் கருவியாக இருக்கக் கூடாது. வீரனின் கருவியாக விளங்க வேண்டும் என்பார். அதுபோல் தாராள மனப்பான்மை என்பது வாழத் தெரியாத கோழைத் தமிழரின் பேதைச் சின்னமாக இருக்கக் கூடாது; வாழ வல்ல வீரத் தமிழரின் வெற்றிப் பண்பாக விளங்க வேண்டும்; தேவையானபோது பிற நாட்டார்க்கு உதவியாக இருக்க வேண்டும்" என்றேன்.

# பயனற்ற உழைப்பு

மூளையின் வளர்ச்சியில் வேறுபாடு உண்டு. ஒருவர் மூளை வளர்வதுபோல் இன்னொருவர் மூளை வளர்வதில்லை. இந்த வேறுபாட்டிற்குக் காரணம் பெற்றோர்களின் மூளை வளர்ச்சியால் பெற்ற கூறாக இருக்கலாம். அல்லது, ஒருவர் இளமையில் பெற்ற கல்வியின் செல்வாக்கால் இருக்கலாம். அல்லது, விரும்பியோ விரும்பாமலோ ஒருவர் மேற்கொண்ட பயிற்சியே காரணமாக இருக்கலாம். அதனால்தான் சிற்சிலருக்கு மூளை ஒருவகைப் போக்குடையதாகவும் இன்னும் சிலர்க்கு வேறு ஒரு போக்குடையதாகவும் வளர்தலைக் காண்கின்றோம். மாணவர் சிலருடைய மூளை கணக்கில் வல்லதாக இருக்கிறது. வேறு சிலருடைய மூளைக்கு வரலாறு மிக விருப்பமானதாக இருக்கிறது.

கணக்கில் திறமையுடைய மாணவனை வரலாறு கற்குமாறு வற்புறுத்துவதில் பயன் இல்லை. அதுவே போல் வரலாற்றை விரும்பும் மாணவனைக் கணக்கிலும் தேறுமாறு வற்புறுத்துவதில் பயன் இல்லை. வரலாற்றிற்கும் கணக்கிற்கும் வெவ்வேறு வகை மூளை வளர்ச்சிகள் தேவை இருத்தல் போலவே பல மொழிக் கல்விக்கும் தனிவகையான மூளைவளர்ச்சி தேவை.

கணக்கில் திறமை காட்டாதவருக்கும் சாதாரணக் கூட்டல் வகுத்தல் கழித்தல் பெருக்கல் தெரியும். அவர்களுக்கு அந்த அளவிற்குக் கணக்கறிவு போதும். வரலாற்றில் விருப்பம் இல்லாதவர்களுக்கும் சேரர், சோழர், பாண்டியர், ரஜபுத்திரர், முகலாயர் என்பவர்களைப் பற்றி மேற்போக்காகக் கொஞ்சம் தெரியும்.

அவர்கள் வரலாற்றை ஆழ்ந்து கற்று நினைவில் வைத்துக்கொள்ளாவிட்டாலும் மேற்போக்காக அறிந்துள்ள இந்த வரலாற்று அறிவு அவர்களுக்குப் போதும். அது போலவே பல மொழிக் கல்விக்குரிய மூளைத் திறன் இல்லாதவர்களுக்கும் தாய்மொழியில் கருத்துக்களை வெளியிடத் தெரியும். தாய் மொழி அறிவு ஒன்று மட்டும் இந்த அளவிற்கு இருப்பது அவர்களுக்குப் போதும்.

ஆனால் எல்லோரும் பல மொழி கற்றாகவேண்டும் என்று வற்புறுத்துவது தவறாகும். எல்லோரும் கணக்கில் வல்லவராக வேண்டும், அல்லது எல்லோரும் வரலாற்றை ஆராய்ந்து படித்தாக வேண்டும் என்று வற்புறுத்துவது எவ்வளவு பெரிய தவறோ அவ்வளவு பெரிய தவறாகும் இது. ஆலமரத்தின் வளர்ச்சி வேறு; தென்னை மரத்தின் வளர்ச்சி வேறு; வாழை மரத்தின் வளர்ச்சி வேறு. பரவலாகக் கிளைகள் விட்டு வளரும் ஆலமரம், தென்னை மரம் போல் உயர்ந்தும் வளர வேண்டும் என்று விரும்பினால் அதன் இயற்கைக்கு மாறாகும்; நிகழ முடியாததும் ஆகும். ஓங்கி உயரும் தென்னைமரம், ஆலமரம் போல் பரவலாகக் கிளைகள் விட்டுச் செழிக்க வேண்டும் என்று விரும்புவதும் இத்தகையதே ஆகும். ஆலமரத்தைத் தென்னை போல் ஆக்க முயன்று கெடுக்கவும் வேண்டாம். தென்னை மரத்தை ஆல்போல் ஆக்கமுயன்று கெடுக்கவும் வேண்டாம். ஒவ்வொன்றும் அதன் அதன் போக்கிலேயே வளர விடுவது நல்லது. இயற்கை, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொருவகை ஆற்றல் கொடுத்து வளர்த்து வருகிறது. தென்னைமரத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு என்றால் ஆலமரத்திற்கும் வேறு ஒரு தனிச் சிறப்பு உண்டு. ஈடு செய்யும் முறையிலேயே இயற்கை எல்லாவற்றையும் வளர்த்துவருகிறது. மூளையின்

வளர்ச்சியிலும் இந்த உண்மை அமைந்து கிடக்கின்றது. வரலாற்று மூளைக்கு ஒரு வகை ஆற்றல் உண்டு என்றால், கணக்கு மூளைக்கும் மற்றொரு வகை ஆற்றல் உண்டு. பல மொழி கற்கும் மூளைக்கு ஒருவகைத் திறமை உண்டு என்றால், பிற மொழி கற்க முடியாத மூளைக்கும் வேறு ஒருவகைத் திறமை அமைகிறது. ஆகவே பல மொழி கற்க வேண்டும் என்று பொதுவாக எல்லோரையும் வற்புறுத்துவது தவறான செயல் ஆகும். ஒரு மொழிக்கு மேல் கற்கத் தேவை இல்லை என்று கூறுவதும் பொருந்தாததே ஆகும். பல மொழி கற்க வல்லவர்கள் அவ்வாறே கற்கட்டும், மற்றவர்கள் தாய்மொழியையாவது நன்றாகக் கற்க வேண்டும் என்று விடுவதே நல்ல முறையாகும்.

தச்சன் செய்யும் தொழில் வேறு. கொல்லன் செய்யும் தொழில் வேறு. அவரவர் தொழிலை அவரவர் செம்மையாகச் செய்தாலே போதும். ஒவ்வொருவரும் தச்சுத் தொழிலையும் கொல்லர் தொழிலையும் (இரண்டையும்) கற்றே தீர வேண்டும் என்று வற்புறுத்தலாகாது. அப்படி இரண்டு தொழில்களிலும் வல்லவர்கள் இரண்டொருவர் இருக்கலாம். இரண்டொருவர் இருப்பதைப் பார்த்துவிட்டு எல்லோரும் அப்படி ஆக வேண்டும் என்பது வீண் கனவு ஆகும். அவ்வாறே பல மொழி கற்க வல்ல மூளை உடையவர்கள் ஒரு சிலர் உள்ளனர். அவர்களை எல்லோரும் பின்பற்றிப் பல மொழி கற்க வேண்டும் என்று வற்புறுத்துவது ஒவ்வொருவரும் பல தொழில் கற்றிருக்க வேண்டும் என்று வற்புறுத்துவது போன்றதே ஆகும். அந்த வற்புறுத்தல் ஆக்கத்தை விட அழிவையே பெரிதும் வளர்ப்பது ஆகும்.

தாய்மொழியோடு வேறு ஒரு மொழியோ இரு மொழியோ சேர்த்துக் கற்பது நினைவு ஆற்றல் மிகுந்

தவர்களுக்கு முடியும். பல மொழிக் கல்வி என்பது பலவகை ஒலிகள், பலவகைச் சொற்கள், பலவகைச் சொற்றொடர்கள் ஆகியவற்றைக் கற்பதாகும். அத்தகைய நினைவாற்றல் பலருக்கு அமைவதில்லை. சிறப்பாகக் கருத்து ஊற்று எடுக்கும் மூளை உடையவர்களுக்கு அத்தகைய நினைவாற்றல் அமைவது அரிதாக உள்ளது. நினைவாற்றல் மூளையைப் பரப்பு உடையதாக்கும். சிந்தனை ஆற்றல் மூளைக் கூர்மையை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த இரண்டு போக்கிற்கும் உள்ள வேறுபாடு ஆலமரத்திற்கும் தென்னை மரத்திற்கும் உள்ள வேறுபாட்டைப் போன்றது.

இந்த உண்மையை உணராதவர்கள் கல்வித் துறையில் தலையிடுவார்களானால் எல்லோரும் பல மொழியைக் கற்றாக வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். அவ்வாறு செய்வதன் வாயிலாகப் பலருடைய வாழ்வு முன்னேற முடியாதவாறு முட்டுக்கட்டையான பல விதிகளையும் அமைப்பார்கள்.

தமிழ்நாடு கண்ட சிறந்த மூளைகளில் ஒன்று கணித அறிஞர் இராமானுஜத்தின் மூளையாகும். அவருடைய கணக்கறிவும் அதற்குக் காரணமான மூளைக் கூர்மையும் மேற்குநாட்டு அறிஞர்களாலும் போற்றப்பட்டன. ஆனால் அவர் பிறந்த நாட்டின் கல்வி விதிகள் அவருடைய வாழ்விற்கு ஊறு செய்தன. வானளாவிய தென்னைமரமானாலும் பரவலாகக் கிளைகள் விட்டு வளரவேண்டும் என்று வற்புறுத்தினால் என்ன செய்ய முடியும்? பாவம்! அறிஞர் இராமானுஜத்தின் நுட்ப மூளை பிற மொழியாகிய ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற முடியாததாயிற்று. இண்டர்மீடியட் வகுப்பிலேயே ஆங்கிலத் தேர்வில் தோல்வி உற்றார்; வாடி வருந்தினார். சோர்வும்

வருத்தமும் அவருடைய உடலையும் தாக்கி இளமையிலேயே வாழ்வுக்கு முடிவு தேடின.

அறிஞர் இராமானுஜத்தின் மூளை மொழியைக் கற்கும் ஆற்றல் உடையதுதான். ஆனால் ஒரு மொழியைத்தான் கற்கும் ஆற்றல் அது. அவர் ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்ச்சி பெற்றிருக்க முடியும். ஆனால் குழந்தைப் பருவத்திலிருந்தே ஆங்கிலத்தைக் கேட்டும் பேசியும் பழகியிருந்தால் - ஆங்கிலமே அவருக்குத் தாய்மொழி ஆகியிருந்தால் - அது முடியும். அவ்வாறு அல்லாமல் தமிழ்த் தாய் அவரை வளர்த்த காரணத்தால் தமிழ் மொழி அவருடைய மூளைக்கு இயல்பான ஒரு மொழி ஆயிற்று. ஆகவே ஆங்கிலம் எளிதில் வராத பிற மொழி ஆயிற்று; ஆங்கில மொழித் தேர்வு அவருடைய வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் முட்டுக்கட்டையாய் நின்றது.

இராமானுஜர் ஒருவர் பட்ட தொல்லையை இன்றும் பல இளைஞர்கள் பட்டுவருகின்றனர். பிச்சை எடுக்கும் வறுமை இயல்பாகிவிட்ட நாட்டில் பிச்சை எடுப்பதன் கொடுமை விளங்காதது போல், இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் படும் தொல்லையும் நமக்கு இயல்பாகிவிட்டது; அதனால் அவர்களின் கல்வித் துறையில் உள்ள முட்டுக்கட்டை நமக்கு விளங்குவதில்லை. எட்டாம் படிவம் ஒன்பதாம் படிவங்களில் மேல் வகுப்பிற்குச் செல்ல முடியாமல் நிறுத்தப்படும் மாணவர்களில் பெரும்பாலார் ஆங்கிலத் தேர்வில் போதுமான எண் பெறமுடியாதவர்களே ஆவர். எஸ். எஸ். எல். சி. தேர்வில் தேற முடியாமல் அதோடு தம் படிப்பைச் சுருட்டிக்கொண்டு கிராமத்திற்குத் திரும்பும் இளைஞரில் பலர் இவ்வாறு பிறமொழியில் தேர்ச்சி பெற முடியாதவர்களே ஆவர். எப்படியோ எஸ். எஸ்.

எல். சி. தேறிக் கல்லூரிகளில் சேர்ந்தவர்களில் பலர் இண்டர்மீடியட் என்ற ஆற்றைக் கடக்க முடியாமல் தம் கல்விப் பயணத்தை நிறுத்திக்கொள்வதற்குக் காரணம், முதல் பிரிவாகிய ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற முடியாததே ஆகும். பி. ஏ., பி. எஸ் சி., பி. ஏ. ஆனர்ஸ் முதலிய வகுப்புக்களில் சேர்ந்து அரிய பெரிய அறிவுத் துறைகளைக் கற்க முனைந்த இளைஞரில் பலர், அந்த அறிவுத் துறைப் பாடங்களில் திறமை பெற முடியாமல் வெறும் பட்டங்கள் மட்டும் பெற்றுப் பல்கலைக் கழகங்களை விட்டு வெளியேறு வதற்குக் காரணம், கருத்துக்களை வளர்க்கக் காலம் செலவிட முடியாமல் ஆங்கில ஒலிகளையும் ஆங்கிலச் சொற்களையும் சொற்றொடர்களையும் கற்றுத் தேர் வதில் பெரும் பகுதிக் காலங்களைக் கழித்துவிட்ட பாவமே ஆகும். இப்படி இந்த நாட்டு இளைஞர்கள் ஒவ்வொரு படியிலும் தட்டுத் தடுமாறி வீழ்ந்து நலி வதைப் பற்றி யாரும் அவ்வளவாகக் கவலைப்படுவ தில்லை. நாட்டின் பெரும்பான்மையான இந்த இளைஞரின் துன்பத்தைப் போக்கப் பாடுபடுவதும் இல்லை. காரணம், இது நமக்கு இயல்பு ஆகிவிட்டதே ஆகும். பழக்கப்பட்டுப் போன குறையும் ஒருவகைப் பண்பாடாகத் தெரியும் போலும்!

தவிர, இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் கிராமங்களில் உழைத்து உண்டு வாழ்வோர் ஆவர். அவர்களை மறந்து அமைக்கப்படும் எந்தக் கல்வித் திட்டமும் நாட்டிற்குப் பயனுள்ள கல்வித் திட்டம் ஆகாது. கிராமக் குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்கள் பிற மொழிகளைக் கற்பதில் பெரிதும் இடர்ப்படுகின்றனர். ஆகையால் பிற மொழிக் கல்வி யை வற்புறுத்துதல் கிராமத்தாரின் கல்விக்கே இடை யூறு ஆகின்றது. அவர்கள் தங்கள் தாய் மொழியை

நன்முகக் கற்பதற்கும், விரும்பினால் மற்றொரு மொழியை ஓரளவு கற்பதற்கும் வாய்ப்புக் கொடுத்து; அறிவுத்துறைப் பாடங்களை மிகுதியாகக் கற்பதற்கு வழி வகுக்க வேண்டும்.

நகர மாணவர்களிலும் எல்லோரும் பல மொழிகளைக் கற்கும் ஆற்றல் உடையவர் அல்லர். ஒரு வீட்டில் வெவ்வேறு மொழி பேசும் குடும்பங்கள் வாழ்வதை நகரங்களில் காணலாம். ஒரு குடும்பத்தின் தலைவி மற்றொரு குடும்பத்தினரின் மொழியை நன்முகக் கற்றுக்கொள்கிருள். வெறும் பேச்சுப் பழக்கத்தாலேயே நன்முகக் கற்றுக்கொள்கிருள். ஆனால் அந்தக் குடும்பத்தின் தலைவன் அவ்வாறு அதைக் கற்றுக்கொள்ள முடிவதில்லை. அவன் பிற மொழி பேசத் தடுமாறுகின்முன். அந்தக் குடும்பத்தின் குழந்தைகளுக்குள்ளும் ஒரு குழந்தை இளமையிலேயே பிறமொழி பேசக் கற்றுக்கொள்கின்றது. மற்றொரு குழந்தை வளர்ந்த பிறகும் தடுமாறுகின்றது. ஆகவே பிற மொழிக் கல்வி எல்லோருக்கும் எளிமையான துறை அன்று; சிலருக்கு எளியது; சிலருக்கு அரியது; இன்னும் சிலருக்கு மிக மிக அரிதாக உள்ளது. ஆகவே பிறமொழிக் கல்வியை நகர மாணவர்க்குள்ளும் ஒரு சிலர்க்கு விருப்பப் பாடமாக விட வேண்டுமே அல்லாமல் எல்லோருக்குமே வற்புறுத்தல் ஆகாது.

பல மொழி கற்க வல்ல நகர மாணவர் ஒரு சிலரைப் பொருத்தவரை ஆராய்ந்தாலும், அவர்களும் அறிவுத்துறைப் பாடங்களைக் கற்க வேண்டிய காலத்தைக் குறைத்தே பல மொழிக் கல்வியில் காலத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. ஆகையால் பல மொழி கற்போரும் மிக விழிப்பாக இருக்க வேண்டும். தாய் மொழியை மட்டும் நன்முகக் கற்க வேண்டும்.

அதைச் செம்மையாகப் பேசவும் எழுதவும் பயிற்சி பெற வேண்டும். ஆனால் பிற மொழியைக் கற்கும் போது இந்த ஆசை இருத்தல் கூடாது. கருத்துக்களை அறிவதற்குப் பிறமொழிக் கல்வியை நாட வேண்டுமே அல்லாமல் கருத்துக்களை வெளியிடுவதற்கு அதை நாடுதல் கூடாது. அப்படி நாடினால் இளமையின் உழைப்பும் ஆற்றலும் வீணாகும். இன்று தமிழ்நாட்டு இளைஞர்களின் மூளை உழைப்பும் ஆற்றலும் பெரும் பான்மை வீணாவது இப்படித்தான். ஆங்கில நூல் களைப் படித்தும் ஆங்கிலப் பேச்சுக்களைக் கேட்டும் அறிவைப் பெருக்க வேண்டும் என்ற ஆசை தமிழ் மாணவர்க்கு இருந்தால், அதனால் தீமை ஒன்றும் இல்லை அந்தத் திறமையைத் தமிழ் மாணவர் எளிதில் பெறுகின்றனர். ஆனால் ஆங்கில மொழியை ஆங்கிலேயர் போலவே எழுத வேண்டும் என்றும், ஆங்கிலேயர் போலவே பேச வேண்டும் என்றும் தமிழ் மாணவர் விரும்பி முனைவதனால்தான் முயற்சி வீணாகி ஏமாற்றம் அடைகின்றனர். வாழ்க்கையில் முன்னேற வல்லவர்களாக விளங்கும் ஜப்பானியரோ வங்காளியரோ இத்தகைய வீணாசை கொண்டு முயல் வதில்லை. அதனால்தான் அவர்களின் உழைப்பும் திறனும் பாழாவதில்லை. தமிழர் நிலைதான் இரங்கத் தக்கதாக உள்ளது. இதை எண்ணும்போது இன்று ஆங்கில எழுத்தாளர்களில் பழுத்த புலவராகிய சோமர்செட்மாம் என்பவர் கூறிய கருத்து நினை விற்கு வருகின்றது: "பிறமொழியில் உண்மையான பயிற்சி பெறுவதற்காகத் தேவைப்படும் உழைப்பு பயனற்ற உழைப்பாகும்." (The labour required to acquire a real familiarity with a foreign tongue is profitless—A Writer's Notebook by W. Somerset Maugham)

# ஏன் இந்தத் தயக்கம்?

'தமிழிலே கலைச் சொற்கள் உருவாக வேண்டும். அவற்றை அமைத்து நூல்கள் பல வெளிவர வேண்டும். அந்த நிலை வந்த பிறகுதான் கல்லூரிகளில் தமிழ் போதனை மொழியாக முடியும்'—இவ்வாறு இன்று ஆசிரியர்கள் முதல் அரசியலார் வரையில் பலரும் கூறத் தலைப்பட்டுவிட்டனர்.

தமிழ்நாடு முன்னேற முயலும்போதெல்லாம் இதற்கென்றே தனிவகையான முட்டுக்கட்டைகள் தோன்றிவருகின்றன. தமிழ்நாட்டு அறிஞர்களே பெரும்பாலும் அவற்றிற்குக் காரணமாக இருக்கின்றனர். இது மிக வருந்தத் தக்கது. நாட்டின் ஆட்சி மொழியாகவும் பல்கலைக் கழக அறிவுமொழியாகவும் தமிழ் வளர்வதற்கு அரியதொரு வாய்ப்புக் கிடைத்த போதும் இந்த முட்டுக்கட்டை முன்வந்துவிட்டது.

தமிழில் கலைச் சொற்கள் உருவாகத் தேவை இல்லை என்று கூறவில்லை. அவற்றை அமைத்து நூல்கள் வெளிவர வேண்டா என்றும் கூறவில்லை. ஆனால், இவ்வளவும் குறைவின்றி அமையும் வரையில் தமிழ் போதனை மொழியாக ஆதல் கூடாது என்று சொல்வதுதான் வருந்தத் தக்கதாகும்.

எந்தத் துறையிலும் நல்ல நூல்கள் வெளிவர வேண்டுமானால் அதற்கு முன்பே அந்தத் துறையில் சிந்தனை வளர்ந்திருக்க வேண்டும். சிந்தனை வளர்ந்த பிறகுதான் செம்மையான நூல்கள் எழ முடியும். இன்று விஞ்ஞானத் துறையில் நூல்கள் இல்லையே என்று குறைகூறுவோர் தமிழில் அந்தத் துறையில்

சிந்தனை வளர்த்தவர் இல்லையே என்பதை உணர வேண்டும்.

விஞ்ஞானத் துறையில் தாய்மொழியில் சிந்தனை வளராமைக்குக் காரணம் என்ன? கற்றுத் தேர்ந்த ஆசிரியர்கள் ஆங்கிலத்தின் வாயிலாகவே விஞ்ஞான நூல்களைக் கற்றார்கள்; மாணவர்களுக்குக் கற்பிக்கும் போதும் ஆங்கிலத்தின் வாயிலாகவே கற்பிக்கின்றார்கள்; கற்கும் மாணவர்களும் ஆங்கிலத்தின் வாயிலாகவே கற்கின்றார்கள். ஆகவே, அறிவை வளர்க்கும் பொறுப்புடைய கல்வியுலகம் தாய் மொழியில் சிந்தனை வளர்வதற்கு ஒரு சிறு வாய்ப்பும் தரவில்லை; வாய்ப்புத் தராமலே இருந்துவிட்டு இன்று தாய்மொழியைக் குறை கூறுகிறார்கள். ஆங்கிலத்திற்கு உள்ள ஆற்றலும் வளமும் தமிழுக்கு இல்லை என்று கூசாமல் குறை கூறுகிறார்கள்.

ஆங்கிலம் அந்த ஆற்றலும் வளமும் பெற்றது எவ்வாறு? உலகத்தின் விஞ்ஞானிகளெல்லாம் இங்கிலாந்தில் பிறந்தவர்களா? ஆங்கில மொழியில் எழுதியவர்களா?—இரண்டும் இல்லை. ஆங்கில நாட்டிலும் ஒரு சில விஞ்ஞானிகள் பிறந்தார்கள்; ஆங்கிலத்தில் எழுதினார்கள். பெரும்பாலோர் பிற நாட்டாரே; பிற மொழியினரே. அவ்வாறு இருக்க ஆங்கிலம் அறிவுமொழியாக ஆற்றலும் வளமும் பெற்றது எவ்வாறு? ஆங்கிலப் பல்கலைக் கழகங்கள் தம் தாய்மொழியாகிய ஆங்கிலத்தின் வாயிலாகவே பிறநாட்டு நல்லறிஞரின் கருத்துக்களை உணரத் தலைப்பட்டதே காரணம் ஆகும். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக் கழகங்கள் ஆங்கில மொழியின் வாயிலாகவே ஜெர்மன் விஞ்ஞானிகளின் கருத்துக்களை மாணவர்களுக்குக் கற்பித்தன. ஆங்கில மாணவர் அக்கருத்துக்களைச் சிந்தனை செய்து ஆங்கில

மொழியில் பேசவும் எழுதவும் வல்லவராக விளங்கினர். வகுப்புகளில் பேசவும் தேர்வுக்கூடத்தில் எழுதவும் அவர்கள் பெற்ற அந்த ஆற்றலே பிற்காலத்தில் மேடைகளில் எடுத்துரைக்கவும் நூல்களில் செம்மையாக எழுதவும் துணை செய்தது; காலப் போக்கில் ஆங்கில மொழி பல விஞ்ஞான நூல்களையும் பெற்று வளம் நிரம்புவதற்கும் காரணம் ஆயிற்று.

இந்த முறையைத் தமிழ்அறிஞர்கள் போற்றி வருவார்களானால், நாட்டுக்கும் நாட்டு மொழிக்கும் நன்மை செய்தவர் ஆவார்கள். ஆனால், ஏழெட்டு நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டுப் பிறர்க்கு அடங்கி வாழ்ந்த இனம் ஆகையால், தமிழர்க்குப் போதிய உரிமை உணர்ச்சி இன்னும் பிறக்கவில்லையோ என்று எண்ணவேண்டி யிருக்கிறது. தமிழிலே கற்பிக்கலாம், தட்டுத் தடுமாறியேனும் கருத்துக்களை உணர்த்தலாம் என்ற துணிவு ஆசிரிய உலகத்துக்குப் பிறக்கவில்லை. நம் அறிவு தெளிவும் உரமும் பெறவேண்டுமானால் எவ்வளவு குறைகள் இருந்தபோதிலும் தாய்மொழியின் வாயிலாகவே கற்று உணர முற்படுவோம் என்ற வேட்கை மாணவர் உலகத்துக்குப் பிறக்கவில்லை. இடையிடையே இரண்டொரு சொற்கள் தாய்மொழியில் பேசுதல் தம் மதிப்பைக் குறைத்து விடுமோ என்று அஞ்சுகின்றனர் ஆசிரியர்கள். தாய்மொழிக்குக் காலத்தைச் செலவிடுதல் ஆங்கிலத் திறனைக் குறைத்துவிடுமோ என்று தயங்குகின்றனர் மாணவர்கள். தொடக்கப்பள்ளி ஆசிரியரேயாயினும் 'சைலன்ஸ்' என்று ஆங்கிலத்தில் கூற விரும்புகின்றனரே அல்லாமல், 'அமைதி' என்ற சொல்லைப் பயன்படுத்த மனம்கொள்ளவில்லை. ஒருகால் அவர் மொழிப் பற்றுக் கொண்டு துணிந்து கூறிவிடினும் மாணவர்

களின் செவியைச் 'சைலன்ஸ்' என்ற சொல் ஈர்க்கும் அளவிற்கு 'அமைதி' என்ற சொல் வயப்படுத்த முடியவில்லை. அவ்வாறே 'ப்ரசென்ட் சார்' என்று மாணவர்கள் சொல்லும்போது ஆசிரியர்களின் திருவுளம் மகிழும் அளவிற்கு 'உள்ளேன் ஐயா' என்ற ஒலியால் மகிழ்வதில்லை; நேர்மாறாக மருள்வதும் உண்டு. இந்தச் சிறு சிறு செய்திகளுக்கும் தமிழ் அறிவுமொழியாவதற்கும் தொடர்பு இல்லைபோல் தோன்றலாம்; தொடர்பு உண்டு. இரண்டுக்கும் அடிப்படையானது ஒரே வகை மனப்பான்மையே. கதர்ச்சட்டைக்கும் நாட்டுவிடுதலைக்கும் எவ்வளவு தொடர்பு உண்டோ அவ்வளவு தொடர்பு இவற்றிற்கும் உண்டு. சிறு சிறு நிகழ்ச்சிகளில் தமிழைப் பேசவும் கேட்கவும் கூசும் மனம்தான் போதனை மொழியாகத் தமிழ் வர முடியாது என்னும் அளவிற்கு எண்ணுகின்றது. இரண்டிற்கும் அடிப்படையான காரணம் நெடுங்காலம் இருந்து வந்த அடிமைத்தனத்தால் அமைந்துள்ள தாழ்வுமனப்பான்மையே ஆகும். தமிழரின் கடைகளில் உள்ள ஆங்கில விளம்பரப் பலகைகள், வீட்டுப் பெயர்கள், தமிழர்கள் எழுதும் கடிதங்களில் உள்ள பெயர்க் குறிப்புக்கள், முகவரி முதலியவை இதே மனப்பான்மையைத்தான் புலப்படுத்துகின்றன. இந்தியாவில் வேறு எந்தப் பகுதியிலும் இந்நிலைமை இல்லை. ஆங்கில மொழி அளிப்பது பெருமை என்றும், தாய்மொழியால் பெறுவது சிறுமை என்றும் எண்ணும் நெஞ்சத்தை இந்தப் பலகைகள் முதலியவற்றில் காணலாம். நியூயார்க்கிலிருந்து வந்து சென்னையில் விமானத்தில் இறங்கும் மலையாளி இன்னொரு மலையாளியைக் கண்டவுடனே மலையாள மொழியில் கொஞ்சிக் குலவ, தமிழ்நாட்டுத் தென்னந் தோப்பில் பொழுதுபோக்கும் தமிழர் இருவர் ஆங்கில

மொழியிலேயே பேசி மகிழ்கின்றனர்! அரைகுறை யாக ஆங்கிலம் படித்த தமிழர்களும் தமிழ்ச் செய்தித் தாளை வாங்கிப் படிக்க மனம் இல்லாமல் நாட்டு நன்மையின்மீது சவாரி செய்யும் ஆங்கிலச் செய்தித் தாளையே வாங்கிப் படிக்க விழைகின்றனர். செய்தி களையும் தாய்மொழியின் வாயிலாக உணர முடியாது என்று இவர்கள் நெஞ்சம் அஞ்சுகின்றது எனலாம். அல்லது, தமிழ்ச் செய்தித் தாளைக் கையில் ஏந்தியிருந் தால் ஆங்கிலம் அறியாதவர் என்று பிறர் தவருக எண்ணிவிடுவரோ என்று தயங்குவதாக இருக்கலாம்.

இவ்வாறு அஞ்சியும் தயங்கியும் தமிழர்கள் பெற்ற நன்மை ஏதேனும் உண்டா? முற்காலத்தைப் போல் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் இக்காலத்தில் இல்லை என்று பெற்ருேர்கள் குறைகூறுகின்றனர். முற்காலத்தைப்போல் மாணவர்கள் ஆர்வம் கொண்டு அறிவு வளர்ப்பதில்லை என்று ஆசிரியர்கள் குறை கூறுகின்றனர். கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்று அதிகாரிகள் இருசாராரையும் குறை கூறுகின் றனர். அதிகாரிகள் முன்போல் கடமையைச் செய்வ தில்லை என்று அரசியலார் குறை கூறுகின்றனர். உரிமை உரிமை என்று பேசி மாணவர் உலகைக் கெடுத்துவிட்டனர் என்று அரசியலாரை அனைவரும் குறை கூறுகின்றனர். ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குப் புது வழி காண வேண்டும் என்று அறிஞர்கள் முற்பட்டுள்ளனர். சீர்குலைவும் குழப்ப முமே எங்கும் உள்ளன.

ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்துவது என்ருல் என்ன? தமிழர் ஒவ்வொருவரும் ஆங்கில மொழியில் பேசவும் எழுதவும் வல்லவராகச் செய்வதா? ஒரு நாட்டு மக்கள் அனைவரும் பிற மொழியில் வல்லவராக முடியுமா? இத்தகைய முயற்சி எந்த நாட்டிலேனும்

வெற்றி பெற்றதுஉண்டா? நூற்றைம்பது ஆண்டுகள் இருந்த ஆங்கில ஆட்சியிலேனும் வெற்றியைக் கண்டது உண்டா? ஆங்கில ஆட்சியில் நூற்றுக்கு எழுவர் படித்தவர். அவர்களிலும் நூற்றுக்கு ஒருவர் அல்லது இருவரே ஆங்கிலம் கற்றவர். ஆயிரத்துக்கு ஒருவர் அல்லது இருவரே ஆங்கிலத்தில் உரையாட வல்லவர். பதினாயிரத்துக்கு ஒருவர் அல்லது இருவரே மேடையில் ஆங்கிலத்தில் முழங்க வல்லவர். நூறாயிரத்தில் ஒருவர் அல்லது இருவரே ஆங்கிலத்தில் பிழையின்றி எழுத வல்லவர். கோடியில் ஒருவர் அல்லது இருவரே ஆங்கிலேயரும் பாராட்டத் தகுந்த வகையில் அந்த மொழியைக் கையாள வல்லவர். வல்லவர் என்று குறிக்கப்படும் இந்தப் பெருமக்களின் வாழ்க்கையை ஆராய்ந்தால் ஓர் உண்மை விளங்கும். தாய்மொழியைத் தியாகம் செய்த காரணத்தால்தான் இவர்கள் ஆங்கிலத்தில் புலமை பெற முடிந்தது என்பது அந்த உண்மை. இளமையிலேயே ஆங்கில (கான்வென்ட்) பள்ளியில் சேர்ந்து ஆங்கிலத்திலேயே கல்வி தொடங்குவது, தமிழ் அறியாத ஆங்கிலேயருடனே பழகுவது, வீட்டிற்கு வரும் நாட்களிலும் கூடுமான வரையில் தமிழில் பேசாமல் இருப்பது, பெற்றோர்க்கும் நண்பர்க்கும் ஆங்கிலத்திலேயே கடிதம் எழுதுவது, திருக்குறள் முதலான தமிழ்ப் புத்தகங்களைப் பற்றி ஒன்றும் அறியாமலே வளர்தல், ஆங்கில நடையுடைகளையே போற்றித் தமிழ் மட்டும் பேசுவோரிடத்தே பழகாதிருப்பது............இவ்வளவும் செய்து தாய்மொழியைத் தியாகம் செய்த ஒருசிலர்தான் ஆங்கிலேயர் போற்றும் அளவிற்கு ஆங்கிலத்தில் வல்லமை பெறமுடிந்தது. இந்த நிலைமையோ இதற்கு அடுத்த நிலைமையோ தமிழர் அனைவரும் பெறவேண்டும் என்று எதிர்பார்ப்பது வீண் கனவாகும். ஆங்

கிலம் மட்டுமல்லாமல்—வடமொழி, இந்தி முதலான எந்த மொழியிலும் தமிழர் ஒரு சிலர் உயர்ந்த தரம் பெற முடியும். அதற்கு வழி, தமிழைப் புறக் கணித்து அந்தந்த மொழியை மட்டுமே இடை விடாமல் படிப்பதேயாகும். இத்தகையவர் ஒரு சிலர் நாட்டுக்கு என்றும் தேவையே. அவர்களைத் தமிழ்நாடு என்றைக்கு வேண்டுமானாலும் படைத்துக் கொள்ள முடியும். மேற்கூறிய முறையில் ஒருசிலர்க் குப் பாதுகாப்பான கல்வி அளித்துப் பிறமொழியில் வல்லவர்களாகச் செய்து நாடு அவர்களைப் பயன் படுத்திக்கொள்ள முடியும். ஆனால், நாட்டிலுள்ள எல்லோரும் அப்படி ஆக வேண்டும் என்று முயல்வது வீண் கனவாகும். கிங் காங் போல நாட்டுக்கு ஒருவர் இருவர் இருக்கலாம்; ஆனால் எல்லோரும் வேளைக்குப் பல கோழியைப் பதம் பார்க்க வேண்டும் என்று திட்டம் வகுப்பது அறிவுடைமை அன்று.

தாய்மொழிக் கல்வி இயற்கையானதாகும். தமிழ் மண்ணில் வாழை வளமுற வளர்வதுபோல், சிறிது இடம் கொடுத்தாலும் இளைஞரின் மூளையில் தாய் மொழி விரைந்து வளர்ந்துவிடும். இதற்குப் பெரிய ஆராய்ச்சி வேண்டாம். இன்றைய நிலையையே எண்ணிப் பார்த்தால் போதும். இவ்வளவு தாழ்வு மனப்பான்மையும், ஆங்கில மோகமும் குடிகொண் டுள்ள இந்தக் காலத்திலேயே மாணவர் உலகத்தில் தமிழ் வளர்ந்துள்ள வேகம் வியத்தற்குரியதாகும். ஆங்கிலத்துக்கு எல்லாச் சிறப்பும் இருந்த அந்தக் காலத்தில் பேச்சிலும், எழுத்திலும் வல்லவர் பதினா யிரத்தில் ஒருவர், நூறாயிரத்தில் ஒருவர் என்று அருகி யிருந்தல் கண்டோம். அதே கண்களால் இன்று என்ன காண்கின்றோம்? ஒவ்வோர் ஊரிலும், ஒவ்வொரு கல்லூரியிலும், பள்ளியிலும், ஒவ்வொரு வகுப்பிலும்

தங்குதடை இன்றித் தமிழ் பேசும் ஆற்றலுடைய மாணவர் பலரைக் காண்கின்றோம். அழகான கையெழுத்துப் பத்திரிகை நடத்திக் கதைகளும், கட்டுரைகளும் எழுத முன்வரும் இளைஞர் பலரைக் காண்கின்றோம். "நீ பேசு, சிறிது பேசு, எப்படியாவது பேசு" என்று ஆங்கில மேடைக்கு அழைக்கும் நிலைமை போய், 'எனக்கு இடம் கொடுங்கள், நான் சிறிது பேச வேண்டும், எப்படியாவது இடம் கொடுங்கள்' என்று இளைஞர்கள் வேண்டி நெருக்குகின்ற தமிழ் மேடையைக் காண்கின்றோம். ஆங்கில ஆசிரியர் எழுதிக் கொடுத்ததை நெட்டுருச் செய்து மேடையில் ஒப்புவிக்க முடியாமல் திணறிய காட்சி போய், தமிழாசிரியர் சொல்லிக் கொடுத்த இரண்டொரு குறிப்புக்களையே நீள வளர்த்துக்கொண்டு நெடுகப் பேசும் இளைய மூளைகளைக் காண்கின்றோம். பல புத்தகங்களைக் கொடுத்து, அவற்றைப் படித்து ஒரு சிறு கட்டுரையாவது எழுது என்று வற்புறுத்தும் ஆங்கில நிலைமை போய், கட்டுக் கட்டாகத் தமிழ்க் கதைகளும், நாடகங்களும் கட்டுரைகளும் எழுதிக் குவித்து வைத்துக்கொண்டு, 'இவற்றை வெளியிட்டு ஆதரிப்பார் இல்லையே!' என்றும் ஏங்கும் இளைஞர் பலரை இன்று ஊர்தோறும் காண்கின்றோம். எவ்வளவு பெரிய மாறுதல்! உயர்நிலைப் பள்ளிகளில் தமிழை முதல் மொழி என்று ஆக்கியவுடனே இத்தகைய மாறுதல் வேகமாக ஏற்படத் தொடங்கிவிட்டது. பல்கலைக் கழகங்களில் விஞ்ஞானம் முதலிய கலைகளைக் கற்பிக்கும் மொழியாகத் தமிழை உயர்த்தும் நிலைமை வந்துவிட்டால் தமிழ் இளைஞர்கள் பலர் அந்தக் கலைகளில் சிந்திக்கும் நிலை பெற்று விளங்குவர் என்பது திண்ணம். அதன் பயனாக அறிவுக் கூர்மைக்குப் பெயர் பெற்ற இந்த நாட்டில் விஞ்ஞானிகள்

பலர் தோன்றித் தமிழிலே அரிய விஞ்ஞான நூல்கள் எழுதுவர் என்பதும் திண்ணம்.

ஆனால், இந்த மாறுதலை விளைவிப்பதற்கு நாட்டின் தலைவர் சிலர் உளங்கொளல் வேண்டும். அதற்கு அஞ்சாமையும் துணிவும் வேண்டும்.

மராட்டியரிடையே, குஜராத்தியரிடையே நல்ல காலமாக இதற்கு வேண்டிய சூழ்நிலை அமைந்து விட்டது. ஆங்கிலேயர் வென்று கைப்பற்றிய நாள் வரையில் உரிமையோடு வாழ்ந்த இனம் மராட்டிய இனம். அதனால் அவர்களின் உரிமை உணர்ச்சி மங்கவில்லை; மடியவில்லை. ஆங்கிலத்தில் எவ்வளவு தேர்ச்சியும் புலமையும் பெற்றவர்களும் அந்நாட்டில் தாய்மொழிக் கடமையை மறக்கவில்லை. திலகர், கோகலே போன்ற பெருமக்கள் ஆங்கிலத்தில் வல்லுநர்; ஆயினும் மராத்திக்கே ஆக்கம் தேடினர்; இன்றும் ஜயகர் உள்ளார். அவர் பூனாப் பல்கலைக் கழகத் தலைவர். ஆங்கில நாட்டின் பெரு மதிப்புக்கு உரிய 'ரைட் ஆனரபில்' என்னும் பட்டம் பெற்று இன்று உயிருடன் வாழும் இந்தியர் அவர் ஒருவரே. ஆங்கில மொழிக்கு அவரைவிடக் கடமைப்பட்ட இந்தியர் வேறு எவரும் இல்லை எனலாம். அத்தகையவர் அங்கே என்ன செய்தார், செய்கின்றார்? பக்கத்து நாட்டில் குஜராத்தில் முன்ஷி போன்றவர்களின் முயற்சியால் குஜராத்தி மொழி போதனை மொழியாக அமைவதற்கு முன்னே பூனாப் பல்கலைக் கழகத்தில் மராத்தி மொழி போதனை மொழியாக விளங்குமாறு செய்ய முனைகிறார். ஏன்? கல்வியின் இயல்பையும், கற்கும் மாணவரின் தன்மையையும், மூளையின் இயற்கையையும் அவர் நன்கு உணர்ந்தவர். ஒன்பதாம் வயது முதல் இருபத்தைந்தாம் வயதுவரை ஒருவன்

ஆங்கிலத்தை எவ்வளவு போற்றிக் கற்றுவந்த போதி லும் ஆங்கிலச் சொற்கள் பலவற்றைக் கற்கமுடியுமே தவிரக் கருத்துக்களிலோ கலைகளிலோ தெளிவு பெற் றவன் ஆக முடியாது என்பதை நன்கு உணர்ந்தவர். ஆங்கிலச் சொற்களையும் வாக்கியங்களையும் நெட்டு ருச் செய்து இளைஞர்கள் காலத்தைப் போக்குவதால் நாட்டுக்கு நன்மை விளையாது என்பதைத் தெளிந் தவர் அவர். பத்து ஆண்டுகள் ஆங்கில மொழியின் வாயிலாக விஞ்ஞானத்தைக் கற்பதைவிட ஐந்து ஆண்டுகளின் அளவில் தாய்மொழியின் வாயிலாகக் கற்றுப் பல மடங்கு தெளிவுபெற முடியும் என்பதை அறிந்தவர் அவர். ஆதலின், கலைச் சொற்கள் அமைக் கப்படும் வரையில் நூல்கள் இயற்றப்படும் வரையில் காத்திருத்தல் கூடாது என்று மராத்தியைப் போதனை மொழி ஆக்க முனைந்துள்ளார்.

ஒரு தலைமுறை இடர்ப்பாடு இருக்கலாம். ஒன் றுமே செய்யாமல் இருத்தலைவிட இடர்ப்பட்டு முன் னேறுதல் நல்லது. கற்பிக்கும் ஆசிரியர் கையில் ஆங் கில விஞ்ஞான நூல்களே இருக்கலாம்; கற்கும் மாண வர்களின் கையிலும் அந்த நூல்களே இருக்கலாம். அந்த நூல்களை வைத்துக்கொண்டே ஆசிரியர் தாய் மொழியில் பேசி உணர்த்தலாம்; மாணவரும் தாய் மொழியில் கேட்டு உணரலாம். தேர்வுக்கூடத்திலும் மாணவர்கள் தாய்மொழியிலேயே எழுதலாம்; ஒருசில ஆங்கிலச் சொற்களைக் கலந்தும் எழுதலாம். சிறிது தடுமாறலாம். அதனால் தீங்கு ஒன்றுமில்லை. தனக்கு என்று கருத்தே இல்லாமல் நெட்டுருச்செய்து தடு மாறுவதைவிடக் கருத்துக்கள் நிரம்ப வைத்துக் கொண்டு ஒருசில சொற்கள் இல்லாமல் தடுமாறுதல் மேலானதாகும். முன்னைய தடுமாற்றம் மூளையை

வளரவொட்டாமல் மங்கச் செய்வது; பின்னைய தடு மாற்றம் மூளையைத் தூண்டி வளர்ச்சிக்குத் துணை செய்வது. ஆதலின் இந்தத் தடுமாற்றத்தை மகிழ்ந்து வரவேற்க வேண்டும். ஷேக்ஸ்பியரின் 'மாக்பெத்' என்னும் நாடகத்தின் சிறப்பைக் குறித்து மாணவன் ஆங்கிலத்தில் படிக்கின்றான்; ஆசிரியரும் ஆங்கி லத்தில் கற்பிக்கின்றார். ஆயினும் ஆங்கிலத்தில் எழுதுவதென்றால், எழுதவேண்டுமென்று கட்டாயப் படுத்தும்போதும், அவனுடைய மூளை ஏ. சி. பிராட் லேயின் வாக்கியங்களை நினைந்து அழுகின்றது. மூன்று நான்கு பக்கங்கள் எழுதுவதற்கும் பெரும்பாடு படு கின்றான். ஆனால், ஆங்கிலத்தில் படித்த அதே மாக் பெத் நாடகத்தைப் பற்றி வேடிக்கையாகத் தமிழில் எழுதத் தொடங்கிவிட்டாலோ அவனுடைய கை நிற்பதில்லை. வேண்டாத அளவுக்கும் அவனுடைய கட்டுரை நீண்டுவிடுகின்றது. இதை உணர்ந்துதான் ஹோமர், தாந்தே போன்ற பிறமொழிப் புலவர்களின் காவியங்களையும் ஆங்கிலப் பல்கலைக் கழகங்கள் ஆங்கிலத்தின் வாயிலாகவே கற்பித்து, ஆங்கிலத்தி லேயே கட்டுரை எழுதச் செய்கின்றன. ஆகவே, நூல்கள் எந்த மொழியில் இருப்பினும் இருக்க, கற் பித்தலும் கற்றலும் தாய்மொழியில் இருத்தல் கடமை என்ற தெளிவுதான் இன்று தமிழ்நாட்டு அறிஞர்க்கு வேண்டும். ஒரு தலைமுறை வரையில் இந்த நிலைக்கு இடம் கொடுப்போமானால், அடுத்த தலைமுறையிலே விஞ்ஞான நூல்கள் பல தாய் மொழியிலேயே இயற்றப்பட்டுவிடும். இந்தத் தலை முறையில் தாய்மொழியில் சிந்தனை வளர இடம் கொடுப்போம். அடுத்த தலைமுறையில் நூல்கள் எழ வழிவகுத்தவர்களாவோம். இந்த நாட்டில் அறிவுக் குப் பஞ்சம் இல்லை. தொன்றுதொட்டு மூளைவளம்

உடைய நாடு இது. ஆதலின் நம்பிக்கை கொள்வோம். துணிவோம்.

ஐயகர் போன்ற அறிஞர்கள் துணிந்துவிட்டனர். நீந்தக் கற்றுக்கொள்ளும் வரையில் நீரில் கால்வைக்க மாட்டோம் என்று அவர்கள் தயங்கவில்லை. நமக்கு மட்டும் ஏன் இந்தத் தயக்கம்?

# அன்னையின் துயர்

உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியர் வேலைக்கு ஒருவர் வேண்டும் என்றால், உடனே பி. ஏ. அல்லது எம். ஏ. படித்து, ஆசிரியப் பயிற்சி பெற்று எல். டி. பட்டமும் பெற்றுள்ள ஒருவரைத் தேடுவார்கள். இதுபோலவே, கணக்கு ஆசிரியர்வேலைக்கு ஒருவர் வேண்டும் என்றாலும், கணக்கை விருப்பப் பாடமாக எடுத்துப் படித்துப் பி. ஏ., எல். டி. பட்டம் பெற்றுள்ளவரைத் தேடுவார்கள். இப்படியே மற்றப் பாடங்களுக்கும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். இதுதான் நெடுங்காலமாக இருந்துவந்துள்ள முறை; இன்றும் இருக்கும் முறை. முதல் முதலில் இப்படி ஏற்படுத்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் கிழக்கு இந்தியக் கம்பெனியைச் சார்ந்த ஆங்கிலேயர்களால் எண்ணப்பட்டன. பிறகு ஆங்கில அரசாங்கம் நிலைபெற்ற பிறகு அரசாங்கத்தைச் சார்ந்த ஆங்கிலேயர்கள் அந்தப் பள்ளிகளை ஏற்படுத்தினார்கள். அவர்கள் எல்லோரும் தங்கள் தாய்நாடாகிய இங்கிலாந்தில் உள்ள பாடத் திட்டத்தையும் அமைப்பையும் அவ்வாறே பின்பற்றி வகுப்புக்களையும் கல்வி வகைகளையும் ஒழுங்குபடுத்தினார்கள். முதலில் உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்துக்கும் மற்றப் பாடங்களுக்கும் ஆசிரியர்களாக அமர்ந்தவர்கள் ஆங்கிலேயர்களே. பிறகு அவர்களிடம் பயின்று தேர்ச்சி பெற்ற இந்தியர்களும் ஆசிரியர்களாக அமர்ந்தார்கள். இந்த நிலைதான் படிப்படியாக வளர்ந்து வளர்ந்து இன்றைக்கு இந்தியர்களே நடத்தும் கல்வி நிலையங்

களாக இருக்கக் காண்கின்றோம். இப்படி வளர்ச்சி அடைந்து வந்த நிலையில், இந்தியர்கள் நிறையக் கிடைத்தபோது, இன்ன பட்டம் பெற்றவர்களே இன்ன ஆசிரியராகத் தொழிலாற்றலாம் என்ற விதிகள் வகுக்கப்பட்டன. உயர்நிலைப் பள்ளிகளில் பி. ஏ., எல். டி. படித்துத் தேறியவர்களே வேண்டும் என்பது கட்டாயம் ஆயிற்று.

இவ்வளவும் ஆங்கிலத்தையும் மற்றப் பாடங்களையும் பொறுத்த வரலாறு. ஆனால், தமிழ் முதலான இந்நாட்டு மொழிகளின் நிலை என்ன? இன்று, கீழ்வாயிலக்கம் மேல்வாயிலக்கம் முதலான பழந் தமிழ்க் கணக்கின் நிலை எதுவோ அதுவே தொடக்கத்தில் பொதுவான தமிழ்க் கல்வியின் நிலையாகவும் இருந்தது.

அந்தத் தொடக்க நிலையில் தமிழ் கற்க வேண்டுமானால், உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு வெளியேதான் கற்க வேண்டியிருந்தது. "தமிழ், வீட்டில் பேசுகிற மொழி. அது படிக்காமலே வரும். அதற்காகப் பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டுமா?" என்று கூசாமல் சொல்வார்கள். இவ்வாறு தம்மை மறந்து தாய் மொழிக் கடமையையும் மறந்தவர்கள் சில சிற்றூர்களில் பெருந் தொகையினராக இருந்தும், அந்த ஊர்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் தமிழ் கற்கும் வகுப்பே இருப்பதில்லை. தமிழ் எழுத்தின் மணமும் அங்கே தலையெடுப்பதில்லை. பெயரால் தமிழர்கள்; ஆனால் தமிழை மறந்து வயிறு வளர்ப்பவர்கள்; ஆங்கிலேயர் உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்திய காலத்தில் இப்படிப்பட்ட தமிழர்களே பெருகியிருந்தார்கள். அவர்கள் தமிழைக் கைவிட்டு மற்றவற்றைக் கற்று முன்னேறினார்கள். ஆனால் அந்தப் பள்ளிகளை நடத்திய ஆங்கிலேயர்களுக்கு இந்தக் குறை

மெல்ல மெல்லத் தெரிந்துவிட்டது. உடனே, உயர்நிலைப் பள்ளியின் கல்வி முறையில் மாறுதல் செய்தார்கள். ஆங்கிலம் சிறப்பு மொழியாகக் கற்கப்படுவதோடு, தாய்மொழியும் ஒரு சிறிது கற்கப்பட வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்கள்.

அப்போதுதான், தமிழ்ப்பண்டிதர் என்ற புதிய பெயருடன் ஒருவகை இனம் தோற்றம் கொண்டது. நாட்டு மொழிகள் என்று வகைப்படுத்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, உருது முதலான எல்லா மொழிகளையும் ஒரே கண்ணால் கண்ட ஆங்கிலேயர்கள், இந்த மொழிகளைக் கற்றுணர்ந்த புலவர்களையும் பண்டிதர் (பண்டிட்) என்ற ஒரே பெயரால் குறித்தார்கள். வடநாட்டுப் புலவர்களை மட்டும் குறிக்க வழங்கிய அந்தச் சொல் தென்னாட்டுப் புலவர்களையும் குறிக்க வழங்கியது. ஆங்கில அரசாங்கம் அதை ஒரு பொதுச்சொல்லாக மேற்கொண்டது. புரவலர்—புலவர் என்று இருந்த பழைய தமிழ்நாட்டு நிலைமை இவ்வாறு மாறி, கல்வி நிலையங்கள்—தமிழ்ப்பண்டிதர்கள் என்ற புதிய நிலைமை வந்தது.

ஆங்கிலேயர்கள் தமிழ்ப் புலவர்களின் மனம் புண்படாதவாறே நடந்துகொண்டார்கள். ஏற்ற பெருமையும் நிலையும் கொடுத்தார்கள். பட்டம் முதலியவை தமிழ்க்கல்விக்கு இல்லாத காலம் ஆகையால் தமிழறிஞர்களின் வாய்ச் சொல்லுக்கும் கையெழுத்துக்கும் மதிப்புக் கொடுத்து, அவர்கள் சுட்டிக் கூறுகின்றவர்களைத் தேர்வு ஒன்றும் வைக்காமல் தமிழாசிரியர் வேலைக்கு ஏற்படுத்தினார்கள். அவர்கள் விரும்புகின்ற பாடங்களை விரும்புகின்ற முறையில் வேண்டியவர்களுக்கு மட்டும் கற்பிக்குமாறும் ஏற்பாடு செய்தார்கள். மிக எளிய வாழ்க்கையில் வாழ்ந்து பழகியவர்களே தமிழ்க்கல்வியில் காலம் போக்கிக்கொண்டிருந்தார்

கள். ஆகையால், அவர்களே ஆசிரியர்களாக முன் வந்தார்கள். பணப்பற்றுக் குறைந்து கல்விப்பற்றே மிகுந்த அவர்கள் மிகக் குறைந்த வருவாயில் வேலை செய்ய உடன்பட்டார்கள்.

தொடக்கத்தில் ஆங்கில ஆசிரியராக இருந்தவர்கள் ஆங்கிலேயர்களே ஆகையால், ஆங்கில ஆசிரியர் வேலைக்கு மிகுதியான சம்பளம் தொடக்கத்தில் ஏற்படுத்தப்பட்டது. அவர்களைத் தொடர்ந்து இந்தியர்களே ஆங்கில ஆசிரியராக வந்தபோதும் அந்த உயர்ந்த சம்பளமே அவர்களுக்கும் கொடுக்கப்பட்டுவந்தது. ஆனால், எளிய வாழ்க்கையில் தேர்ந்து குறைந்த வருவாயில் தொழிலேற்றவர்கள் தாய்மொழி ஆசிரியர்கள் (பண்டிதர்கள்). அவர்களை அடுத்து வந்தவர்களுக்கும் அந்தக் குறைந்த வருவாயே கொடுக்கப்பட்டு வந்தது. தமிழைப் புறக்கணித்துவிட்டோ, அல்லது மறந்துவிட்டோ, மற்ற மொழிகளையும் பாடங்களையும் கற்றுத் தேர்ந்தவர்கள் பட்டமும் பெற்றுச் செல்வாக்கும் பெற்றுவிட்ட பிறகு, பி. ஏ., எல். டி., எம். ஏ., எல். டி. என உயர்ந்த வருவாயுள்ள ஆசிரியர்களாக அமர்ந்த பிறகு, "தமிழாசிரியர்களுக்கு எங்களைப்போல் படிப்பும் பட்டமும் இல்லை" என்று குறைகூறினார்கள்; கூறிவருகின்றார்கள். தமிழ்ப் பற்றும் பயிற்சியும் மிகுந்து பல ஆண்டுகளைக் கழித்த பாவத்தால், பட்டமும் பயனும் பெறாமல் தமிழாசிரியர்கள் இந்தக் குறைகூறலுக்கு ஆளானார்கள்.

இந்த நிலையை மாற்ற வேண்டும் என்று முயன்ற முயற்சிகள் பல. பி. ஏ. முதலான ஆங்கிலப் பட்டம் போல். தமிழ்க்கல்விக்கும் பட்டம் வேண்டும் என்று ஒரு முயற்சி தொடங்கியது. மதுரைத் தமிழ்ச்சங்கம் பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் என்ற மூவகைத் தேர்வுகளை ஏற்படுத்திப் பண்டிதர் என்ற

பட்டம் கொடுக்கத் தொடங்கியது இந்த நிலையில் தான். தென்னிந்தியத் தமிழ்ச்சங்கம், தமிழ்த்தேர்வு, இளந்தமிழ்ப்புலவர், புலவர் என்ற தேர்வுகளை ஏற் படுத்திப் புலவர்என்ற பட்டம் வழங்கத்தலைப்பட்டது. அப்போதும் ஆங்கிலப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் குறை கூறுவதை நிறுத்தவில்லை. "இவர்கள் ஏதோ பரீட்சைகள் எழுதினாலும், எங்களைப் போல் பட்டம் பெறவில்லை. எல். டி. ஆகவில்லை. பயிற்சி பெற வில்லை" என்றார்கள். மேலதிகாரிகளுக்கு இவ்வாறு எடுத்துச் சொல்லிச் சொல்லித் தமிழாசிரியர்களைக் குறைந்த வருவாயிலேயே விட்டுவிட்டார்கள். அப்போதும் அந்தக் குறைகூறலைப் போக்க இரு வகை முயற்சிகள் தொடங்கப்பட்டன. ஒன்று, பி. ஏ., எம். ஏ. என்னும் பட்டப் படிப்புகளிலும் தமிழ்ப்பாடங்களை வைத்த மாறுதல்; அதனால் பலர் கல்லூரிவகுப்புக்களில் தமிழை விருப்பப் பாடமாக எடுத்துக் கற்றுத் தேறி மற்றவர்களின் செருக்கை அடக்க முற்பட்டார்கள். மற்றொரு முயற்சி: பண்டிதர் பட்டம் பெற்றவர்களுக்கும் பெறுதவர்களுக்கும் தமிழாசிரியராகத் தகுதி பெறு வதற்குப் பயிற்சிப் பள்ளிக்கூடம் (சிதம்பரம் மீனாட்சி கல்லூரியில் பண்டிதர் பயிற்சி பெறுவதற்குச் செய்த ஏற்பாடு) தலையெடுத்தது.

பயிற்சிப் பள்ளிக்கூட அமைப்புக்குப் பிறகும் தமிழாசிரியர் நிலைமை சீர்ப்படாமலே இருந்து வந்தது. பயிற்சி பெற்றவர்களை நோக்கி மற்றவர் கள், "இவர்கள் பயிற்சி பெற்றது உண்மைதான். ஆனால், இலக்கியம் கற்று ஏதாவது பட்டம் பெற் றிருக்கிறார்களா?" என்று குறைகூறினார்கள். மது ரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர் பட்டம் பெற்ற வர்களையும் "இவர்கள் எங்கோ ஒரு தனிப்பட்ட

சங்கத்தால் நடக்கும் சாதாரணப் பரீட்சையில்தானே தேறினர்கள்? எங்களைப் போல் அரசியலாரால் போற்றப்படும் பட்டம் பெறவில்லையே! மதுரைத் தமிழ்ச்சங்கம் ஒரு சிறிய தமிழ்ச் சங்கம்தானே! அது ஒரு பல்கலைக் கழகமா?'' என்றார்கள்.

இதையும் மாற்றிவிட வேண்டும் என்று தமிழறிஞர் கா. நமச்சிவாய முதலியார் முதலான பெரியோர் முயன்று, பல்கலைக் கழகத்திலேயே வித்வான் பட்டம் முதலியவற்றை நாட்டு மொழிகளுக்காக ஏற்படுத்தினார்கள். அப்போதும் வடமொழியும் தமிழும் உடன் கற்றால்தான் பட்டம் என்ற தளையை உடைத்தெறிந்து, தனித் தமிழ் கற்றுத் தேறியவர்களும் வித்வான் பட்டம் பெறுமாறு அறிஞர் நமச்சிவாய முதலியார் போராடி வென்று காத்தார்.

இவ்வாறு வித்வான் பட்டம் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட பிறகு, நூற்றுக் கணக்கான தமிழாசிரியர்கள் வாழ்க்கையில் மாணவர்களாக மாறிப் பல நூல்களைக் கற்றுத் தேர்வுமுறைகளை அறிந்து பணம் கட்டித் தேர்விற்குச் சென்று எழுதித் தேறி வித்வான் பட்டம் பெற்றார்கள். பத்துப் பதினைந்து குழந்தைகளைப் பெற்றவர்கள், நரையும் திரையும் நெருங்கியவர்கள், இன்னும் சில ஆண்டுகளில் ஓய்வுபெற இருந்தவர்கள், ஏறக்குறையக் கிழவர்களாகத் தோன்றியவர்கள் ஆகிய பலரும் முதுமையிலும் இளமை பெற்றவர்களாய், நூலும் கையுமாய், தேர்வுக் கட்டிடங்களைச் சுற்றிச் சுற்றி அமர்ந்து படித்தார்கள். மக்களையும் மருமக்களையும் பேரனையும் பேர்த்தியையும் மறந்து, பவணந்தியையும் தண்டியையும் தொல்காப்பியரையும் நச்சினார்க்கினியரையும் நினைந்து கற்றுக் கற்று உடல்நலத்தையும் கெடுத்துக்கொண்டார்கள்.

இவ்வாறு பெருமுயற்சி செய்து பட்டம் பெற்ற பிறகும் தமிழையும் தமிழ்கற்றவர்களையும் குறை கூறும் ஊத்தைவாய்கள் அடங்கவில்லை. "இவர்கள் எப்படியோ பட்டம் பெற்றுவிட்டார்கள். அவ்வளவு தான். இவர்கள் எங்களைப் போல் எந்தப் பள்ளிக் கூடத்திலாவது கல்லூரியிலாவது படித்தது உண்டா? வீட்டிலிருந்து, சிலநாள் வெளியே போய்த் தேர்வு எழுதிவிட்டார்கள். எங்களைப் போல் பத்துப் பதி னைந்து ஆண்டுகள் மாணவர்களாக இருந்து கல்வி நிலையங்களில் படிக்கவில்லையே" என்றார்கள்.

பொறுமையோடு இந்தக் குறையையும் போக்க முயன்றார்கள் தமிழ்ப் பெரியோர்கள். தமிழ்க் கல்லூரி களை ஏற்படுத்தினார்கள். திருவையாறும் கரந்தையும் தமிழ்மணம் கமழச் செய்தார்கள். அவர்கள் முயற்சி வளர்ந்து வளர்ந்து இன்று மயிலம் வேங்கடம் முதலிய மலைகளும் தமிழ் மணம் வீசுகின்றன. மடங்களும் சோற்று மணத்துடன் தமிழ் மணமும் உடையன வாய் விளங்குகின்றன. இளைஞர் பலர் ஆண்டு தோறும் அந்தக் கல்லூரிகளில் முறையாகத் தமி ழைக் கற்று உணர்வையும் அறிவையும் பெற்று ஊக்க மும் உரமும் மிகுந்தவர்களாய் வெளியே வருகின்றனர்.

இத்துணை மாறுதல்களையும் ஒருங்கே எண்ணும் போது, தமிழாசிரியர்கள் பட்ட பல இன்னல்களும் தெளிவாகின்றன. தமிழன்னை உற்ற குறையைவிட, அந்த அன்னையின் அணிவகுப்பில் சேர்ந்து போர் புரிந்து அவள் பெருமையை நிலைநாட்டும் பொருட்டு வாழ்வைக் கழித்த—கழித்துவருகின்ற—தொண்டர்க ளாகிய தமிழாசிரியர்கள் பட்ட துன்பமே பெரிது பெரிது என்று கூறல் வேண்டும்.

தமிழன்பர்கள் பலர் இந்தப் போர்வீரர்களுக்கு அவ்வப்போது ஆறுதல் கூறிவந்தார்கள். "உங்களுக்கு

மற்ற ஆசிரியர்கள் பகைவர்கள் அல்லர்; மேலதிகாரிகள் பகைவர்கள் அல்லர்; அந்நிய அரசாட்சியே உண்மையான பகை; ஆங்கில மொழியின் செல்வாக்கு ஒழிந்தால்தான் உங்கள் வாழ்வு ஓங்கும். உங்கள் போரும் அப்போதுதான் முடியும்" என்றார்கள். தமிழாசிரியர்களும் உண்மைதான் என்று நம்பி வந்தார்கள்.

ஆங்கில அரசாட்சியின் முடிவும் வந்தது. ஆங்கில மொழியின் செல்வாக்கும் தகர்ந்தது. ஆங்கிலத்தில் பேசினால் எள்ளிநகையாடும் காலமும் வந்தது. ஆங்கிலத்திற்கு உலக மொழி, அறிவு மொழி என்ற இரண்டு இடங்கள் மட்டும் கொடுத்துத் தமிழன்னையை அரியணை ஏற்றிச் சிறப்பிக்கும் நாளும் வந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியின்போது கற்பதற்குரிய மொழியாகவும், ஆங்கில ஆட்சியின்போது முதல் மொழியாகவும் சிறப்போடு வாழ்ந்த ஆங்கில மொழி உயர்நிலைப்பள்ளிகளில் இரண்டாம் மொழியாகியது; தமிழ் முதல் மொழியாகிவிட்டது. தமிழன்னை வெற்றி பெற்றாள் என்று நாடெங்கும் முரசு ஒலித்தது. போர் முடிந்தது என்று படைவீரர்களாக இருந்துவந்த தமிழாசிரியர்களும் ஆரவாரமாய் முழங்கினார்கள். வெற்றி விழாவின் மறுநாள், முதல் திருவோலக்கம் வழக்கம் போலவே நடைபெறுகின்றது. ஆங்கில அன்னை இருந்த இடத்தில் தமிழன்னை இருக்கின்றாள். மாறுதல் இவ்வளவே! ஆயினும் தமிழன்னையின் முகத்தில் வாட்டம் இருக்கின்றது. ஏன்? அவள் வென்றாள்; அரியணை பெற்றாள். ஆனால் அவளுடைய அணிவகுப்பில் நெடுங்காலமாக இருந்து ஆர்வத்தோடு போர் செய்து அவளுடைய பெருமைக்காக வாழ்வைக் கொடுத்துக் காத்துவந்த தமிழ் வீரர்கள்—முன் போலவே ஒதுக்கிடத்தில் விடப்பட்டிருக்கின்றார்கள்.

மற்றவர்கள் முன்போலவே செல்வாக்கான சிறப் பிடத்தில் நிற்கின்றார்கள். தமிழ் வீரர்கள் வெற்றிச் செருக்கினால் தலைமயங்கிச் சிறப்பிடமும் கேட்க வில்லை: மற்றவர்களுக்கு நிகரான இடமே கேட்கின் றார்கள்: தனிச்சிறப்பு ஒன்றும் கேட்கவில்லை. "ஒத்த இடமா? முடியாது" என்று எங்கிருந்தோ ஒரு குரல் கேட்கின்றது. "முடியாது. நீங்கள் கேட்பது அறம் அன்று" என்று மற்றொரு குரலும் எழுகின்றது. "உங்கள் அன்னைக்கு மட்டுமே முதலிடம்; உங் களுக்கு அன்று" என்று எவரோ கத்துவதும் கேட் கின்றது. "கேட்கும் நிலைக்கு ஏற்ற தகுதி உங் களுக்கு உண்டா?" என்று வேறு யாரோ வீறிடு வதும் கேட்கின்றது. தமிழன்னையின் முகத்தில் இருந்த வாட்டம் மேன்மேலும் மிகுகின்றது. போர்வீரர்கள் அதையும் காண்கின்றார்கள்; துயரம் உறுகின்றார்கள். அன்னை வருந்துகின்றாள்.

# வானொலியில் தமிழிசை !

தமிழ்நாட்டு வானொலியில் தமிழ்ப்பாட்டுக்கு இடம் என்ன? வானொலியார் கணக்கெடுத்துப் பார்க்கின்றனரா?

இந்தக் கேள்வி, பலருடைய உள்ளத்தில் பல நாள் எழுந்துள்ள கேள்வியே ஆகும். ஆனால் என்ன செய்வது என்ற திகைப்பால், பெரும்பாலோர் வாய் மூடிக் கிடக்கிறார்கள். இந்தக் காலத்தில் மக்கள் குரல் ஆட்சியாளர்க்கு எட்டுவது அரிது ஆயிற்று. 'மகசர்' எழுதினாலும் பயன் இல்லை; மாகாநட்டில் தீர்மானித்தாலும் பயன் இல்லை; தேர்தல் செல்வாக்கு உள்ளவர்கள் நேரில் சென்று முறையிட்டால்தான் ஒருசிறிது பயன் விளையக்கூடும்; நாம் என்ன செய்ய முடியும் என்று கலைஞர்கள் வாய்மூடிக் கிடக்கிறார்கள். வானொலித்துறையில் மாகாண அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாது. எல்லாம் மத்திய அரசாங்கம் (டில்லி அரசாங்கம்) மனம் வைத்தால்தான் ஏதேனும் செய்யமுடியும். வானொலி அதிகாரிகள் டில்லி அரசாங்க ஊழியர்கள் ஆகையால், மாகாண மக்களின் குரலை அவர்கள் பொருட்படுத்த வேண்டிய நிலையில் இல்லை. இந்த உண்மையை உணர்ந்தவர்கள் உளம் புழுங்கி அமைதியாகக் கிடக்கிறார்கள்.

மக்களின் விருப்பம் எது, அது நியாயமான விருப்பம்தானா என்று ஆராய்வது மக்களாட்சிக்கு இன்றியமையாத கடமைதான். மக்கள் விருப்பம்—பெரும்பாலான மக்கள், அல்லது தக்கவர்களான நன்மக்களின் விருப்பம்—எது என்று அறிந்துகொள்ளும் முயற்சி வேண்டும்.

மக்களின் விருப்பம் எது என்று தனித்தனியாக ஒவ்வொருவரையும் கேட்கத் தொடங்கவேண்டியது இல்லை; கணக்கு (சென்ஸஸ்) எடுக்கவேண்டியதும் இல்லை; இசைத்துறையில் மக்கள் எந்த மொழிப் பாட்டுக்களை விரும்புவார்கள் என்ற இயற்கையான உண்மையை அறிந்தாலும் போதும். இத்துறையில் சங்கீதம் உயிர் என்றால், சாகித்தியம் உடல் ஆகும் என்ற உண்மையை உணர வேண்டும். தியாகய்யர் அவர்கள் கருநாடக சங்கீதத்தில் பாடத் தொடங்கியபோது, அதுவரையில் கருநாடக இசை வளர்ந்துவந்த தமிழ் மொழியை மேற்கொள்ளாமல், தெலுங்கு மொழியை மேற்கொண்டது ஏன்? அவருடைய தாய்மொழி தெலுங்கு ஆகையால்தான். தாய்மொழியின் சாகித்தியமே இசையின் பயனை நல்கும் என்பதை நன்கு உணர்ந்தமையால் அவர் தெலுங்கில் பாடினார். இந்த உண்மையை உணர்ந்தாலும் போதும். மத்திய அரசாங்கத்தின் பெயரால் வானொலியார் செய்யும் செயல்களில் முன்னேற்றம் ஏற்படும்.

பழைய சாகித்தியங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற குறிக்கோளும் நல்லதே; ஆனால் அதற்கு ஒரு பகுதிநேரம், அல்லது ஒரு வாரத்தில் ஒருநாள் ஒதுக்கி வைத்தாலும் போதும். பழமையைக் காப்பாற்றுவதே கடமையாகக் கொண்டு, மக்களின் கலையார்வத்திற்குத் தீங்கு செய்தல் கூடாது.

தமிழ்நாட்டில் சென்னையிலும் திருச்சியிலும் வானொலி நிலையங்கள் உள்ளன. திருச்சியில் ஏறக்குறையத் தமிழர் சுவைக்க வல்ல இசை கேட்கிறது. ஆனால் சென்னை வானொலியின் நிலை, நாட்டுமக்களின் கலையார்வத்திற்குப் பொருந்தாததாக உள்ளது. சென்னை நகரம் ஆந்திரர்க்கும் தமிழர்க்கும் பொதுவான சத்திரமாக இருந்தபோது, வானொலி ஒருவகைப்

பொதுநிலையமாக இருந்தது பொருந்தும். இன்று சென்னை தமிழ்நாட்டின் தலைநகரம் என்பது மக்களின் தீர்ப்பு ஆகிவிட்டது. நிலைமை இவ்வளவுமாறிய பிறகும், சென்னை வானொலியில், ஸ்வாகதம், கீத மஞ்சரி, கீதமாலிகா, லலிதகீதம், சுருதிமணிமாலா, லலித கானம், சந்த்யாகானம், கானலஹரி முதலாய பகுதிகள் யாருக்காக நிகழ்கின்றனவோ, தெரியவில்லை!

ஸ்வாகதம் முதலான இந்தத் தலைப்புகளே மக்கள் விரும்பாதவை; மக்களுக்கு விளங்காதவை. ஒரு சில சங்கீத வித்வான்களுக்கு விளங்கக் கூடியவைகளாக இருக்கலாம். ஆனால் வானொலிநிலையம் ஒரு சில வித்வான்களுக்காக ஏற்பட்டது அன்று; பொது மக்களுக்காக ஏற்பட்டது. இந்தத் தலைப்புகள் எந்த மொழியில் இருந்தால் என்ன என்று கேட்கலாம்; மக்களின் தாய்மொழி இருக்கும்போது அதைப் புறக்கணிக்கும் செயலுக்கு அறிகுறியாக இருப்பதால், வெறுப்புக்கு இடமாகிறது என்பது கருதப்பட வேண்டும். இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அதிகாரிகள் வற்புறுத்துவதைவிட, இப்படி இருந்தால் மகிழ்வோம் என்று மக்கள் விரும்புவதை அறிந்து நடப்பது நல்லதாகும். ஆகையால் இந்தச் சில்லறை மாறுதல்களையும் அரசாங்கத்தார் பொருட்படுத்திச் செய்வது கடமையாகும். சிறு சிறு சிக்கல்கள் வளர இடம் கொடுத்துக்கொண்டு, மக்களின் மனத்தில் வெறுப்பு வளரச் செய்வது நல்லது ஆகாது.

தலைப்புகள் எப்படியாவது போகட்டும் என்று விட்டுத் தள்ளி, வானொலியைத் திருப்பி இசைகேட்க முயன்றால், உயிர்மட்டும் ஊசலாடுகிறது; உடல் உணர்ச்சியுள்ளதாக இல்லை. சங்கீதம் கேட்கிறது; ஆனால் மக்கள் விரும்பும் சாகித்யமாகிய உடல் அதற்கு

அமையாமையால், எதிர்பார்த்த கலைவிருந்து கிடைக்காமல் மக்கள் ஏமாற்றமும் அடைகின்றனர். இவ்வாறு விளங்காத சாகித்தியங்களை மக்களின் செவியில் திணிப்பதைவிட, வாய்ப்பாட்டு என்ற பகுதியையே எடுத்துவிட்டு, நாகசுரம், குழல், வீணை முதலிய வாத்திய இசைகளை மட்டும் (பாட்டு இல்லாமல்) வைத்து நிகழ்ச்சி முழுவதும் அமைத்துவிடலாம். ஏன்? இப்படிப்பட்ட கருவிகளின் இசையைக் கேட்க எல்லோரும் விரும்புகின்றனர். ஆனால் வேளை—சமயம்—நாள் ஒன்றும் வரையறை இல்லாமல், எந்த நேரமும்—எப்போதும்—விளங்காத சாகித்தியங்களைத் திணித்தால் மக்கள் எப்படி விரும்ப முடியும்? வெறுங் கீற்றுக்களால் ஆகிய ஓவியங்களை யாரும் வெறுப்பதில்லை; ஆனால் வண்ண ஓவியங்கள் என்று சொல்லிப் பொருந்தாத வண்ணங்களைத் தீட்டிக் காட்டுவதால் பயன் என்ன? தெலுங்கு வடமொழிச் சாகித்தியங்களில் மிக உயர்ந்தவை உள்ளன என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் தெலுங்கும் வடமொழியும் தெரிந்தவர்களுக்குமட்டுமே அவை பயனுள்ளனவாக இருக்கும். அவற்றைக் கற்ற தமிழர், பதினாயிரத்துக்கு ஒருவரே. அவர்களுக்காக வாரத்தில் ஒரு நாள் உயர்ந்த சாகித்திய விருந்து அளிக்க வானொலியார் ஏற்பாடு செய்யலாம்.

ஆயிரத்துக்குத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேருக்கு ஆற்ற வேண்டிய கடமையை வானொலி மறக்கலாமா? இன்று வானொலி மறந்துவருகிறது என்று சொல்வதைவிட, புறக்கணித்துவருகிறது என்று சொல்வது பொருந்தும். இத்தகைய புறக்கணிப்பின் பயனாகத் தீமை விளையும். இந்திய நாட்டு ஒற்றுமையை நாடுவோர், இப்படிப்பட்ட தீமை விளைய இடந்தரக் கூடாது. இன்று

வானொலியைத் திருப்பும் பலர், இங்கும் வடநாட்டு அரசாங்கத்தின் ஆதிக்கமா என்று எண்ணி வருந்துகிறார்கள். ஏன் இந்த எண்ணத்திற்கு இடம் தர வேண்டும்? எண்ணம் தவறு என்றால் இப்படித் தவறான எண்ணம் ஏற்படக் காரணம் என்ன என்று அறிந்து திருத்தங்கள் செய்ய வேண்டும்.

இன்று தமிழ்நாட்டுக் கடைத்தெருக்களிலும் வீடுகளிலும் உள்ள வானொலிப் பெட்டிகளில் பெரும்பாலானவை, இலங்கை வானொலியில் வரும் தமிழ்ப் பாட்டுக்களையே ஒலிக்கின்றன. தெருவில் நடந்து செல்வோரும், ஓட்டல்களில் காப்பி அருந்துவோரும் இதை நன்கு அறிவர். மாலை 6, $6\frac{1}{4}$ மணி என்றால், எந்த வானொலிப் பெட்டியிலும் இலங்கையிலிருந்து வரும் தமிழொலியே கேட்கிறது. சிறுவர் முதல் முதியோர்வரையில் அதைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். சென்னை-1, சென்னை-2 என்றால், தமிழ்ச்செய்தி நேரம் தவிர மற்ற நேரத்தில், வானொலியைத் திருப்பிக் கேட்க விரும்பாமல் நிறுத்திவிடுகின்றனர். இந்த உண்மையை இனியும் உணராமல், யாரோ ஒரு சிலர் தமிழ்நாட்டிலிருந்து தெலுங்கு வடமொழி சாகித்தியங்களுக்காக முறையிடும் முறையீடுகளைக் கேட்டு அவர்களின் விருப்பம் போல நடக்கக் கூடும். அந்த ஒருசிலர் வேறு துறையில் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கலாம்; அடிக்கடி செய்தித்தாளில் பெயர் வந்தவர்களாக இருக்கலாம்; அவர்களின் பதவி பட்டம் முதலியவைகளை மட்டும் பார்த்து, மக்கள் பெரும்பாலோரின் வேட்கையை—நியாயமான வேட்கையை—புறக்கணிப்பது, மக்களாட்சிமுறைக்குப் பொருந்தாது; உண்மையான கலைத் தொண்டும் ஆகாது.

"நமக்குத் தெரியாத மொழியில் இசையை அனுபவிக்க எண்ணுவது, மனைவியிடம் வக்கீல் வைத்துப்

பேசுவதற்கு ஒப்பாகும்'' என்றார் கவிஞர் தாகூர். இந்த உண்மையை வானொலி நிலையத்தாரும் அவர்களை இயக்கும் அரசாங்கத்தாரும் உணர்தல் நல்லது ; தமிழ்மக்கள், தமிழிலே இசையைக் கேட்டு மகிழ விரும்புகிறார்கள். அவர்களின் இயற்கையான காதலைத் தடுத்து, செயற்கையான—வெறுப்பான—முறையில் பிறமொழிப் பாடல்களைத் திணிப்பதை, உடனடியாகக் குறைத்தல் வேண்டும் ; நாளடைவில் நிறுத்தல் வேண்டும்.

# புறக்கணிப்பு

அண்ணன் ஒருவன்; தம்பியர் பலர். அண்ணன் தம்பியரை அடக்கியாள்கின்றான். மெல்ல மெல்ல எதிர்ப்பு வளரும். அடக்குமுறைக்கும் எதிர்ப்புக்கும் இடையே வாழ்வின் அமைதி கெடும். ஆயின், அண்ணனும் தன்னைக் காத்துக்கொண்டு எதிர்காலத்திற்கு வேண்டிய ஆக்கங்களைத் தேடுவான். தம்பியரும் தற்காப்புணர்ச்சியோடு வேண்டியவற்றைத் தேடிக் கொண்டு வலிமை பெறுவர். நாளடைவில் இருவரும் வாழ்வதற்கு வழி ஏற்படும்.

அண்ணன் அடக்குமுறையைக் கையாளாமல், தன் நன்மைகளை மட்டும் பெருக்கிக்கொண்டு தம்பியரின் நன்மைகளைப் பற்றிக் கவலைகொள்ளாமல் மறந்து திரிந்தால், அதனைப் புறக்கணிப்பு என்று கூறல் வேண்டும். அவ்வாறு அவன் புறக்கணிப்பை மேற்கொண்டால், நிலைமை என்ன ஆகும்? தம்பியர் மெல்ல மெல்ல அண்ணனுடைய உறவை விட்டு அகல்வர்; அண்ணனைப் போல் தாமும் வாழ வழி வகுத்துக் கொள்வர். அன்பு நெஞ்சம் இல்லாமற்போகும். ஒருகால் அண்ணன் ஏதேனும் துன்பம் உற்றபோது தம்பியர் உதவிசெய்யச் செல்ல மாட்டார். அண்ணன் வாழ்வில் வீழ்ச்சி உற்றபோது தம்பியர் கைகொடுத்து உதவ மாட்டார். தம்பியர் உயர்தலும் அண்ணன் தாழ்தலும் இயல்பாக அமைந்துவிடும்.

அடக்குமுறை போலவே புறக்கணிப்பும் கொடியது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. அடக்குமுறை செய்யும் கொடுமையில் போராட்டத்திற்கும் தற்காப்புக்கும் இடம் உண்டு. புறக்கணிப்பின்

கொடுமையில் இவற்றிற்கு இடம் இல்லை. இவ் வகையில் நோக்கினால், அடக்குமுறையைவிடப் புறக்கணிப்பே கொடியதாகவும் உள்ளது.

அரசியல் துறையிலும் இந்த உண்மையைக் காணலாம். புறக்கணிக்கப்பட்ட இனம் ஒரு காலத்தில் முன்னேறி உயர்வு பெறுவது உண்டு. அப்போது புறக்கணித்த இனம் உதவிபெற வழி இல்லாமல் திக்கற்று வாடுவதும் உண்டு.

இலக்கியத் துறையிலும் இது உண்மையாகவே உள்ளது. ஒரு காலத்தில் சங்கஇலக்கியத்தையும் காவியங்களையும் கற்ற புலவர்கள், புலமை பெற விரும்பியவர்க்கு அந்த நூல்களின் பொருளையும் நயத்தையும் கற்பித்துவந்தனர். ஆகவே கற்ற புலவர்கள் தம் அறிவை ஒரு சிலர்க்குமட்டும் பயன்படுத்திப் பெரும்பாலான மக்களைப் புறக்கணித்துவந்தனர். பெரும்பாலான மக்கள் கல்வியறிவு குறைந்தவர்கள், கல்வியறிவே இல்லாதவர்கள். அவர்களுக்கு அந்த இலக்கியங்களின் சிறந்த பொருளையும் நயத்தையும் விளக்க முடியாது. விளக்குவதற்கு முயன்றாலும் அது பெருமுயற்சியாகவே முடியும். ஆகவே ஓரளவுக்குக் கற்றுத் தேறிய மாணவர் சிலர்க்குமட்டும் புலவர்கள் அவற்றை எடுத்துரைத்து விளக்கி மகிழ்ந்தனர். அந்தக் காலத்தில் அவர்களால் அவ்வளவுதான் தொண்டு செய்ய முடிந்தது எனலாம். ஆனால் அதனால் விளையும் விளைவு மாறவில்லை.

நயமும் கருத்துநுட்பமும் மிக்க சங்க இலக்கியமும் காவியங்களும் பெரும்பாலான தமிழ்மக்களுக்குத் தெரியாத நூல்களாக நின்றன. இவ்வகையில் அவர்கள் புறக்கணிக்கப்பட்ட மக்களாக நின்றனர். இந்தப் புறக்கணிப்பால் விளைந்தது என்ன? உயர்வு இல்லாத—இழிவான—வருணனைகளும் கற்பனைகளும்

நிறைந்த மட்டமான நூல்கள் தோன்றியபோது, புறக்கணிக்கப்பட்ட மக்கள் அவற்றைப் போற்றிக் கொண்டாடத் தலைப்பட்டனர். கருத்துவளம் இல் லாத—உடல்உறுப்பு வருணனைகள் நிறைந்த—பாட் டுக்களை விரும்பிப் போற்றினர்கள். உள்ளத்தின் உணர்வுகளை நுட்பமாக எடுத்துக் கூறும் சங்கப் பாட்டுக்கள் மூலையில் ஒதுங்க நேர்ந்தது. சிறப்பற்ற உலா, தூது முதலானவை பல வாழ்வு பெற்றன. உயர்ந்த கற்பனைச் செல்வங்களுக்குப் பாராட் டுக் குறைந்தது. பொருளற்ற வெறுங் கற்பனைப் பாட்டுகளுக்குப் போற்றுதல் மிகுந்தது. சிறந்த காவியங்கள் மூலையில் ஒடுங்க நேர்ந்தது.

சில நூற்றுண்டுகளுக்கு முன் தமிழ் இலக்கியங் களுக்கும் தமிழ் மக்களுக்கும் இருந்த தொடர்பு இத் தகையது. இதனுல் யாருக்குத் தீமை? புறக்கணித்த புலவர்மரபுக்கே தீமை விளைந்தது! அவர்கள் போற் றிய நூல்களுக்குச் செல்வாக்குக் குறையவே, அவர் களுக்கும் செல்வாக்கும் சிறப்பும் குறைந்தன

எனவே, பெரும்பான்மையான மக்கள் உணர்ந்து போற்றும் வகையில், எளிய நடையில் எளிய முறை யில் உயர்ந்த நூல்களின் கருத்துக்களைப் பரப்பும் தொண்டு முதன்மையானதாகும். அவ்வாறு உணர்த் தும் நூற் கருத்துக்களை எளிமையாக்குவதோடு சுவை படவும் அமைத்து உதவ வேண்டும். பெரும்பான்மை யான மக்கள் வாழும் எளிய உலகத்தை நன்கு உணர்ந்து அதற்கு ஏற்றவாறு அமைத்திட வேண்டும். முந்நூறு ஆண்டுகளுக்குமுன் ஆங்கில இலக்கியத்தை வளம்படுத்திய புலவர் ஷேக்ஸ்பியர், அக்காலத்தி லேயே இந்த உண்மையை உணர்ந்து இலக்கியத் தொண்டு செய்துள்ளார். அவர் எழுதிய நாடகங் களில் அறிஞர் வியக்கும் நயங்களும் நுட்பங்களும்

உண்டு. அவற்றோடு பொதுமக்கள் விரும்பும் கதைப் பகுதிகளும் கற்பனைகளும் உண்டு. தத்துவ அறிஞர்களும் உள நூல் அறிஞர்களும் ஆழ்ந்து உணரத் தக்க சிறந்த கருத்துக்களும் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் உள்ளன. அவற்றோடு கூடவே, பொதுமக்கள் சுவைக்கத் தக்க மந்திரம், சூனியம், பேய் பிசாசு, பைத்தியம், ஆவி முதலியவைகளும் அவருடைய நாடகங்களில் உள்ளன. காரணம் என்ன? கற்றுணர்ந்த ஒரு சிலரை மட்டும் நம்பி அவர் இலக்கியத்தொண்டு செய்யவில்லை. கல்லாத பெரும்பான்மையோரைப் புறக்கணித்தல் கூடாது என்று உணர்ந்து, அவர்களையும் கவரத் தக்க சுவைகளைக் கலந்து எழுதியுள்ளார். தமிழ் இலக்கியமும் எதிர்காலத்தில் ஒதுக்கிடம் பெறாமல் எங்கும் ஒளி வீச வேண்டுமானால், பெரும்பான்மையான மக்களின் உள்ளங்களில் அவை இடம் பெறுமாறு செய்ய வேண்டும். அதுவே இன்றுள்ள முதல் கடமை எனலாம்.

இலக்கிய உலகில் அவர்களைப் புறக்கணித்தல் பொல்லாதது; அடக்குமுறையை விடப் பொல்லாதது. புலவர் சிலர்; ஏனையோர் பலர். பலரைப் புறக்கணித்தல் பெருந் தீங்கு; முற்காலத்தை விட இக்காலத்தில் அது பெருந் தீங்காய் முடியும். காரணம் முற்காலத்தில் தோள்வலியும் அறிவுவன்மையும் உலகத்தை ஆண்டன. இக்காலத்திலும் இனி வருங் காலத்திலும் எண்ணிக்கை—மக்களில் பெரும்பாலோரின் தொகையே—ஆட்சிக்கு உரிமை உடையது. ஆகவே புறக்கணிப்பு இனி மிகப்பெருந் தீங்காகும்.

இன்றைய நிலைமையை நன்கு சீர்தூக்கி உணர வேண்டும். பெரும்பான்மையான தமிழ்மக்கள் ' இலக்கியத் துறையில் புறக்கணிக்கப்பட்டிருக்

கிறார்கள். கற்பவை கற்ற புலவர்கள், அவர்களுக்கு இலக்கியச் செல்வத்தை வாரி வழங்குவதில்லை; அந்தப் பெரும்பான்மை மக்களின் எளிய உள்ளங்கள் விரும்பும் வகையில் எடுத்து விளக்குவதில்லை. கற்ற சிலர்க்கே அறிஞர்களின் எழுத்தும் பேச்சும் பயன்படுகின்றன. இதனால் பெரும்பான்மையான மக்கள் புலவர்களை விட்டு விலகித் தொலைவில் நிற்கின்றனர். தமக்கு என்று வேறு வகையான எழுத்துக்களையும் பேச்சுக்களையும் தேடிக்கொள்கின்றனர். நாட்டின் புகழையும் பெருமையையும் காத்துவரும் நல்ல நூல்களின் பெயரும் தெரியாமல் வாழ்கின்றனர். அதனால் அவர்களுக்குத் தீமை இல்லை. அந்த நூல்களின் செல்வாக்குக்கும் அவற்றை நன்கு கற்ற புலவர்களின் மரபுக்குமே ஊறு ஏற்படுகின்றது. அந்தப்பெரும்பான்மை மக்கள் அவற்றைப் பற்றிக் கவலை இல்லாமல் தனியான இலக்கிய உலகம் அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர். மட்டமான அந்த இலக்கிய உலகத்தில் ஒரு காலத்தில் இழிந்த உலா முதலான பிரபந்தங்களும், அல்லியரசாணிமாலை, புலந்திரன் தூது முதலான கற்பனைகளும் இருந்தன. இந்தக் காலத்தில் இழிவான காமச் சுவைக் கதைகளும், காதல் குப்பைகளும், வசையெழுத்துக்களும் அவர்களின் இலக்கிய உலகில் இடம் பெற்றுள்ளன. பத்திரிகை யுலகிலும் இவைகளின் வழித்தோன்றல்களே உள்ளன.

குறை யாருடையது? பெரும்பான்மையான மக்களைப் புறக்கணித்தவர்களின் குறையே ஆகும். ஒரு சிலரை நம்பி உயர்ந்த நூல்களை வாழவைத்திட முடியாது என்னும் உண்மையை அவர்கள் உணர்தல் வேண்டும். ஒரு சிலரைப் புலவராக்குதல் மட்டும் போதாது. மிகப் பலரை ஓரளவாவது இலக்கியச்

சுவை உணர்ந்தவர்களாக உயர்த்தல் வேண்டும். அதற்குப் பெருமுயற்சி—நெடுங்கால முயற்சி தேவை என்பது உண்மைதான். அந்த முயற்சி செய்து வெற்றி பெறும் வரையில் மட்ட வகையான நூல்களும் இதழ்(பத்திரிகை)களும் வாழ்ந்துவரும் என்பதை மறத்தல் கூடாது.

## கண் போய்விடும்

"என்னதான் இருந்தாலும் இப்படிப்பட்ட சட்டமெல்லாம் போடலாமா, சார்? ஆசாரம் எல்லாம் போய்விடுமே, சார்" என்று ஒருவர் பேசியது கேட்டேன்.

"ஆமாம், ஆமாம், சட்டம் போட்டுக் கட்டுப் படுத்தக் கூடாது. அதிலும், இவர்கள் இப்படிச் செய்யலாமா?" என்று மற்ெருருவர் தலை அசைத்துப் பேசியதும் கேட்டேன்.

திருக்கழுக்குன்றத்து மலையை அமைதியான மனத் தோடு சுற்றி வரலாம் என்று சுற்றிக்கொண்டு வடக் குப் பக்கமாகத் திரும்பியபோது இவற்றைக் கேட் டேன். எனக்கோ பொருள் ஒன்றும் விளங்கவில்லை. விளங்கிய வரைக்கும் வியப்பாகவே இருந்தது. சுதந் தர நாள் ஆகஸ்டு 15 எனக் கொண்டாடிய பிறகு இப் படிப் பேசுகின்றார்களே என்று திகைப்போடு எண்ணி னேன். அவர்களோ படித்தவர்கள் போலவும், பட் டம் பெற்றவர்கள் போலவும், நாகரிகமாக வாழ்கின் றவர்கள் போலவும் தோன்றினார்கள். அறிவுடைய வர்களாகத் தோன்றிய இவர்கள் இப்படிப் பேசுவதில் ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று எண்ணி னேன். தொடர்ந்து கேட்டுத் தெரிந்துகொள்ள வேண் டும் என்று மனம் விரும்பியது. கால்கள் பரபரப்பாக அடி எடுத்து வைக்க, அவர்களை அணுகியபிறகு மெல்ல நடந்தேன். பேச்சுத் தெளிவாகக் கேட்டது, செய்திகளும் விரிவாக அறிந்தேன்.

அவர்களுடைய பேச்சில் இருந்த ஆத்திரம் எல் லாம் அரசாங்கம் நடத்த வந்த அமைச்சர்கள் சீர்திருத்

தத் துறையில் இறங்கிவிட்ட காரணத்தால் ஆனைகுளம் குட்டைகளைச் சீர்திருத்தத் தொடங்கியிருந்தாலும், அல்லது சத்திரம் சாவடிகளைப் பழுது பார்க்கத் தொடங்கியிருந்தாலும் அவர்களுக்கு அவ்வளவு ஆத்திரம் வந்திருக்காது. விற்பனைவரியை இன்னும் ஒரு பை உயர்த்தியிருந்தாலும், அல்லது வருமான வரியைச் சிறிது குறைத்திருந்தாலும் அவர்களுக்கு அவ்வளவு ஆத்திரம் வந்திருக்காது. அவர்களுக்கு ஆத்திரம் வந்த காரணம் நெடுங்காலமாக இந்த நாட்டில் இருந்துவந்த மாசை அகற்ற முனைந்ததால்தான்; வானளாவ உயர்ந்து கலைக் களஞ்சியங்களாக விளங்கிய கோயில்களில் இருந்துவந்த ஒரு பெருங்குறையை ஒழிக்க முனைந்ததால்தான்; ஒப்புரவுக்கும் ஒழுக்கத்திற்கும் பெயர் பெற்ற சமுதாயத்தில் தீராமல் இருந்துவந்த ஒரு நோயைத் தீர்க்க முற்பட்டதால்தான். அதாவது, தீண்டாமையை ஒழிக்க எடுத்துக்கொண்ட ஒரு முயற்சியாலேயே அவர்களுக்கு அந்த ஆத்திரம் வந்தது. இதைத்தான் அவர்களுடைய பேச்சிலிருந்து அறிந்துகொண்டேன்.

"என்னங்க, நீங்கள் சொன்னீர்களே, நம்ம ஊர்த் தீண்டாதவர்களில் ஒருவரும் கோயிலுக்குள் நுழையவில்லை என்றும், எல்லாரும் வெளியூர்க்காரரே என்றும் சொன்னீர்களே. அது எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்று இன்னொருவர் கேட்டபோது தான் எனக்கு உண்மைக் காரணம் புலப்பட்டது.

இதற்கு வந்த மறுமொழி அறியாமையின் தூய வடிவமாக இருந்தது. "அது தெரிய வேண்டுமா? நம்ம ஊர்ச்சேரியில் ஒருவனுக்கும் கண் போகவில்லை. ஒருவனும் குருடனாகவில்லை. இதுபோதாதா சாட்சி?" என்றதுதான் அந்த மறுமொழி.

இந்தப் பேச்சைக் கேட்ட பிறகு, பேசிக்கொண்டு போன அந்தப் படித்த அட்டைகளுக்கும் படிப்பே தெரியாத கிராமத்துப் பாட்டிகளுக்கும் வேற்றுமை இல்லை என்று தெளிவாயிற்று. படித்து அறிவு பெற்று நாகரிகமாக வாழ்கின்ற அவர்களும் வாழ்க்கையில் மாறுதல் செய்துகொள்ள அஞ்சி அஞ்சிக் கோழைகளாய் வாழ்கின்றார்கள். எழுத்தே அறியாமல் கடிகாரத்தை முறைத்துப் முறைத்துப் பார்க்கும் பாட்டிமார்களும் அப்படித்தான் வாழ்கின்றார்கள். இருவகையார்க்கும் என்ன வேற்றுமை? விடுமுறையின்போது கிராமத்திற்குப் போயிருந்தபோது கிழவிகள் இரண்டுபேர் எதிர் எதிர் உட்கார்ந்துகொண்டு வெற்றிலை புகையிலை போட்டுக்கொண்டு கோயில் நுழைவைப் பற்றி இதே கருத்தைப் பேசியதைக் கேட்டிருக்கிறேன். "அநியாயம்! தெய்வம் பொறுக்குமா? பறையர் எல்லாம் கோயிலுக்குள் போனால் கண் அவிந்துபோய்விடும்" என்றாள் ஒருத்தி. "மெல்லச் சொல்லுகிறாயே! அதோ அந்த ஊரிலிருந்து மூன்று பேர் திருத்தணி கோயிலுக்குப் போய் உள்ளே நுழைந்தார்களாம். வெளியே வருவதற்குள் இரண்டு கண்ணும் போய்த் தடவிக்கொண்டுதான் வந்தார்களாம்! ஆஸ்பத்திரிக்குப் போனார்களாம், இது தெய்வக் குற்றம், நாங்கள் வைத்தியம் செய்யமாட்டோம் என்று அங்கேயும் சொல்லிவிட்டார்களாம்" என்றாள் இன்னொருத்தி. பாட்டிமார்கள் பேச்சில் கள்ளம் கபடு இல்லை; அது வடிகட்டிய அறியாமை. இந்தப் படித்தவர்களின் பேச்சில் தன்னலமும், தந்திரமும் உண்டு; இது ஏமாற்று வித்தை. இவ்வளவுதான் இருக்கும் வேறுபாடு.

மலையைச் சுற்றி வந்த அவர்களில் ஒருவர் சிறிது காரண காரிய ஆராய்ச்சியில் கைதேர்ந்தவர். "நம்ம

ஊர்த் தீண்டாதவர்களும் கோயிலின் உள்ளே போயிருப்பார்கள். இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஆனால் நம்ம ஊரில் சேரியில் உள்ளவர்கள் பயந்தவர்கள். பக்தியோடு போயிருப்பார்கள். கடவுள் அவர்களை எல்லாம் ஒன்றும் செய்யவில்லை. மற்றச் சாதியாரும் நாமும் சமமாகிவிட்டோம் என்ற அகங்காரத்தோடு யாராவது கோயிலுக்குள் போனால்தான் கண் போய்விடும். வெளியூரிலிருந்து வந்தார்களே அந்தப்பயல்களுக்கு அந்த அகங்காரம் இருந்திருக்கும். தவிர, விதி ஒன்று இருக்கிறது. கண் போக வேண்டும் என்று ஈசன் எழுதியிருந்தால், போய்த்தான் தீரும்" என்றெல்லாம் அவர் பேசிக்கொண்டே போனார்.

மலையைச் சுற்றி நடந்து அமைதி பெறவந்த நாம் இந்தப் பேச்சை எல்லாம் கேட்டு வயிற்றெரிச்சல்படக் கூடாது என்று அவர்களை விட்டுப் பிரிந்தேன். நாட்டை எண்ணினேன். நாலாயிரத்தையும் தேவாரத்தையும் எண்ணினேன். ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் எண்ணினேன். "இலங்கும் உடல்உயிர் அனைத்தும் ஈசன் கோயில்" என்ற திருவாக்கை நினைந்தேன். "எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி" வாழ்ந்த இராமலிங்கரின் இரக்க வடிவான வாழ்க்கை நினைவுக்கு வந்தது.

உயர்ந்த பெரியோர்கள் தோன்றிய இந்த நாட்டிலே, சிறந்த உண்மைகள் வெளிப்பட்ட இந்த நாட்டிலே, இவ்வாறு கண்மூடி வாழ்க்கை நடத்துகின்றவர்களும் மூடநம்பிக்கைகளும் இருக்கக் காண்கின்றோமே என்று மனம் வருந்தியது.

நம்மோடு பிறந்து, நம்மைப் போல் வளர்ந்து, நம் மொழியே பேசி, நமக்காக உழைத்து, நம்மை நம்பி வாழ்கின்ற ஒரு கூட்டம் - ஒரு திருக்கூட்டம் உண்டு என்றால் அது சேரியில் வாழும் மக்களின் கூட்டமே

ஆகும். அப்படிப்பட்ட நல்ல மக்களை என்ன காரணம் பற்றியோ மூடநம்பிக்கை கொண்டு ஒதுக்கினோம். உடன் வாழ வேண்டிய மக்களுக்கு ஒதுக்கிடம் கொடுத்தோம். ஊரை அடுத்தது சேரி என்றோம். உங்களுக்கு வேறு கிணறு, எங்களுக்கு வேறு குளம் என்றோம். உங்களுக்கு வேறு வழி, எங்களுக்கு வேறு வழி என்றோம். உங்களுக்கு வேறு சுடுகாடு, எங்களுக்கு வேறு சுடுகாடு என்றோம். இதைவிடக் கொடிய பிரிவினை முறை வேறு எந்த நாட்டிலாவது உண்டா? பிரிவினைத் திட்டம் இந்த நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்துவந்திருக்கின்றதே! ஊர் ஊருக்குப் பாகிஸ்தான் என்றல்லவா இந்த ஊரும் சேரியுமான பிரிவினையைச் சொல்ல வேண்டும்? இந்தக் கொடுமையை அன்று முதல் இன்று வரை பொறுத்துக்கொண்டு நம் மொழியே பேசி நமக்காகவே உழைத்து நம்மையே நம்பி வாழும் மக்களை இந்தச் சமூகத்தின் கண் என்று சொல்ல வேண்டும் அன்றோ?

சமூகத்தின் கண்ணாக அமைந்துள்ள அவர்களுடைய நன்மைக்காக இன்று வரையில் என்ன செய்துவிட்டோம்? செய்தவை போதுமா? ஒன்றைச் செய்து முடிக்கத் துணிந்தோம். அதுதான் கோயில் நுழைவு. எல்லோரிடத்திலும் பொதுவாகக் கலந்துள்ள, எல்லோர்க்கும் பொதுத் தந்தையான இறைவனுடைய கோயிலைப் பொது இடம் என்றும், வேற்றுமை அற்ற இடம் என்றும், சாதிக் கொடுமை பரவாத இடம் என்றும் முதலில் அறிவிக்கத் துணிந்தோம். "சமூகத்தின் கண்ணாக உள்ள மக்களே! உங்களுக்கும் இங்கே உரிமை உண்டு; வரலாம்; வர வேண்டும்" என்று அன்போடு அழைத்தோம். அவர்களும் அன்போடு வந்தார்கள். கோயில்கள் தூய்மை பெற்றன.

கரவறியாமல் உழைத்துச் சமுதாயத்தைக் காத்த மக்களைத் தீண்டாதவர்களாக்கிய இதே மனப்பான்மை கோயில்களில் இன்னொரு வடிவில் இருந்து வருகிறது. அது என்ன? இந்த நாட்டு மக்கள் வீட்டிலும் வயலிலும் காட்டிலும் மேட்டிலும் வாழ்விலும் தாழ்விலும் என்றும் எங்கும் பேசிவரும் மொழி—இந்த நாட்டு மக்களின் சமுதாய உறவுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் காரணமாக இருந்து உதவிவரும் கண் போன்ற மொழி — மக்களின் தாய்மொழி கோயில்களில் தீண்டத்தகாததாக — நுழையத் தகாததாக இருந்துவருகிறது. ஆனால் இந்தக் கோயில்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தது அந்த மொழியே. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழ்ப் பாட்டுக்கள் பாடி, தமிழால் இறைவனை வழிபட்டுப் போற்றி வளர்த்த கோயில்கள் இவைகள். அவர்களின் நாலாயிரமும் தேவாரமும் திருவாசகமும் இன்னிசை முழங்கி வளர்த்துவளம்படுத்திய கோயில்கள் இவை. இவ்வாறு இவற்றின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கண்ணாக இருந்து உதவிய தமிழ்மொழி இத்திருக்கோயில்களில் தீண்டாமை நோயுற்றுப் புறக்கணிக்கப்படுகிறது. தமிழில் வழிபாடு செய்ய வேண்டும் என்று சான்றோர் சீர்திருத்தம் செய்ய முயல்கின்றனர். அவர்களின் முயற்சி எதிர்க்கப்படுகின்றது; பழிக்கப்படுகின்றது. காலம் வரும்; நாட்டு மக்கள் உண்மை உணர்ந்து விழித்து எழுவர். அன்று சட்டம் பிறக்கும். மக்கள் தீண்டாமை சட்டப்படி குற்றமானது போல், மொழித் தீண்டாமையும் குற்றமாக்கப்படும். அதுவரையில் தமிழில் வழிபாடு ஆற்றுதல் தவறு என்று ஒரு சிலர் பேசி, 'கண் போய் விடும்' என்றும் அச்சுறுத்தலாம். சட்டம் பிறந்ததும் அது வெறுஞ் சலசலப்பு ஆகிவிடும்.

# கோயிலில் நாத்திகம்

**கோ**யில்களில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் பல உள்ளன. அவற்றைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளிவைக்கும் மனப்பான்மை நெடுங்காலமாக இருந்துவருகின்றது. இவ்வாறு காலந் தள்ளுவதால், கோயில்களை வெறுக்கும் மனப்பான்மை மற்றொருபுறம் வளர்ந்துவருகின்றது. பல ஆண்டுகளுக்கு முன்பே காந்தியடிகள் சமூகச் சீர்திருத்தம் செய்யவேண்டிய கடமையை வற்புறுத்தி எழுதிய போது, “இத்தகைய சீர்திருத்தங்களைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று ஒதுக்கிவைப்பது கூடாது. நாட்டிற்குச் சுதந்தரம் வந்த பிறகு செய்வோம் என்று தள்ளிவைப்போமானால், நாம் சுதந்தரத்திற்கே தகுதியற்றவர்களாவோம்” என்று அறிவுறித்தினர். அவரைப் பொறுத்த வரையில் தீண்டாமை உள்ள கோயிலில் நுழைவதில்லை என்ற நோன்பை மேற்கொண்டார்; அந்தத் துறையில், கோயிலுக்குள் தீண்டாமை பேசும் மடமையைப் போக்குவதில் ஓயாமல் உழைத்தார். இப்போதோ, நாடு உரிமைபெற்றுள்ள காலம். ஆகையால், இனியும் சீர்திருத்த முயற்சிகளைத் தள்ளிவைப்பது கூடாது. அவ்வாறு தள்ளிவைப்பதற்குக் காரணம், தன்னலமும் அறியாமையுமே என உணரவேண்டும்.

வீடு, தெரு, பள்ளிக்கூடம், கடை, தொழில் நிலையம், அரசியல் அமைப்புகள் முதலான பல இடங்களிலும் மக்களிடையே உயர்வு தாழ்வு வேற்றுமைகள் காட்டப்படுகின்றன. அவற்றை ஒழிக்கச்

சட்டங்கள் செய்யப்படுகின்றன; தொண்டர்கள் தொண்டு செய்கின்றனர். இம் முயற்சிகளின் பயனுக வேற்றுமைகள் ஒழியும் காலம் வரும்; வந்தே தீரும்.

வீடு முதலியவற்றில் உள்ள வேற்றுமைகள் வேண்டும் என்றே ஏற்படுத்தப்பட்டவை; நல்லெண்ணத்தால் ஏற்பட்டவை சில; தன்னலமான தீய எண்ணத்தால் ஏற்பட்டவை சில; எல்லாவற்றையும் தொலைக்க வேண்டும் என்றே பாடுபட வேண்டும். உலகப்போக்கும் அதற்குத் துணைசெய்துவருகின்றது.

ஆனுல், கோயிலில் அப்படிப்பட்ட வேற்றுமைகள் புகுந்து மக்களைப் பிரித்து வைத்திருப்பதுதான் வியப்பாக இருக்கின்றது. எல்லோருக்கும் பொதுத் தந்தையானகடவுள் வீற்றிருக்கும் இடம் என்றுகருதப் படும்கோயிலில் எந்தவேற்றுமையும் குடிபுகக்காரணம் இல்லை; ஒன்று, அந்த இடம் கடவுளுக்காக அமைக்கப்பட்டதன்று என்றும், மனிதனுடைய அதிகாரம் ஆணவம் அறியாமை தன்னலம் ஆகியவற்றை வழிபடுவதற்காகவே ஏற்பட்டது கோயில் என்றும் ஒத்துக் கொள்ள வேண்டும்: அல்லது, இவற்றை எல்லாம் கடந்து நிற்கும் ஒரு பெருஞ் சக்தியை நினைந்து வழிபடும் தூய இடம் அது என்று முன்வர வேண்டும். இன்று கோயில்கள் என்ன நிலைமையில் உள்ளன?

மக்களிடையே இன்று காட்டப்படும் வேற்றுமைகளை இருவகையாகப் பகுக்கலாம். ஒன்று, பிறப்பால் வரும் சாதிவேறுபாடு; மற்ருென்று, பணத்தால் வரும் உயர்வுதாழ்வு வேறுபாடு. இவற்றுள், பிறப்பால் வரும் சாதிவேறுபாட்டைவிடப் பணத்தால் வரும் வேறுபாடு பொல்லாதது என்று விவேகாநந்தர் வீரமுழக்கம் செய்துள்ளார். நாமோ, முன்னதை ஒழிக்கப் பாடுபடுகின்ருேம்; முற்றிலும் ஒழிக்காமல் தயங்கித் தயங்கிப் பின்னிற்கின்ருேம். ஆனுல், பின்ன

தாகிய பணத்தால் வரும் புதிய சாதி வேறுபாட்டை வளர்த்துவருகின்ருேம்.

கோயிலுக்குள் இன்று தீண்டாமை சட்டப்படி ஒழிந்துவிட்டது; ஆனுல், பிறப்பாலாகிய சாதி வேறுபாடு இன்னும் கோயிலில் வாழ்ந்துவருகின்றது. எல்லோருக்கும் அம்மையும் அப்பனுமாக விளங்கும் பொதுத்தலைவன் என்று கடவுளைச் சொல்லிவிட்டு, அவ்வாறே வழிபாடுகளும் செய்துகொண்டு, அதே நேரத்தில் நான் உயர்ந்த சாதி, அவன் தாழ்ந்த சாதி என்று வேறுபாடு செய்து, அதனுல் உரிமைகளிலும் சலுகைகளிலும் வேற்றுமை புகுத்துவதைவிடக் கொடுமை வேறொன்று இல்லை. சமயத்தின் பெயரால் செய்யப்படும் பெரிய கொடுமை என்றே இதைச் சொல்ல வேண்டும். இன்ன சாதியார் இங்கே நிற்க வேண்டும், இன்ன சாதியார் அங்கே நிற்க வேண்டும் என்று சொல்கின்றவனையும், அதைக் கேட்டு மனம் உவந்து நடக்கின்றவனையும் விட நாத்திகர்கள் இல்லை என்று சொல்ல வேண்டும். ஏன்? மற்றவர்கள் கடவுள் இல்லை என்று சொன்னுல், இவர்கள் கோயிலிலே கடவுளின் முன்னிலையிலேயே கடவுளின் சட்டத்தை மீறுகிருர்கள்.

இனிப் பணமுடைய சாதிக்கும் பணமில்லாச் சாதிக்கும் கோயிலில் காட்டப்படும் வேறுபாட்டை நினைக்கவும் துன்பமாக இருக்கின்றது. இந்தப் புதிய சாதி வேறுபாடு இன்னும் சிலகாலம் நீடிக்குமானுல், கோயில் பெரிய வியாபார நிலையமாக, கள்ள வாணிகச் சந்தையாக மாறிவிடும். இப்போதே சில கோயில்கள் அவ்வாறு மாறிவருகின்றன. எந்தப் பொன்னையும் பொருளையும் கண்டு அஞ்சித் துறந்து பெரியோர்கள் கடவுளை நாடினுர்களோ, அந்தப் பொன்னும் பொருளுமே இன்று கோயிலில் மதிப்பைத் தருகின்றன.

கிறிஸ்தவர் கோயில்களிலும் முகம்மதியர் கோயில் களிலும் இன்று செல்வருக்கு ஒருவகை வழிபாடும் ஏழைகட்கு ஒருவகை வழிபாடும் நடைபெறுவதில்லை. ஆனால், ‘செல்வம் ஒரு மாயை’ என்று சொல்கின்ற சைவ வைணவர் கோயிலில், செல்வநிலைக்கு ஏற்றபடி தனிச்சிறப்பான வழிபாடுகள் அமைந்துள்ளன. அதை அரசாங்கமும் அனுமதிக்கின்றது. அரசாங்க அலு வலர் கோயில்களில் இருந்துகொண்டு இவ்வகையான தீமையைக் கண்காணித்துப் பணம் திரட்டுகின்றனர். ஐந்து ரூபாய்க்கு இவ்வளவு அருச்சனை, பத்து ரூபய்க்கு இவ்வளவு அருச்சனை என்றெல்லாம் பணத் தின் அளவுக்குத் தக்கபடி கடவுளைக் காட்டி விற்கும் வியாபாரம் கோயில்களில் நடைபெறுகின்றது. ஆழ் வார்களும் நாயன்மார்களும் மதிக்காத ஒன்று அங்கே மதிப்புப் பெறுகின்றது; அவர்கள் மதித்த அன்பு எங்கோ ஒதுக்கப்படுகின்றது. எல்லாம் அறிந்த கட வுளுக்கு நம் பெயரும் பிறப்பும் தெரியாதிருக்கலாம் என்று, பெயர் பிறப்பு கோத்திரம் முதலியவற்றைச் சொல்லிச் செய்யும் அருச்சனை, கோயில்களின் தூய் மையையும் பொதுத் தன்மையையும் கெடுத்துவருகின் றது. பேசுவன, உலகம் காணாத பெரிய உண்மை கள்; ஆனால், செய்வன, முற்றும் முரண்பாடான நாத்திகச் செயல்கள்!

மற்றுமொரு பெரிய கொடுமையையும் விரைவில் தொலைக்க வேண்டும். கோயில் இந்திர சாலங்களோ மற்றப் புரட்டுவித்தைகளோ செய்யும் இடம் அன்று. இதயம் கனிந்து பரம்பொருளை நினைந்து வழிபடும் இடம் அது. அத்தகைய கனிந்த நினைவுகள் பலநாளும் உணர்ந்து நினைந்து பழகிய தாய்மொழியிலேயே முடி யும். அது இலக்கிய வளமற்ற மொழியாக இருந் தாலும், எழுத்து வழக்கே அற்ற மொழியாக இருந்

தாலும், ஊமை மொழிக்கு அடுத்த நிலையில் உள்ள தாகவே இருந்தாலும், ஒருவன் தன் தாய்மொழியிலேயே கனிந்த நினைவுகளை நினைந்து உருக முடியும். ஆனால், தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழில் வழிபாடு இல்லை. ஏன்? தமிழில் இலக்கிய வளம் இல்லையா? வேறு சிறப்புக்கள் இல்லையா? உலகில் வேறு எங்கும் இல்லாத அளவிற்குப் பக்திப் பாடல்கள்—ஆழ்வார் நாயன்மார்களின் அன்பு கனிந்த பாடல்கள்—பல்லாயிரக்கணக்கான பாடல்கள்—தமிழ்மொழியில் இருக்கும்போது, ஏன் இந்தத் தவறு செய்ய வேண்டும்? ஊர் ஊராகச் சுற்றி ஆழ்வார்களும் நாயன்மார்களும் அன்பு கனிந்த பாடல்களைத் தமிழில் பாடி வைத்திருக்கும்போது, அந்த நன்றியெல்லாம் மறந்து, நன்றி கொன்ற மக்களாய், கோயிலில் தமிழில் வழிபாடு செய்யக் கூசுவதா? இதயக் கனிவிற்குத் துணை செய்யாத, பெரும்பாலோர்க்குப் பொருளும் விளங்காத, தாய்மொழி அல்லாத வடமொழியில் ஏன் வழிபாடு செய்ய வேண்டும்? ஏமாறுகின்ற மக்கள் இருக்கின்றார்களே என்றால், அவர்களைக் கண்டு அறிஞர்கள் இரங்க வேண்டும் அன்றோ? அதை விட்டு, அவர்களுடைய ஏமாற்றத்தைத் தன்னலத்திற்குப் பயன்படுத்திக்கொள்வது ஆத்திகமா? நாத்திகமா?

கோயில், கடவுளாட்சியை மதித்து வழிபடுதற்கு அமைந்த இடம்—ஆத்திகம் வளர்வதற்கு அமைந்த இடம். அத்தகைய இடத்தில் நாத்திகம் வளரவிடுதல் தகுமோ?—கோயிலில் கடவுளாட்சியை மறுக்கும் செயல்கள் பெருகவிடுதல் தகுமோ?

கோயிலுக்கு வெளியே உள்ள நாத்திகம் பேச்சளவில் நிகழ்வது; ஆனால், மேற்கண்டவை செயலளவில் நிகழ்பவை. கோயிலுக்கு வெளியே நிலவும் நாத்திகம் கடவுளைப் பற்றிக் கவலை இல்லை என்பவர் பேசும்

கொள்கை ; ஆனால் மேற்கண்டவை கடவுளைக் கருதி வாழ்வதே வாழ்க்கை என்பவர் செய்யும் தவறுகள். மற்ற மூடப் பழக்க வழக்கங்கள் அறிவு குறைந்த மக்கள் இருளில் கிடந்து உழலுவதால் ஏற்பட்டவை; ஆனால், மேற்கண்டவை அறிவைத் தன்னலத்திற்குப் பயன்படுத்துவோர் போற்றும் பழக்கங்கள். அதனால் மற்ற மூடப் பழக்க வழக்கங்களைவிட, நாத்திகப் பேச்சைவிட, கோயிலுக்குள்ளேயே கையாளப்படும் மேற்கண்ட நாத்திகப் பழக்கங்கள் மிகப் பொல்லாதவை ; இவற்றைச் சீர்திருத்துவது முதல் கடமையாக வேண்டும்.